வெளியீடு 3.

கக அ 196

நல்லை வெண்பா.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல. 7-57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

சேனாதிராய முதலியார்

இயற்றியது.

குறிப்புரையுடன்.

விலை அணா 8] [Price 8 Annas.

To C. Balasingham, Esq; C.C.S.
from [illegible]
5th July 1944

841.6 SL/RR
நப 2507

உ

சிவமயம்.

முருகன் றுணை.

யாழ்ப்பாணத்து இருபாலை
வித்துவசிரோமணி
சேனாதிராய முதலியார்
இயற்றிய

நல்லை வெண்பா.

யாழ்ப்பாணத்துப் புலோலி
வித்துவான்
திரு. க. முருகேசபிள்ளை யவர்கள்
எழுதிய குறிப்புரையுடன்.

2507

THE JAFFNA SENTHAMIL
PATHIPPAKAM WORKS
PULOLY SOUTH, POINT PEDRO,
JAFFNA, CEYLON.

All Rights Reserved.

1942.

விலை அணா 8.] [Price 8 Annas.

சிவமயம்.

முகவுரை.

நல்லை வெண்பா என்னும் இந்நூல் யாழ்ப்பாணத்து இருபாலை வித்துவசிரோமணி சேனாதிராய முதலியார் இயற்றிய பிரபந்தங்களுள் ஒன்று. ஈழமண்டலத்தில் மிகப் பிரசித்தி பெற்ற சுப்பிரமணியத் தலங்களுள் ஒன்றாகிய நல்லூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் மஹா வரப்பிரசாதியாய் எழுந்தருளி இருக்கும் முருகக்கடவுள் மீது வெண்பா யாப்பினால் இயன்றமையால் இந்நூல் நல்லை வெண்பா எனப்பட்டது. நல்லூர் என்பதன் மரூஉ நல்லை. வெண்பா என்பது அத்தகைய செய்யுட்களால் ஆய நூலுக்குக் கருவி ஆகுபெயர். இந்நூலில் காப்பும் கடையும் உளப்பட நூற்றிரண்டு செய்யுட்கள் உள்ளன. இந்நூல் 1878-ம் ஆண்டில் இந்நூலாசிரியர் மாணவருள் ஒருவராகிய தென்கோவை அம்பலவாண பண்டிதரால் அச்சியற்றி வெளியிடப்பட்டுள்ளது. இப் பழைய பிரதியைப் பெற்றுக் கொடுத்தவர் இந்நூலாசிரியர் தமையனார் வழித்தோன்றலும், கொழும்புப் பெரிய நீதிமன்றத்திலும், இடையிடையே உயர்தர நீதிமன்றத்திலும் தமிழ் முதலியாராகிச் சேவை புரிந்தவருமாகிய S. K. விசுவநாதரவர்கள் தம்பியார் திரு. சுப்பிரமணியமவர்களாவர். இந்நூற் செய்யுட்களுள்ளே சில டல மதுரைச்சங்க மாசிக பத்திரமாகிய "செந்தமிழ்" முதலிய பஞ்சிகைகளிலும் சுருக்கமான குறிப்புரையோடு வெளிவந்துள்ளன. இந்நூலைப் பன்முறை படித்து ஆராய்ந்த போது, இது கற்போர்க்கு எளிதின் உணரமுடியாத அருந்தொடரும் சொற்பொருளும் மிக மலிந்து, யமகதிரிபுகளாகிய சொல்லணிகளும் சிலேடை முதலிய பொருளணிகளும் நிரம்பியிருக்கப் பெற்றதோர் அரிய நூலாகப் புலப்பட்டது.

இந்நூல் கலைசைச் சிலேடை வெண்பா முதலியனவாகத் தற்காலம் வழங்கும் நூல்கள் போல ஒரேவகையாக அமையவில்லை. சிலேடை வெண்பாச் செய்யுட்களில் இரண்டாம் அடிகளே சிலேடைப் பொருள் பயந்துநிற்க, மூன்றும் நான்காம் அடிகள் யமகதிரிபுகளாகி அமைந்துள்ளன. இந்நூலிலே சில செய்யுட்களில் முதலாம்அடியும், சிலவற்றில் இரண்டாமடியும் சிலேடைப் பொருள் பயந்து நிற்க, மூன்றும் நான்காம் அடிகள் யமகதிரிபுகளாகி அமைந்துள்ளன. சில செய்யுட்களில் இரண்டாம் அடிகளில் இரண்டுக்கு மேற்பட்ட சிலேடைப் பொருளும் அமைந்துள்ளன. சில செய்யுட்களில் முதலாம் இரண்டாம் அடிகள் ஒருவகையான யமகமாகவும், மூன்றும் நான்காமடிகள்மற்றொரு வகையான யமகமாகவும் அமைந்துள்ளன. விநாயகர் சிவன் உமை விஷ்ணு பிரமா முதலிய தெய்வங்களையும் சூரியன் சந்திரன் தேவருலகம் ஆகாயம் பூமி மேரு இமயம் கடல் செந்தமிழ் முதலியவற்றையும் சிலேடை வகையால் நல்லூருக்கு உவமையாகக் கூறும் செய்யுட்கள் பொருளுணர்ச்சியோடு படிப்போர்க்கு மிக்க உவகையை ஊட்டுவனவாகும். புராண வரலாறுகளும் பிற சில அரிய உண்மைகளும் இடையிடையே சுருங்க உரைக்கப்பட்டுள்ளன. இந்நூலிற் காணப்படும் சொற்களும் சொற்றொடர்களும் அரும்பொருளும் நூலாசிரியரது சொற்பொருளுணர்ச்சி வன்மையையும் அறிவாற்றல்களையும் கவித்துவத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. நல்லூர் வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை யவர்களும்,

‘‘தென்கோவை யென்னும் சீர்சால் நகர்வாழ்
மேழிக் கொடியோர் வாழ்வுபெற் றோங்க
அவதரித்திட்ட அருந்தமிழ்க் கவிஞனும்
ஆறு வியல்பிற் சேநாதி ராய
முதலியும்..” என

இந்நூலாசிரியர் அறிவாற்றல்களையும் கவித்துவத்தையும் பாராட்டிக் கூறியமை காண்க. [இந்நூலாசிரியர் மணம்

புரிந்ததும் அவர் புத்திர பௌத்திரர்கள் பல சிறப்புக்களோடு வாழ்ந்ததும் இருபாலையோடு தொடர்புடையதாய் அதற்கு அடுத்த ஊராகிய தென்கோவை (தெற்குக் கோப்பாய்) யாதலால், ‘‘தென்கோவை யென்னுஞ் சீர்சால் நகர்வாழ் மேழிக் கொடியோர் வாழ்வு பெற் றோங்க’’ என்று கூறப்பட்டது.]

யமகதிரிபுகளும் சிலேடைப் பொருளும் மலிந்த இது போன்ற நூல்களை நன்கு பயில்வோர்க்கு இலக்கியங்களிலுள்ள சொற்கள் சொற்றொடர்களின் முட்டறுத்துப் பொருள் காணுதல் மிக எளிதாகும்.

தமிழறிவு குன்றிய அக்காலத்தில் பலர்க்கும் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்பித்துச் செந்தமிழணங்கு நடம்புரிதற்குரிய இடம் யாழ்ப்பாணம் என்று கூறும்படி செய்து வைத்த புலவர் சிகாமணியும் பரோபகாரப் பண்பினருமாகிய இப்பெரியார் இயற்றிய இந்நூல் அழிந்துபடாது பலர்க்கும் பயனுடையதாய் நிலவுதல் வேண்டும் என்னும் ஆராமையால் உந்தப்பட்டு, எமது புத்திக்குப் புலப்பட்டவாறு எழுதிய இக்குறிப்புரையோடு, இதனை வெளிப்படுத்தினும். எமது புத்திக்குப் புலப்படாதவைகளை அறிஞர் தயைகூர்ந்து தெரிவிப்பாராயின் அவை நன்றியறிதலோடு ஏற்று இரண்டாம் பதிப்பில் ஆராய்ந்து வெளியிடப்படும்.

இக்குறிப்புரையை எழுதுதற்கண் இன்றியமையாத் துணை புரிந்த இந்நூலாசிரியர் வழித்தோன்றலாகிய பண்டிதர் தென்கோவை ச. கந்தையபிள்ளை யவர்கள் பண்பும், இக்குறிப்புரையை உவகையோடு பெற்றுப் பார்வையிட்டுச் சில பல திருத்தங்களுங் காட்டியுதவிய திராவிட கலாநிதி, புன்னையம்பதி வித்துவான் ப்ரஹ்மஸ்ரீ. சி. கணேசையர் அவர்கள் பண்பும், இந்நூல் வெளியீட்டின்கண் மிக்க ஆர்வமுடையவராய், தமது பலதுறைப்பாற்பட்ட முயற்சிகளுக்கு

இடையே இந்நூல் அச்சுத்தாள்களைப் பார்வையிட்டுக் குறிப்புரையில் இன்றியமையாத பல திருத்தங்கள் காட்டியுதவிய பிரதம தமிழ் வித்தியாதரிசியும், திரிபாஷா விற்பன்னரும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி காரணமாக ஓவாது உழைக்கும் பரோபகாரியுமாகிய ப்ரஹ்மஸ்ரீ தி சதாசிவஐயர் அவர்கள் பண்பும் எம்மாலும், இந்நூலைப் படிப்போர் யாவராலும் என்றும் பாராட்டற்குரியனவேயாகும்.

இந்நூலாசிரியர் தமையனார் வழித்தோன்றலும், வடமாகாண அரசினர் பிரதம வைத்தியராகி இருந்து உபகார வேதனம் பெறுபவரும், சமாதான நீதிபதியும், சற்குண சீலருமாகிய டக்டர் திரு. S. சுப்பிரமணியம் (J. P.) அவர்களும், இந்நூலாசிரியர் வழித்தோன்றலும், இருபாலைத் தம்பு என்னும் பெயரால் பிரசித்தியாக வழங்கப்பெற்ற பிரபுவும் வள்ளலுமாகிய கந்தப்பிள்ளை சிவசுப்பிரமணியபிள்ளையவர்களுக்கு இருவகையாலும் மருகராகிய திரு. மு. சேனாதிராயர் அவர்களும், இந்நூலாசிரியர் வழித்தோன்றலும், நில அளவைத் தொழிலாளருமாகிய (Surveyor) திரு. வி. சண்முகலிங்க மவர்களும், இந்நூலாசிரியர் தமையனார் வழித்தோன்றலும், கொழும்பு அரசினர் தேயிலையாட்சி நிலையத்தில் உபதனாதிபதியாய் இருப்பவருமாகிய திரு. நா. சேனாதிராசா அவர்களும், இந்நூலாசிரியர் தமையனார் வழித்தோன்றலும், இருபாலை வன்னியசேகரர் அவர்கள் புதல்வரும், வழக்கறிஞரு (Proctor S C. & Notary) மாகிய தென்கோவை திரு. முத்துக்குமாரசுவாமி யவர்களும் இந்நூலை அச்சியற்றி வெளியிடுதற்கேற்ற பணத் தொகையை உரிமை பற்றிய உவகையோடு உதவியுள்ளார்கள். இத்தொகையுள்ளே பெரும்பாகத்தை உதவியவர் பரோபகாரப் பண்பினராகிய ஷெ டக்டர் அவர்களேயாவர். இவர் யாவர் நன்றியும் எம்மால் என்றும் கொண்டாடப்படுவனவாகுக. இவர் யாவரும் எல்லா நலமும் பெற்று நீடு வாழும்வண்ணம் நல்லூர் முருகக் கடவுள் திருவருள் பாலிப்பாராக.

இந்நூலைக் குறிப்புரையோடு வெளியிடுதற்குத் தோன்றாத் துணையாய் நின்று பேரருள் பாலித்த நல்லூர் முருகப்பெருமான் திருவடித்தாமரைகளை மனமொழி மெய்களால் நினைந்து வழுத்தி வணங்குகின்றோம்.

உலகுபுகழ் கருஞாயி றொருகோடி யுதித்தனபே
ரொளியி னோங்கி
இலகுதிரு முகமாறுங் கருணைபொழி திருவிழியு
மீராறு தோளும்
குலவுவடி நெடுவேலு நல்லைநகர்க் குமரேசன்
கோல மாண்பும்
நிலவுதிரு வடிமலருந் தொழுதுமல மாயைவினை
நீங்கி வாழ்வாம்.

இங்ஙனம்,
க. முருகேசபிள்ளை.

தென்கோவை யாழ்ப்பாணம்
விஷு௵ தை௴
22—1—1942

நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய சேனாதிராய முதலியார், யாழ்ப்பாணத்து இருபாலை என்னும் ஊரில், சைவ வேளாண் மரபினரும், சல்வி செல்வங்களால் சிறப்புற்று விளங்கியவருமாகிய நெல்லைநாத முதலியார் என்பவருக்கு அருந்தவப் புதல்வாய் எறக்குறைய இற்றைக்கு நூற்றெழுபது ஆண்டுகளின்முன் தோன்றியவர். வடதேயப்புலவர் ஒருவர் வண்ணைச் சிவன்கோவில் மண்டபத்தில் அரங்கேற்றிய பிரபந்தத்தை ஒரே முறையில் கேட்டவாறே பழம்பாடல் எனக் கூறி ஒப்புவித்த அவதானத் திறமைபற்றி நெல்லைநாத பண்டிதர் ஏகசந்தக்கிராகி எனப் போற்றப்பட்டனர் என்ப. சேனாதிராய முதலியாரும் அவதானத் திறமையில் மிக்கவராதலால் இச்சம்பவத்தை இவர்மீதேற்றி இவரையே ஏகசந்தக்கிராகி எனப் போற்றினாருமுளர். (பாவலர் சரித்திர தீபகம்).

சேனாதிராய முதலியார் தமது தந்தையாரையும், தமிழிலும் சமஸ்கிருதத்திலும் தக்க பாண்டித்தியமுடைய கனக சபாபதி யோகி என்னும் இயற்பெயர் கொண்ட கூழங்கைத்தம்பிரானையும் ஆசிரியராகக் கொண்டு தமிழ் இலக்கண இலககியங்களையும் சமயசாத்திரங்களையும் முறையாகக் கற்றனர். கூழங்கைத் தம்பிரானுக்குப் பெருந்தொகைப் பொருள் கொடுத்து நன்னூல் என்னும் இலக்கணநூலை நாற்பது நாளையிற் கற்றுத் தெளிந்தனரென இவரது ஞாபக சக்தியையும் நுண்மதியையும் பலரும் பாராட்டிக் கூறினர். கூழங்கைத் தம்பிரான் தமது மாணவர்களுக்கு ஒரு விஷயத்தை ஒருமுறையேயன்றி இரண்டாம்முறை கூறாத இயல்புடையவர். சேனாதிராய முதலியார் ஏகசந்தக்கிராகி யாதலால், இவர் ஒருவரே ஷை தம்பிரானிடம் கற்றவர்களுள்ளே சிறந்த புலமை உடையவராயினர்.

"......................தேசிகோத் தமனாய்ச்
சான்ற கனக சபாபதி யோகியாம்
போன்றவர் பிறரிலாப் புண்ணிய னடிதழீஇ
ஒவ்வொரு நூலையு மொவ்வொரு முறையினாய்
அவ்வவர் சொற்பொருளனைத்தையு மகத்தமைத்
தூழ்படுதிறமிதென் றுலக முவப்பக்
காழ்படு கடுமையிற் கற்றுநிறைந்த
திதமுறு நுண்மதிச் சேனாதிராய
முதலி..."

என்னும் சிவசம்புப்புலவர் கூற்றாலும் சேனாதிராயமுதலியாரது அவதானத்திறனும் இவர் ஆசிரியர் இடத்துத் தமிழ் நூல்களை அரிதிற் கற்றுணர்ந்து புலமை நிரம்பப் பெற்றமையும் நன்று புலனாதல் கண்டுகொள்க. இவர் முக்கியமாகத் தமிழ் இலக்கண நூல்களிலும், இலக்கியங்களிலும், சமய சாத்திரங்களிலும் சிறந்த அறிவு படைத்தவராகி, பாடும் வன்மையும் பண்புறப் பெற்றமையோடு, போர்த்துக்கீயம் ஒல்லாந்தம் ஆங்கிலம் என்னும் மொழிகளிலும் வல்லுநராய், நல்லொழுக்கமும் சைவசீலமும் சாந்தகுணமும் உடையவராய் விளங்கினர்.

யாழ்ப்பாண நீதிமன்றத்தில், முதலில், சில்காலம் மொழிபெயர்ப்பு முதலியாராகி (துவிபாஷிகர்)ச் சேவைபுரிந்தனர். பின்பு அதனை விடுத்து நியாயநூல்களைக்கற்று வழக்கறிஞராகி (Advocate)ப் பலகாலஞ் சேவை புரிந்தனர். அக்காலத்து நீதிமன்றம் மாகாண நீதிமன்றம் (Provincial Court) என வழங்கப்பட்டது. இவர் காலத்தில் இவரே சிறந்த நியாயவாதியாகி விளங்கினாராதலால், யாழ்ப்பாணத்தும் பிற இடங்களிலும் உள்ளார் பலர் சிக்கலான தமது வழக்குகள் பலவற்றையும் இவரைக்கொண்டே நடாத்துவிப்பாராயினர். இதனாலும் இவர் புகழ் மலைவிளக்குப்போல யாண்டும் வயங்குவதாயிற்று. ஈற்றில் சிலகாலம் ஷை நீதி

மன்றத்தலைவராகியும் (Judge) சேவை புரிந்தனர். ஒருபாற் கோடாது மதிப்பொலிவோடு நிகழ்த்தப்பட்ட இவரது வழக்குத் தீர்ப்புக்களை முதியோர் பலர் பாராட்டிக் கூறினர். அரசாங்கத்தவரும் இவர்பால் மிக்க நட்பும் மதிப்பும் உடையராய் தேசநன்மைக்குரிய காரியங்கள் யாவற்றிலும் இவரையே சிறந்த உசாத்துணைவராகக் கொள்வாராயினர். 1835-ம் ஆண்டில் இம்மாகாண நீதிமன்றம் இப்பொழுது "பெரியகோடு" (District Court) என வழங்கும் நீதிமன்றமாக மாற்றமடைவதாயிற்று. பின்பு இவர் சிலகாலம் பஞ்சாயத்து மன்றத்தலைவராகியும், கோவைக் கோயிற்பற்று மணியகாராராகியும் சேவை புரிந்தனர் என்ப.

இவ்வாறு அதிகாரபுருடராய் விளங்கிய இவர், தமது வாணாட்களுட் பெரும்பாகத்தைப் பொதுசன சேவையிற் கழிக்க நேர்ந்ததாயினும், தமிழ் வளர்ச்சிக்குரிய அருந்தொண்டினை ஆற்றுதலையும் பெருங்கடனாகக் கொண்டவரேயாவர். இவரது அரச சேவைக்குரிய ரோம் ஒழிந்த ஏனைய நேரம் எல்லாம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பிறர்க்குக் கற்பித்தலிலேயே கழிவனவாயின. அக்காலத்தில், நில்வளம் பெரிது வாய்ந்த செல்வமும் இடம் பொருள் ஏவல்களும் செவ்வனம் அமையப்பெற்ற பிரபுகுல திலகராய்ப் புலவர் சிகாமணியாய்ப் பரோபகாரப் பண்பினராய் விளங்கியோர் இவரேயாதலால், உயரிய இலக்கண இலக்கிய நூல்களைக் கற்க விரும்பியோர் யாவரும் இவரிடஞ்சென்றே கற்கவேண்டியவராயினர். இவரோடு உடனிருந்து உண்டியும் உறையுளும் பெற்றுக் கற்றோரும் பலர்.

நல்லூர் மனப்புலி முதலியார் சரவணமுத்துப் புலவர், சம்பந்தப் புலவர், ஆறுமுகநாவலர், கார்த்திகேய ஐயர், காரைத்தீவுக் கார்த்திகேய ஐயர், நீர்வேலிப் பீதாம்பரப் புலவர், வல்லிபட்டித்துறை ஏகாம்பரப் புலவர், தென்கோவை அம்பலவாண பண்டிதர், கந்தரோடை நாகநாத

பண்டிதர் (அப்பாப்பிள்ளை) முதலியோர் இவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சமய சாத்திரங்களையும் முறையாகக் கற்றோராவர். அக்காலத்தில் இவரிடங் கல்லாதவரும் இடையிடையே நூல்களின் ஐயங்களை வினவித் தெளியாதவரும் இல்லையெனக் கூறுதல் இழுக்காகாது. இவர் காலத்தில் பல்வகையானும் நிரம்பிய இவர்போன்ற கல்வியறிவினர் யாழ்ப்பாணத்தில் எவரும் இல்லை என்பது மிகையன்று.

இவர் மாணவருள்ளே பலர் சிறந்த புலவர்களும் சைவானுஷ்டான சீலர்களுமாய்ப் பல பிரபந்தங்களை இயற்றியும், பலர்க்குக் கற்பித்தும், பல நூலுரைகளை எழுதியும், வெளியிட்டும், சைவப் பிரசங்கங்கள் புரிந்தும், தமிழும் சைவமுந் தழைத்து ஓங்கும் வண்ணம் சிறந்த தொண்டாற்றுவாராயினர். இவ் ஆசிரிய மாணவ பரம்பரையினராலேயே யாழ்ப்பாணத்தில் இலக்கண இலக்கியக் கல்வியும் சமய சாத்திர உணர்ச்சியும் பரம்புவனவாயின. யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்தில் சங்கவாயிலாக வளர்க்கப்பட்டுப் பிற்றைஞான்று பெரிதும் குன்றிய தமிழ் இலக்கண இலக்கியக் கல்வி பின்பு பெரும்பாலும் உயர்நிலை அடைதற்கு முக்கிய காரணராய் விளங்கியவர் சேனாதிராய முதலியாரே என்பது அறிஞர் யாவர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும். நீதிபதி கதிரைவேற்பிள்ளையவர்கள் தந்தையாரும், தமிழ்ப் புலவருமாய் விளங்கிய உடுப்பிட்டிக் குமாரசுவாமி முதலியார் கூறிய பின்வருஞ் செய்யுளும் இவ்வுண்மைக்கு உறு சான்றாதல் கண்டு கொள்க.

"நானா திராவிடமு நன்னிலக்க ணாறுறச்செய்
சேனாதி ராயனையோ செத்ததென்றீர்—வானாதி
பொன்னிலத்து முண்மை புகனா லுரைப்பதற்காய்
இந்நிலத்தை விட்டெடுத்த தே,"

என்பது அச்செய்யுள்.

[இது சேனாதிராய முதலியார் தேகவியோகத்தை அறிவிக்கச் சென்றான் ஒருவன் "சேனாதிராய முதலியார் செத்துப்போனார்" எனக்கூறியது கேட்டபோது ஷை புலவர் பாடியது என்ப. நாறு உறச் செய்தல்—விதைத்து வளர்த்தல். "உண்மைபுகல் நூல்" என்பது சமயசாத்திரங்களையும் உளப்படுத்தி நின்றது.]

இவர் வழக்கறிஞராகிச் சேவைபுரிந்த காலத்தில் இவரது தொழில் நிலயம் (ஆபீஸ்) நல்லூர் முருகவேள் திருத்தளிக்கு மிக்க அணிமையில் இருந்தது. ஷை கோவிலுக்கு நாடோறும் சென்று சுவாமிதரிசனஞ் செய்வது இவர் வழக்கம். இவ் ஆலய சம்பந்தமான காரியங்களை நடாத்துதற்கண்ணும் ஷை ஆலய முகாமைக்காரருக்கு இவரே சிறந்த உசாத்துணைவராகி இருந்தனர். மற்றைய பல ஆலய சம்பந்தமான விஷயங்களுக்கும், சமய சம்பந்தமான விஷயங்களுக்கும அக்காலத்தில் இவர் துணையே இன்றியமையாததாய் எவ்விஷயத்தும் இவர் கூற்றே முடிபுரையாகி யாவராலும் கைக்கொள்ளப்பட்டது என்ப. தமது ஜெனன ஊராகிய இருபாலையிலும் இவர் விநாயகராலயம் ஒன்றனை நிறுவி அதற்குரிய நிபந்தங்களும் அமைத்துள்ளனர். சமய சம்பந்தமாகவும் அக்காலத்தில் பலதிருத்தங்கள் செய்தவரும் இவரே.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில், முதலில், புராணப்பிரசங்கம் செய்து யாவருக்கும் வழிகாட்டியாய் இருந்தவரும் சேனாதிராய முதலியாரேயாவர். இவர்பின் இவரது பிரதம மாணவராகிய சரவணமுத்துப் புலவராலும் பின்பு இவ் இருவர்க்கும் மாணவராகிய ஆறுமுகநாவலராலும், பின்பு நாவலரவர்கள் மருகரும் மாணவருமாகிய பொன்னம்பலபிள்ளையவர்களாலும் அத்தகைய புராணப்பிரசங்கம் நடைபெற்று வருவதாயிற்று. வேறுசில ஆலயங்களிலும் ஒவ்வோர் அமயங்களில் சேனாதிராய முதலியார் புராணப் பிரசங்கங்கள் நிகழ்த்தியதுண்டு.

சேனாதிராய முதலியார் நல்லூர்ச் சுப்பிரமணியக் கடவுளிடத்து மிக்க பக்திவாய்ந்தவராதலால் அப்பெருமான் மீது நல்லைவெண்பா, நல்லைத்திரிபந்தாதி. நல்லைக்குறவஞ்சி, நல்லைக்கலிவெண்பா, ஊஞ்சற்பதிகம். என்னும் பிரபந்தங்களை இயற்றியமையோடு பல தனிச்செய்யுட்களையும் இயற்றியுள்ளனர். வண்ணை நீராவி விநாயகர்மீது யமகத் தொடையமைந்த ஒரு கலிவெண்பாவும், மாவைச்சுப்பிரமணியக் கடவுள்மீது ஓர் ஊஞ்சற்பதிகமும், பிறசில ஊஞ்சற்பதிகங்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் நல்லை வெண்பாவும் நீராவிக்கலிவெண்பாவும் முன்னர் அச்சிடப்பட்டுள்ளன. நல்லைத்திரிபந்தாதி மிகச்சிறந்தநூல் எனவும், தென் கோவையில் பலகாலம் தமிழ் ஆசிரியராய் வதிந்து தொண்டாற்றிய சுன்னாகம் முருகேசபண்டிதரால் பலர்க்கும் படிப்பிக்கப்பட்டதெனவுங் கூறுப. ஆயினும் அந்நூலுள் ஒரு செய்யுளாவது இப்பொழுது கிடைப்பது அரிதாயிற்று.

நல்லைக்குறவஞ்சி யமக சிலேடைகளும், வினோதார்த்தங்களும் மலிந்த சிறந்த பிரபந்தம் எனப் பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. ஆயினும் அந்நூலுள்ளும் இரண்டொரு செய்யுளே ஒழிய ஏனைய அழிந்தொழிந்தன. அவற்றுள் ஒன்று இங்கே காட்டப்படுகின்றது.

"திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற்பெருமானார்
இருவாலைக் குபத்தியரோ டின்பமுற்றாரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றாராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்கவம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்கவம்மானை."

[இச்செய்யுளில் இருவாலை குயத்தியர் சட்டிகுடம் சாறு என்பன தொனிப் பொருளமைந்துள்ளன. இருவாலைக் குயத்தியர்—இளமை திகழும் தனங்களையுடைய தெய்வநாயகி, வள்ளிநாயகி என்னும் சத்தியர் இருவர். வாலை—

இளம்பருவம். குயம்—தனம். இருவாலை என்னும் ஊரிலுள்ள குயப்பெண்கள். சட்டி—சட்டி திதி—கந்த சட்டி என்னும் விரதநாள்; மட்பாத்திரம். குடம்—பூசநாள் (தைப்பூசம்), மட்குடம். சாறுவைத்தல்—திருவிழாக் கொண்டாடுதல்; குழம்பு சமைத்தல். சாறு—விழா; குழம்பு.

பின்வருஞ் செய்யுளையும் குறவஞ்சிச் செய்யுள் என்பது பாவலர் சரித்திர தீபகம். தனிச்செய்யுள் என்பர் பிறர்.

“கொடிவளரு மணிமாடக் கோபுரஞ்சூழ் நல்லூரிற்
குமரமூர்த்தி
அடியருளத் திருளகல வமரர்முக மலரவர வணிமா
னீன்ற
கொடியினொடும் பிடியினொடுங் குலவுமுடம் பிடி
யொடுங்கோ தண்ட மேந்தி
மிடியகல மயிலேறி விடியவந்த தினகரன்போல்
மேவினானே.

[இச் செய்யுளில் அனுப்பிராசநயமும் சொற்சுவை பொருட்சுவைகளும் மலிந்திருத்தல் காண்க. மானீன்ற கொடி—வள்ளிநாயகி. பிடி—தெய்வயானையம்மை. உடம்பிடி - வேற்படை. கோதண்டம்—வில். மிடி—துன்பம். தினகரன்—சூரியன்.]

நல்லைக்கலி வெண்பாவும் யமகத்தொடையமைந்து அரும் பொருள் பொதிந்து படிப்போர் கேட்போர்பால் பத்திமை விளைக்கும் பான்மையதாய் உள்ளது எனவும் மார்கழித் திருவாதிரை நாளில் ஷை ஆலயத்து வடபால் வீதியில் முருகவேள் திருவுலாப் போதருங்கால் ஓதப்பட்டு வருகின்றது எனவும் கூறுப. இவை விரைவில் அச்சியற்றி வெளியிடப்படலாம் என்பது எமது துணிபு.

யாழ்ப்பாணத்து அமெரிக்கன் மிஷன் பகுதியினரால் அச்சிடப்பட்ட தமிழ் அகராதியைத் தொகுத்த புலவர் குழு

வினருள்ளே தலைவராய் இருந்தவரும் சேனாதிராய முதலியாரேயாவர். இவ்வுண்மை,

“தெல்லியம்பதியில வரு நெல்லைநாதக்குரிசில் செய்தவ
பெறவுதித்த, சேனாதிராசகலை ஞானதிராசனும் ....”

என அவ் அகராதிச் சிறப்புப்பாயிர முதற்கவியில் இவர் போற்றப்பட்டமையாலும் அறியத்தகும்.

[நெல்லைநாதரது மூதாதையர் தெல்லிப்பளை யென்னும் ஊரிலிருந்து இருபாலையில் வந்து மண்ணாடுகொண்ட முதலி மரபில் மணம் புரிந்து வாழ்ந்தவராதலால், அவ் உரிமைபற்றி ‘தெல்லியம்பதியில் வரு நெல்லைநாதக்குரிசில்” என்று கூறப்பட்டது.]

வீரமாமுனிவர் எனப் பெயரிய கத்தோலிக்க குரவர் தொகுத்த சதுரகராதிக்குப்பின் தமிழிற் தொகுக்கப்பட்ட அகராதி இதுவே என்ப. நிகண்டுகளைக் கற்றும் பிறர் வாயிலாகக் கேட்டும் சொற்களின் பொருளை அரிதின் அறியநின்ற அக்காலத்தில், இவ்வகராதியால் தமிழுலகம் அடைந்த பயன் மிகப் பெரிதே என்பதனை ஈண்டு விரித்துரைத்தல் மிகை. பிற்காலத்தில் இவ் அகராதியே பலராலும் பலவாறு பெருக்கி அச்சிடப்படுவதாயிற்று.

சேனாதிராய முதலியார் தென் கோவையில் இருந்த தனவந்தராகிய பஞ்சாயுத முதலியார் என்பவர் மகளை மணம் புரிந்து இல்லறம் நடாத்தி ஐவகைவேள்வியும் அன்புடனாற்றி, இராமலிங்கபிள்ளை என்னும் புதல்வர் ஒருவரையும், பர்வதவர்த்தனி என்னும் புதல்வியர் ஒருவரையும் பெற்றனர். இராமலிங்கபிள்ளை பிரபுவும் தமிழ் அபிமானியும் அக்கிரகண்ணியருமாய் விளங்கியவர். ஆறுமுகநாவலர் வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் முதலிற் சைவப்பிரசங்கம் நிகழ்த்திய கூட்டத்தில் தலைவராய் இருந்து அதனை நடாத்தியவர் இவரே. சேனாதிராய முதலியார் மகளும் தமிழறிவும் சைவசீலமும் உடையவர். மகளை விவாகஞ் செய்தவர் இருபாலை மண்ணாடுகொண்ட முதலிமரபில் ஆண்வழியினரும், தனவந்தருமாகிய இராமநாதபிள்ளை என்பவர். மக

ளுடைய மகன் கந்தர்த்தம்பி என வழங்கப்பட்ட பிரபுவும் வள்ளலுமாகிய கந்தப்பிள்ளை என்பவர். கந்தப்பிள்ளை தமது மாதாமஹராகிய சேனாதிராய முதலியாரிடம் தமிழ் நூல்களைக் கற்றுச் சைவானுஷ்டான சீலராய்த் தருமவானாகி விளங்கியவர். [மாதாமஹர் - தாயாருக்குத் தந்தையர்.] ஆறுமுகநாவலர் தாம் சேனாதிராயமுதலியாரிடம் தமிழ் நூல்களைக் கற்றுணர்ந்த உரிமை காரணமாகத் தென்கோவையில் நிறுவிய சைவப்பிரகாசவித்தியாசாலை அமைப்புக்குரிய பொருளை உபகரித்தமையோடு, நாவலர் அவர்களுக்குப் பின்னை வித்தியாசாலையைச் சிலகாலம் தமதுபொறுப்பில் நடாத்தியும், தமது இல்லத்தும் தமிழாசிரியர்களைத் தமது ஆதரவில் வைத்துப் பலர்க்கும் தமிழறிவை ஊட்டியும், பிறவாறும் தமது மாதாமஹரது அருமை பெருமைகளை அனுசரித்து ஒழுகியவர் கந்தப்பிள்ளையவர்களேயாவர்.

சேனாதிராய முதலியார் இலக்கண இலக்கியங்களும் சாத்திரங்களுமாயுள்ள ஏட்டுப்பிரதிகள் பலவற்றைத் தொகுத்து வைத்திருந்தனர். இவற்றுள் இவர் காலத்தில் இவர் மாணவர் பலர்க்குப் பயன்பட்டன ஒழிய, இவர் தௌஹித்திரர் கந்தப்பிள்ளை அவர்கள் பாதுகாவலில் இருந்த எஞ்சிய பிரதிகளுள்ளே பல பிரதிகள் ஆறுமுகநாவலர் அச்சியற்றி வெளியிடுதற்கு உரியவாயின. சில பிரதிகள் நீதிபதி கதிரைவேற்பிள்ளையவர்களால் பெற்று லண்டன் நகரத்துள்ள கையெழுத்துப் புத்தகசாலைக்கு அனுப்பப்பட்டன. [தௌஹித்திரர் - துஹித்திரியின் புத்திரர். துஹித்திரி - மகள்.]

மேலே கூறியவாறு பொதுவாகத் தேசத்துக்கும், சிறப்பாகத் தமிழ்மொழிக்கும் சமயத்துக்கும் தமது இறுதிக்காலம் வரையும் இடையீடின்றி அரும்பெருந் தொண்டினை ஆற்றுதலையே பெருங் கடனாகக்கொண்டு, பயன்மரமுள்ளூர்ப்பழுத்தனைய பண்பினராய் வாழ்ந்த சேனாதிராய முதலியார் என்னும் பெரியார் 1840-ம் ஆண்டளவில் தேகவியோகம் அடைந்தனர் என்ப.

சுபம்.

சிறப்புப்பாயிரம்.

நல்லூர் ப்ரஹ்மஸ்ரீ அப்புக்குட்டிக் குருக்கள் சொல்லியது.

நேரிசை வெண்பா.

சேனா திராயன் றிறம் புகழுஞ் செல்வமிகுஞ்
சேனா திராயன்றன் சீர்க்கவிதை — சேய்நாளு
முற்றே புலவ ருரைகவிக்கு நன்மணியாப்
பெற்றே விளங்கப் பெறும்.

இருபாலை ஸ்ரீமாந். அமரசிங்கமுதலியார் சொல்லியது.

கட்டளைக் கலித்துறை.

பொற்கிர மாவினன் சேனாள் புலவன் புலவருட
னற்கீர னாதன் போற்றுநல் லூர்ப்புல வன்குழைகட்
கிற்கீர வாரி யமுதுசெய் நாறுவெண் பாவிசைத்தான்
சொற்கீத நற்றமிழ்ச் சேனாதி ராய னெனுந்துய்யனே.

தெல்லிப்பழை ராவ்பகதூர்
ஸ்ரீமாந். சி. வை. தாமோதரம்பிள்ளை சொல்லியது.

அறுசீ ராசிரிய விருத்தம்.

உவர்நீருண் டிடுமேக மொருசுவைநீ ருதவியென
வோத முண்ட
தவநீடு முனிவரன்செந் தமிழ்மதுரக் கடலளித்தான்
றமிழாந் துய்ய
பவநீர்முற் றினிதருந்திப் பாவலர்க்கோர் நல்லூர்வெண்
பாவாந் திவ்ய
நவநீத வமிழ்தினைச்சே னாதிரா யன்றிரட்டி
நல்கி னானால்.

பிழை திருத்தம்.

பக்	வரி	பிழை	திருத்தம்.
6	19	கலையார	கலையார்
8	28	குவலை	குவல
11	7	விகாரம்	விகாரம்.
13	27	செய்யின்னந்தியங்கி	செய்-யினனந்தியங்கி
21	15	[நவ்வியன்]	நவ்வியன்
27	11	சிலேடே.	சிலேடை.
,,	13	மிகுதி	மிகுதி.
38	13	அடைகிற	அடைகிற.
,,	17	யாவற்றையும்	யாவற்றையும்.
40	18	சிரிப்பினால்	சிரிப்பாகிய நிலவினால்
42	16	தழை	தளை
44	18	ஆர்வம	ஆர்வம்
46	20	கனனன்	கன்னன்
49	19	யாளரும்	யாளரும்.

உ

கணபதிதுணை

நல்லை வெண்பா.

காப்பு

கந்தவேள் வேன்முருகன் காங்கேயன் காதலித்து
வந்த நல்லூர் வெண்பா வகுப்பதற்குச் — சந்த
வனகவள வாரணமுன் னாங்குடிலை மேவுங்
கனகவள வாரணமே காப்பு.

(குறிப்புரை): கந்தவேள் - கந்தனாகிய வேள். வேள் - யாவராலும் விரும்பி வழிபடுதற்குரியவன். வேல்முருகன் - வேலாயுதத்தை யுடைய முருகக் கடவுள். காங்கேயன் - கங்கையின் புத்திரன். காதலித்து உவந்த - அடியார்க்கு அருள் புரிதலை விரும்பி உவகையோடு எழுந்தருளியிருக்கின்ற. நல்லூர் - யாழ்ப்பாணத்து நல்லூர் என்னுந் திவ்விய க்ஷேத்திரம். சந்தம் - இசை. அனகவள ஆரணமுன் ஆம்குடிலை மேவும் - பரிசுத்தமான பொருட்சிறப்புடைய வேதத்திற்கு அடிப்படையான பிரணவ பீடத்து வீற்றிருக்கின்ற. அனகம் - அமல ஒலியாகிய அருளொலி யென்னும் பொருளை யுடையது. கனகவள வாரணம் - பெரிய கவள உணவை யுடைய யானை முகம் போலும் திருமுகத்தை யுடைய விநாயகக் கடவுள். வாரணம் - ஆகுபெயர். பின்னிரண்டடிகள் திரிபு.

நூல்

பூமாது பூவினுளப் பொன்மலரென் றெண்ணிநித
நாமா துடன்வாழு நல்லூரே — தேமாது
பாலனய னத்தன் பரிந்தறியா நின்றவரன்
பாலனய னத்தன் பதி

(கு—ரை): பூமாது - இலக்குமி. பூவினுள் - பூமியில். பொன்மலர் - தாமரைமலர். ஸ்ரீதேவி வீற்றிருத்தலின் பொன்மலர் எனப்பட்டது. நிதம் - என்றும். ஸ்ரீதேவி - இலக்குமி. அகரச்சுட்டு ஸ்ரீதேவி என்றும் நீங்காது வீற்றிருக்கும் ஆகாசமாகிய கமலத்தை உணர்த்தி நின்றது. ஆகாசமே கமலம் என்பது சுருதி. ஆகாசம் - ஞானாகாசம். பூ இன் உளப் பொன்மலர் - பொலிவாகிய இனிய உள்ளமாகிய பொற்பூ எனினுமாம். அஃதாவது வாய்மையான செல்வமும் வாய்மையான கல்வியும் ஒருங்கே அமையப் பெற்ற பொற்பூபதிகளாகிய விமலதநுவுடைய மெய்யடியார் இருதய கமலம் என்பது. நாமாது - கலைமகள். நல்லூரில் செல்வர்களும் படிப்பாளிகளும் மிகப் பல்கியுள்ளன ரென்பது கருத்து. தேமாதுபாலன் - உமாதேவியாருக்குப் புதல்வர். தே - தெய்வத்தன்மை. அயன் - பிரமன். நத்தன் - திருமால். நந்து - சங்கு. அத்தன் எனப் பிரித்துப் பிரமனது பிதா எனப் பொருள் கூறினும் ஆம். பரிந்து அறியா - வருந்தித் தேடியும் அறியமுடியாது. அறியாது என்னும் வினையெச்சவீறு தொக்கது. அரன் பாலநயனத்தன் - சிவபிரானது நெற்றிக் கண்ணிடத்துத் தோன்றிய சுப்பிரமணியக் கடவுள். பாலம் - நெற்றி. பதி - இடம். நான்காமடியில் நகரம் யமகம் நோக்கி னகரமாகி நின்றது.

நகர னகரங்கள் ஒத்து நடத்தல், யமக திரிபுகளும் சிலேடைப் பொருளும் அமைந்த செய்யுட்களில் பெருவழக்கு. திருச்செந்தில் அந்தாதியில் 4, 5, 6, 9, 14, 22, 23, 27-ம் செய்யுட்களிலும் இந்நூலில் 17, 29, 35, 42-ம் செய்யுட்களிலும் பிறசிலநூல்களில் சில செய்யுட்களிலும் நகரனகர ஒற்றுமை நயம் காணப்படுகின்றது. பின்னிரண் டடிகள் யமகம். (க)

பொன்னுலக மன்ன புகழீழ மண்டலஞ் சேர்
நன்னகர நாகரிக நல்லூரே — முன்னிலகுங்
காற்படையான் பூத கணப்படையா னென்னையினி
மேற்படையான் மேவும் பதி.

(கு—ரை): பொன்னுலகம் - தேவர் உலகம். நகரம் இராசதானி என்னும் பொருட்டு. நல்நகர நாகரிக நல்லூர் என்றூர் தமிழ் அரசர் தமது தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த இடம ஆதலின். நாகரிகம் - கல்வி செல்வம் ஒழுக்கம் என்பனவற்றாலாய சீர்த்திருத்தம். கண்ணோட்டமுமாம். இலகுதல் - விளங்குதல். காற்படை - கோழி. "காலாயுதம் படைத்த கையோனே" என்றூர் பிறரும். பூதகணப்படையான் - பூதர் கூட்டங்களைச் சேனைகளாக உடையவர். இனிமேல் என்னைப் படையான் - இப்பிறவியின் பின் வேறு பிறவியில் என்னைப் புகுத்தாதவர். 3-ம் 4-ம் அடிகள் திரிபு. மேலும் இவ்வாறு வருவன கண்டுகொள்க. (உ)

சீர்விளங்குமெய்ப்பதிக்குஞ் செப்புகின்ற சொற்பெயரே
யூர்விளங்கு நாமமா நல்லூரே—யூர்விளங்கு
நன்கதிரை நாகத்தா னண்ணலரென் றஞ்சுவிக்குந்
தென்கதிரை நாகத்தான் சேர்வு.

(கு—ரை): சீர் - புகழ். செல்வம் கல்வி முதலியவற்றால் பெரும்புகழமைந்த ஊரை அக்காரணம் பற்றி நல்லூர் (விரும்பப்படும் ஊர்) எனச் சிறப்புறக்கிளந்துகூறுதல் உலக வழக்கு. அத்தகைய சிறப்புப் பெயரே இவ்வூருக்குக் காரண இடுகுறிப்பெயராய் அமைந்துள்ள தென்பது முதவிரண்டடிகளாற் போந்த பொருளாம். ஊர் - பரிவேடம். கதிர் - சூரிய சந்திரர். நாகத்தால் - தன்னிடத்துள்ள பாம்புகளால்; மலை முழைஞ்சுகளில் பாம்புகள் இருக்கும் வழக்குப்பற்றி இவ்வாறு கூறப்பட்டது. நண்ணலர் (ராகு கேதுக்களாகிய) பகைவர். கதிரை அஞ்சுவிக்கும் என இயையும். தென் கதிரை நாகத்தான் - (ஈழ மண்டலத்தில்) தென்றிசைக் கண்ணுள்ள கதிரைமலையில் எழுந்தருளியிருப்பவர். சேர்வு - இடம். (௩)

போற்றுமடி யார்பிறவிப் புன்மையிரு ணீக்குதலா
ணுற்றிசையும் வந்திறைஞ்சு நல்லூரே — யேற்ற
மருவலரை நேர்முடித்தான் வானவர்க்காய் நீப
மருவலரை நேர்முடித்தான் வாழ்வு.

(கு—ரை): புன்மை - அற்பம். இழிவுடைய தென்னும் பொருட்டு. இருள் - அஞ்ஞானம். ஏற்றல் - எதிர்த்தல். மருவலர் - பகைவர். நேர்முடித்தான் - எதிரேநின்று போர் புரிந்து அவருக்கு இறுதி விளைத்தவர். ஏற்ற மருவலரை வானவர்க்காய் நேர் முடித்தான் என இயையும். நீப மரு அலரை நேர் முடித்தான் - கடம்பினது மணம் பொருந்திய மலரைத் திருமுடியிலே அழகாகச் சூடினவர். வாழ்வு - எழுந்தருளியிருக்கும் இடம். 3-ம் 4-ம் அடிகள் யமகம். மேலும் இவ்வாறு வருவன கண்டு கொள்க. (௪)

ஆம்பன் முகவோடை யார்ந்தங் குசந்தழுவி
யோம்பொருளா மைங்கரனேர் நல்லூரே — பாம்பஞ்ச
வாடு மயிலா னமருலகு வாழவம
ராடு மயிலா னகம்

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் விநாயகருக்குஞ் சிலேடை. (நல்லூருக்கு) ஆம்பல் முகவோடை ஆர்ந்து - ஆம்பற் பூக்களைத் தம்மிடத்தே யுடைய குளங்கள் நிறையப்பெற்று. அம்குசம் - அழகிய தருப்பைப் புற்கள். (விநாயகருக்கு) ஆம்பல் முகம் - யானை முகம்போன்ற முகம். ஓடை - நெற்றிப் பட்டம். ஆர்தல் - பொருந்துதல். அங்குசம் - தோட்டி. ஓம்பொருள் - பிரணவப் பொருள். பாம்பு அஞ்ச ஆடும் மயிலான் - பாம்பு அஞ்சும்படி நடனம் புரியும் மயிலை வாகனமாக உடையவர். அமர் உலகு - தேவர் உலகு. அமரர் அமர் எனக்குறைந்து நின்றது. அமர் ஆடும் அயிலான் - போர்புரியும் வேலாயுதத்தை உடையவர். அகம் - இடம். பாம்பு அசுத்த மாயையும் மயில் பிரணவ சொரூபத்தையுங் குறிக்கும் என்பர். (௫)

கண்முளரி சங்கங் கவின்றுநா கம்பொருந்திப்
பெண்ணிடத்தன் போலும் பெருநல்லை — விண்ணிறமா
ரங்கத் திருந்தா ரமராழித்தா ரன்றுதமிழ்ச்
சங்கத் திருந்தார் தலம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்குஞ் சிவனுக்கும் சிலேடை. (நல்லூருக்கு) கள்முளரி - தேன் பொருந்திய தாமரை மலர். சங்கம் - சங்கு. அம் சாரியை. கவினுதல் - விளங்குதல். கவின்று கவின் என்னும் பண் படியாகப் பிறந்த வினையெச்சம். நாகம் - புன்னைமரம். (சிவனுக்கு) முளரிக்கண் - அக்கினிக் கண். சங்கம் - நெற்றி. கவின்று -

அழகுபெற்று. நாகம் - பாம்பு. பெண்ணிடத்தன் - உமாதேவியாரை வாமபாகத்திற் கொண்ட சிவன். விண்நிறம் ஆர் அங்கதிருந்தார் - மேகம் போன்ற கருநிறம்பொருந்திய சரீரத்தையுடைய பகைவராகிய அசுரர். அமர் அழித்தார் - போரில் தொலைத்தவர். அன்று - பண்டைக்காலம். தமிழ்ச் சங்கத்து இருந்தார் - மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தலைமைப் புலவராய் வீற்றிருந்தவர். "சங்கத் தமிழின் தலைமைப் புலவா தாலோ தாலே லோ" என்பது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ். தலம் - இடம். (சு)

பொன்னங்கலையார் விலோதனத்தான் மாதிரம்போய்த்
துன்னியசீ ராலுமைநேர் தூநல்லை—முன்னயனைத்
தாரகங்க டாவினன் றாபரக்கட் பீலியைச்சூர்
போரகங்க டாவினன் பூ.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் உமாதேவியாருக்குஞ் சிலேடை. (நல்லூருக்கு) பொன் அம் கலை ஆர் விலோதனத்தால் - பொன் இழைக்கப்பட்ட அழகிய சீலை பொருந்திய கொடிகளால். விலோதனம் - பதாகை - பெருங்கொடி. மாதிரம் - திசைகள், சீர் - புகழ். (உமாதேவியாருக்கு) பொன் - இலக்குமி. கலையார் கலைமகள். விலோதனம் - கண். "திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண்" என்பது திருவிளையாடற் புராணம். மாதிரம் - மலை; கைலை. துன்னுதல் - சிவபிரானது வாமபாகமாகப் பொருந்துதல். சீர - சிறப்பு. அயன் - பிரமன். தாரகம் கடாவினன் - பிரணவப் பொருளை வினவினவர். தாபரக்கண் பீலியை - உடலிலே கண்போன்ற புள்ளிகளையுடைய மயிலை. உடலக் கண்ணனாகிய இந்திரன் கொண்ட மயிலுருவமே சூர் போரகம் கடாவப்பட்டதாதலின், "தாபரக்கட்பீலி" என்பது குறிப்பால் அப்பொருளுந் தோன்ற நின்றது. சூர் போர் அகம் - சூரனோடு நிகழ்த்திய போரில்.

கடாவினன் - வாகனமாகக் கொண்டு செலுத்தியவர். பூ - இடம். (எ)

சசிதவள வானையும் தாமனையென் றெய்த
விசைகட்வுள் யானையன்ன நல்லை — நிசிசரர்கள்
பஞ்சா யுதவகன்போற் பற்றியுங்க வென்று தொட்ட
பஞ்சா யுதன்றன் பதி.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் தெய்வயானையம்மையாருக்குஞ் சிலேடை. சசிதவழ வானையும் தாமனை என்று எய்த இசை நல்லை - சந்திரன் தவழும்படி ஆகாயத்தையுங் கடந்துயர்ந்த மேல்மாடங்கள் சூரியனையும் அடையும்படி அமைந்த நல்லூர். தாவுதல் - கடத்தல். என்று - சூரியன்; உயர்வு நவிற்சியணி. (தெய்வயானை யம்மையாருக்கு) சசி - இந்திராணி தவள ஆனை - வெள்ளையானை. தாம் அன்னை என்றுஎய்த இசை - தாம் தாய்மார் என்று பொருந்தும்படி இணங்குதலால். கடவுள்யானை - தெய்வயானை அம்மை. தெய்வயானை அம்மையாருக்கு இந்திராணியும் ஐராவத யானையுந் தாயராயினர் என்பது கந்தபுராணம். அன்ன - ஒத்த. தவள தவழ என்பன ஒற்றுமை நயம். பவளம் பவழம் என வழங்குதல் போல. இலக்கியங்களில் இவ்வழக்கு உண்டென்பது சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகம் 162-ம் செய்யுளில் பவளம் பவழம் எனவும் கவளம் கவழமெனவும் வழங்கப்பட்டமையாலும் அறியப்படும். மேல்வருவனவற்றிற்கும் இதுவே விதியாகக் கண்டுகொள்க. நிசிசரர் - அசுரர். பஞ்சாய் - பஞ்சாகும்படி. வினையெச்சத்திரிபு. உதவகன் - (ஹுதவஹ:) அக்கினி. பஞ்சஆயுதன்-மழு சூலம் சக்கரம் தண்டு எழு (கந்தபு. சூரபன்பன் வதைப் படலம் - செ-261.) என்னும் ஐந்து ஆயுதங்களை யுடையவர். தன் சாரியை. பதி - இடம். (அ)

மாகுலவர் நம்பியுள மாதருடன் போற்றுதலாற்
கோகுலமா வல்லிநிகர் நல்லையே — கோகனக
வையற் கறைந்தா னருமறையி னுட்பொருளை
யையற் கறைந்தா னகம்.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் வள்ளிநாயகி யாருக்குஞ் சிலேடை. மாகுலவர் - உயர்குலத்தோர். நம்பி - நம்பிக்கை யுடையராய். உளமாதருடன் - தம் தம் இல்லங் களிலுள்ள பெண்களோடு. போற்றுதல் - துதித்தல். (வள் ளிநாயகியாருக்கு). மாகுலவர் நம்பி - வேடர்க் கரசனாகிய நம்பி என்பவன். உளமாதருடன் - மனக்காதலோடு. "மாதர் காதல்" என்பது தொல்காப்பியம். (சொல் - உரி. 32) போற்றுதல் - வளர்த்தல். கோகுலமாவல்லி - வேட்டுவகுல நங்கையாகிய வள்ளி நாயகியார். கோகனக அயற்கு - தாம ரையாசனத்தனாகிய பிரமனுக்கு. அயன் ஐயன் எனப்போலி யாயிற்று. அறைந்தான் - குட்டினவர். தானே பிரமம் எனப் பேசி அகங்கரித்துப் பிரணவப் பொருள் தெரியாது மயங்கிய பிரமனைக் குட்டிச் சிறையில் வைத்தனர் சுப்பிர மணியப் பெருமான் என்பது புராணம். அருமறையின் உட் பொருள் - பிரணவப் பொருள். ஐயற்கு அறைந்தான் - தந் தையாகிய சிவனுக்கு உபதேசித்தவர். (கூ)

தும்பி மருப்பொசித்துச் சூழ்ந்தவன மாலையினாற்
கம்பமருங் கையினனேர் நல்லையே — யும்பருறை
மாகனக வில்லார் மகனா ரடியருளக்
கோகனக வில்லார் குலம்.

(கு—ரை): முதலாமடி நல்லூருக்கும் விஷ்ணுவுக்குஞ் சிலேடை. (நல்லூருக்கு) தும்பி - வண்டு. மரு - தேன். பொசித்தல் - புசித்தல்; உண்ணுதல். வனமாலை - சோலை வரிசை. (விஷ்ணுவுக்கு) தும்பி மருப்பு ஒசித்து - குவலை

யாபீட மென்னும் யானையின் கொம்பை முரித்து. சூழ்தல் - வளைவாக அணியப்படுதல். வனமாலை - துளசிமாலை. கம்பு அமரும் கையினன் - சங்கு பொருந்திய திருக்கரங்களை யுடைய விஷ்ணு. நேர்தல் - ஒத்தல். உம்பர் உறை - தே வர்கள் வாசம் செய்கின்ற. மாகனக வில்லார் மகனார் - பெரிய மேருமலையை வில்லாக உடைய சிவபிரானது திருக்குமாரர். கனகம் - பொன். மேருமலைக்கு ஆகுபெயர். அடியர் உளக் கோகனக இல்லார் - அடியார்களுடைய இருதய கமல மாகிய வீட்டில் வீற்றிருப்பவர். குலம் - கோயில். (க0)

எண்ணம் புயத்தா விசையுங்கா யத்திரியார்
நண்ணுதலால் வேதனை நல்லையே — விண்ணுலவுங்
கங்கை வயிற்றுதித்தார் காதலுளார் போற்குறவர்
மங்கை வயிற்றுதித்தார் வைப்பு.

(குரை—ர): முதலாமடி நல்லூருக்கும் பிரமனுக்கும் சிலேடை. (நல்லூருக்கு) எண் அம்புயம் - பூவினுட் சிறந்த தென மதிக்கப்படுந் தாமரை. "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்பது அப்பர் தேவாரம். இசையும் காயத்திரி யார்-முத்தி நெறிக்கு எற்ற மந்திரமாயமைந்த காயத்திரி ஜப முடைய அந்தணர். (பிரமனுக்கு) எண் அம்புயம் - எட்டுத் திருப்புயங்கள். இசையுங் காயத்திரியார் - மனைவியாகி இணங்கிய காயத்திரி தேவியார். விண்ணுலவுங் கங்கை - ஆகாய கங்கை. முருகக்கடவுள் கங்கையின் புத்திரன் என் னும் புராண உண்மை நோக்கிக் கங்கை வயிற்று உதித்தார் என்று கூறப்பட்டது. காதல் உளார் போல் - விருப்பம் உள்ளவரைப் போல. உண்மையில் இல்லாதவர் என்பது கருத்து. குறவர் மங்கை - வள்ளிநாயகி. வயின் - இடம். முன்னிலையில் என்பது. துதித்தார் - புகழ்ந்து போற்றிய வர். வைப்பு - இடம். (கக)

மெய்ப்புலவ ருள்ளுறலான் மேகமதி லூர்தலா
லொப்புவணை நாயகனா நல்லூரே — யப்புருவ
நஞ்சார் கணியானா னன்கா னவர்முன்பு
நஞ்சார் கணியானா னாடு.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் இந்திரனுக்குஞ் சிலேடை. (நல்லூருக்கு) மெய்ப்புலவர் - சொற்பொருளையறிந்த வித்துவப் பெரியார். உள்ளுறல் - மனதினால் தியானித்தல். மேகம் மதில் ஊர்தல் - முகில் மதிலில் தவழுதல். (இந்திரனுக்கு) மெய்ப்புலவர் - வாய்மையைக் கடைப்பிடித்து ஒழுகும் தேவர்கள். ஞான நேத்திரமுடையராதல் பற்றி மெய்ப்புலவர் எனப்பட்டார் எனினுமாம். "தம்மதமுணர்ந்தோர் புலவர் அறிபொருளுக்கு ஏனோர் புலவர்" என்னும் பழமொழியும் ஈண்டு நோக்கற்பாலது. உள்ளுறல் - நடுநாயகமாகி வீற்றிருத்தல். மேகம் அதில் ஊர்தல் - மேகத்தை வாகனமாகக் கொள்ளுதல். அது - பகுதிப் பொருள் விகுதி. இந்திரனை மேகவாகனன் என்பர். உவணைநாயகன் - இந்திரன். உவணை - தேவருலகு. உவணைநாயகன் ஒப்பு ஆம் நல்லூர் என இயையும். நஞ்சு ஆர் அப்பு உருவ கண்ணியான் - நஞ்சு ஊட்டப்பட்ட அம்பு போன்ற கூரிய கண்களையுடைய வள்ளிநாயகி காரணமாக. கண்ணி கணி என நின்றது தொகுத்தல் விகாரம். அம்பு அப்பு என நின்றது வலித்தல் விகாரம். ஆன் - அவ்விடத்தில். புநம் - தினைப்புனம். கணியானான் - வேங்கைமரமாகி நின்றவர். நாடு - இடம். (௧௨)

நத்தமூ ருங்கயத்தா னன்கிளைகொள் பாடலத்தாற்
சித்தசவேள் போலுந் திருநல்லை—முத்தின்
றிருத்தணிகை மாமலையுந் தின்கோட்டிற் காட்டுந்
திருத்தணிகை மாமலையான் சேர்வு.

(கு - ரை): முதலாம் அடி நல்லூருக்கும் மன்மதனுக்குஞ் சிலேடை (நல்லூருக்கு) நத்தம் - சங்கு. ஊருதல், செல்லுதல் - தவழுதல். கயம் - குளம். கிளைகொள்பாடலம் - கொம்பர்களையுடைய பாதிரிமரம். (மன்மதனுக்கு) நத்தம் ஊரும் கயம் - இருளாகிய ஊருகின்ற யானை. ஊர்தல் வாகனமாகக் கொள்ளுதல். கிளைகொள் பாடலம் - கிளியாகிய குதிரை. கிள்ளை கிளை என நின்றது விகாரம். மன்மதனுக்கு உரிய யானை இருள் எனவும் குதிரை கிளி எனவும் கூறப்படும். சித்தசவேள் - மன்மதன். சித்தசனாகிய வேள் என்க. முத்தின் திருந்து அணிமாகைமலை - முத்தினாலாகிய ஆபரணத்தை அணிந்த பெரிய யானை. கோடு - சிகரம், திருத்தணிகை மாமலை - முருகவேள் திருத்தளிகளுள் ஒன்று. சேர்வு - இடம். மலை தன் சிகரத்தின்மேல் மற்றோர் மலையையும் உடையதாய் இருக்கின்றது என ஒரு நயந் தோன்றுதலுங் காண்க. (௧௩)

தாவார் கலியடக்கு மத்தவளந் தாங்குதலா
னாவார் தமிழ்முனிநேர் நல்லூரே—பூவாரும்
வாளங் கெடுத்தார்ப்பில் வந்த தனிமாயா
வாளங் கெடுத்தார் வழி.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் அகத்தியருக்கும் சிலேடை (நல்லூருக்கு) தா ஆர் கலி - துன்பம் நிறைந்த வறுமை. தா - துன்பம். "தாவே வலியும் வருத்தமும் ஆகும்" (தொல் - சொல் - உரி ௪௮) அத்தவளம் - செல்வப் பெருக்கு. (அகத்தியருக்கு) தாவு ஆர்கலி - அலை மறிகின்ற கடல். அடக்குதல் - உள்ளங்கையில் உழுந்தளவாகவைத்து உறிஞ்சுதல். அத்தவளம் - கைவலிமை. தமிழ்முனி - அகத்தியர். நா ஆர் என்பது மெய்யடியார்க்கு உரிய திருநாப் பேற்றை உணர்த்தி நின்றது. நிறைமொழி மாந்தராகிய தத்துவப் பெரியார் என்பது. திருநாவுக்கரசு எனவும் செந்

நாப் போதார் எனவும் வரூஉம் திருநாமங்களின் உண்மையையும் நோக்குக. பூ - கூர்மை. வாள்-வாளாயுதம். ஆர்ப்பில் - ஆரவாரத்தோடு. தனி - ஒப்பற்ற. மாயாவாளம் - மாயத் தன்மைமிக்க சூரனாகிய சக்கரவாளப் புள். கெடுத்தல் - அழித்தல். வழி - இடம். (கச)

பூமேல்வாழ்ந் தீகை யுடையார் மனைப்பொலிவான்
மாமாது போல வளர்நல்லை—மாமணிகொ
ளாரு னனத்தா னருட்குரவ னம்புயநே
ராரு னனத்தா னகம்.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் இலக்குமிக்கும் சிலேடை (நல்லூருக்கு) பூ - பூமி. ஈகையுடையார் - கொடையாளிகள். மனை - வீடுகள். பொலிவு - செல்வப் பெருக்கு. (இல்க்குமிக்கு) பூ - தாமரை மலர். ஈகை உடையார் மனைப் பொலிவால் - பீதாம்பரதாரியாகிய விஷ்ணுவுக்கு மனைவியாகிச் சிறத்தலால். ஈகை - பொன் - பீதம். உடை - வஸ்திரம் - அம்பரம். மாமாது - இலக்குமி. மாமணி கொள் ஆறன் - மாட்சிமை மிக்க மாணிக்க கங்கை என்னும் பெயர் கொண்ட ஆற்றினை உடையவர். இது கதிர்காம க்ஷேத்திரத்துள்ள தீர்த்தம். அன்னத்தான் - பிரமதேவன். அன்னம் அனம் என நின்றது விகாரம். அருட்குரவன் - திருவருள் பாலித்த குருநாதன். அம்புயம் நேர் ஆறு ஆனனத்தான் - தாமரை மலர்களை ஒத்த ஆறு திருமுகங்களை உடையவர். அகம் - இடம் (கரு)

சீரயனல் வாயிசைந்து செய்ய கலைமருவிப்
பாரதியை மானும் பதிநல்லை—நாரதன்செய்
யாகத் துவந்தா ரெதிர்வருமை யாரொருவி
யாகத் துவந்தா ரிடம்.

(கு—ரை: முதலாம் அடி நல்லூருக்கும் கலைமகளுக்குஞ் சிலேடை. (நல்லூருக்கு) சீர்அயல் - சிறப்பமைந்த அயலூர்களில். நால்வாய் - யானை. நாலுதல் - தொங்குதல். தூங்குகின்ற வாயை யுடையதென்பது பொருள். அன்மொழித் தொகை. இசைதல்-பொருந்தியிருத்தல். செய்யகலை - செந்நிற முடையமான். செம்மை - சிவப்பு நிறம். (கலைமகளுக்கு) சீர் அயன் நால்வாய் இசைந்து - வேதவொலி திகழும் பிரமதேவனுடைய நான்கு வாய்களிலும் இணக்கமாகி அமைந்து. சீர் - ஒலி. ஈண்டு வேதவொலியை நிகழ்த்தி நின்றது. செய்யகலை - ஒழுங்கமைந்த நூல்கள். செம்மை; நேர்மை - ஒழுங்கு. பாரதி - கலைமகள். மானுதல் - ஒத்தல். யாகத்து உவந்தார் எதிர் வருமையார் - யாகத்தில் ஈடுபட்ட தேவர் அஞ்சும்படி அந்த யாகாக்கினியில் தோற்றி அவர் எதிரே வந்த ஆட்டுக்கடாவை அடக்கி வாகனமாகக் கொண்டவர். மை - ஆட்டுக்கடா. ஒருவியாகத்து வந்தார் - ஒப்பற்ற விசாகத் திருநாளில் தோற்றியவர். விசாகம் வியாகம் எனத் தற்பவமாயிற்று. "முப்பது சயவும்" என்பது நன்னூல் (பதவியல் - சூ - உ௦) (கசு)

காளகண்ட னன்கிசைமெய்ப் பூவையரி கண்ணுறலால்
வாள்வயங்கொ ளையனு மாநல்லை—நீளசுர
மாநாக மாளவைத்தார் வைவேல் பணித்தரியூர்
மாநாக மாளவைத்தார் வாழ்வு.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் ஐயனுருக்கும் சிலேடை. (நல்லூருக்கு) காளகண்டம் - குயில். "கலகண்ட" என்னும் சம்ஸ்கிருத மொழியின் திரிபு என்ப. நகர னகரங்கள் ஒற்றுமை நயம். "செய்யின்னந்தியங்கி" என்னுந் திருச்செந்தில் அந்தாதியில் (செ. 14) போல. நன்கு இசை மெய் பூவை - நன்றாகப் பேசும் சொற்களை உடைய நாகணவாய். மெய் - சொல்.

அரி - கிளி. கண்ணுறல் - காணப்படுதல். (ஐயனுருக்கு) காளகண்டன் - நஞ்சுபொருந்திய கண்டத்தையுடைய சிவன். காளம் - நஞ்சு, நன்கு இசை - மிக விரும்பித் தழுவிய. மெய்ப்பூவை அரிகண் உறலால் - மோகினி வடிவப் பெண்ணாகிய விஷ்ணுவிடத்தே தோன்றுதலால். ஐயனாரை ஹரிஹர புத்திரரென்பது புராணம். வாள் வயங் கொள் ஐயன் - வாட்போரில் வல்ல ஐயனார். வயம் - வெற்றியுமாம். ஐயன் - அமலவடிவினன். அசுரமாநாகம் - கிரவுஞ்சகிரி. மா - கருமை. "மாமுகடி" (திருக்குறள் - பொருள் - ஆள்வினை-எ) என்புழிப் போல. ஈண்டு மயக்கத்தை உணர்த்தி நின்றது. மாளவைத்தார் - அழித்தவர். மாளவைத்தல் ஒரு சொல். வைவேல் பணித்து மாளவைத்தார் என இயையும். வை - கூர்மை. பணித்தல் - ஏவுதல். அரி ஊர்மாநாகம் ஆள வைத்தார் - இந்திரனை அவனது பதியாகிய மாட்சிமை தங்கிய பொன்னுலகத்தை ஆளும்படி நிலைநிறுத்தினவர் (கஎ)

மற்குரிய தோளர்சர் மாமுடியுங் கையகமும்
பொற்கவிகை காட்டும் புகழ்நல்லை—விற்குலவு
நாகங் கலந்தா ரெனநயந்தார் சேயிருவர்
பாகங் கலந்தார் பதி.

(கு—ரை): இரண்டாம் அடி அரசர் முடிக்கும் கைக்கும் சிலேடை. மற்குரிய தோளரசர் மாமுடி பொன்கவிகை காட்டும். மல் - மற்போர். பொன்கவிகை - பொன்னால் அலங்கரிக்கப்பட்ட குடை. முடிக்குமேல் குடை விளங்குகின்றதென்பது. கையகம் பொன்கவிகை காட்டும். கையகம் - அகங்கை. பொன் கவிகை - பொன்னைக் கொடுத்தற்பொருட்டுக் கவிகின்ற ஒழுக்கம். கவிதல் - வளைதல். கை - ஒழுக்கம். வள்ளன்மை என்பது. வில் - ஒளி. நாகம் - பாம்பு. கலம் - ஆபரணம். தார் - மாலை. நயந்தார் சேய் - விரும்பி அணிந்

தவராகிய சிவபிரானது திருக்குமாரர். இருவர் - தெய்வயானை அம்மையும் வள்ளிநாயகியும். பாகம் - வலமிடம். கலத்தல் - வைத்தல்; சேர்த்தல் (கஅ)

பொன்னனையார் சிற்றிடையும் பூசுரர்கள்சொற்கிடையு
நன்னூல் கலைவிளங்கு நல்லூரே—முன்னிளைஞ
ரேற்றமருள் வீட்டினா னீர்வேலா னன்பருக்கே
யேற்றமருள் வீட்டினா னில்

(கு—ரை): இரண்டாம் அடி பெண்களுடைய இடைக்கும் மாணவர் கூட்டத்துக்கும் சிலேடை. பொன் அனையார் சிற்றிடை நன்னூல் கலைவிளங்கும். பொன் அனையார் - இலக்குமியை ஒத்த பெண்கள். நல்நூல் - நல்ல நூலினாலாய சேலைகள். நூல் ஆகுபெயர். கலை - மேகலை. பூசுரர்கள் சொற்கிடை நல்நூல் கலை விளங்கும் - பூசுரர்-அந்தணர். சொல் கிடை - வேதாத்தியயனம் செய்யும் மாணவர் கூட்டம். நல்நூல் - யஞ்ஞோபவீதம்; பூணூல். கலை - மான்றோல். சாஸ்திரங்களுமாம்.

பூசுரர்கள் சொற்களாகிய பேச்சுகளுக்கு இடையே நன்னூலாகிய இலக்கணப் பிரமாணமும் ஏனைய நூற் பிரமாணங்களும் விளங்குகின்றன என்னும் பொருளும் தோன்ற நிற்கின்றது. இளைஞர் - வீரவாகுதேவர் முதலிய தம்பிமார். எற்றமருள் - அடைந்த மயக்கம். வீட்டுதல் - நீக்குதல். ஈர்வேலான் வீட்டினான் என இயையும். ஈர்தல் - வெட்டுதல். எற்றம் அருள் வீட்டினான் - உயர்ச்சியைத் தருகின்ற மோட்சவீட்டை யுடையவர். (கக)

அரும்புமுலை யார்வாணி யைம்பா லுடனே
கருப்பிரசங் காட்டுங்கார் நல்லை—பெரும்போர்
மலையுருவ வேறெட்டார் வாழ்த்தினரை மாய
மலையுருவ வேறெட்டார் வாழ்வு.

(கு—ரை): இரண்டாம் அடி பெண்களுடைய சொல்லுக்கும் கூந்தலுக்கும் சிலேடை. அரும்பு முலையார் வாணி கரும்பு ரசம் காட்டும். அரும்பு முலையார் - கோங் கரும்பு போன்ற தனங்களையுடைய பெண்கள். வாணி - சொல். கரும்பு ரசம் - கரும்பின் சுவை. வெல்லக் கட்டி எனினும் ஆம். ஐம்பால் - ஐந்துவகையாக முடிக்கப்படும் கூந்தல். ஐவகையாவன - முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள் என்பன. கரும்பிரசம் - கரிய வண்டு. கார் - சோலை. மலை - கிரவுஞ்சகிரி.

"பெரும்போர்மலை" என்றார் தன்னை அடைந்தோரை மயக்கி வருத்தும் நீர்மைத்தாதலின். உருவுதல் - பிளத்தல். வேல் தொட்டார் - வேற்படையை எவியவர். வாழ்த்தினரை மாயம் மலை உருவ வேறு ஒட்டார் - தம்மைத் துதித்த மெய்யடியாரை வஞ்சக நெறிகள் வருத்துதற்குரிய உருவ வேறுபாட்டை - அஃதாவது மறு பிறவியை - அடையச் செய்யாதவர். மாயம் - வஞ்சகம். மலைதல் - மாறுபடுதல்; வருத்துதல். "பெரும்பசி மலைய" என்னும் மணிமேகலை (காதை 14 அடி 6)ச் செய்யுட் பாகத்தில் மலைதல் வருத்துதல் எனப் பொருள்படுதல் காண்க. (௨௦)

கண்ணீல வாளிக் கரும்புருவ வில்லினல்லா
ரெண்ணார் மதனோ டிகனல்லை—விண்ணா
கருவா வினன்குடிஞை காலுலவும் பண்ணைத்
திருவா வினன்குடியான் சேர்வு.

(கு—ரை): முதலாம் அடி நல்லூர்ப் பெண்களுக்கும் மன்மதனுக்கும் சிலேடை. (பெண்களுக்கு) கண் நீலவாளி - கண்களென்னும் நீலமலராகிய அம்பு. கரும்புருவவில்-கரிய புருவமாகிய வில். நல்லார் - பெண்கள். (மன்மதனுக்கு) கள் நீலவாளி - தேன்பொருந்திய நீலமலராகிய அம்பு. நீலம் மன்மதனுடைய பஞ்சபாணங்களுள் ஒன்று. கரும்பு உருவ

வில் - கரும்பினாலாய வில். உருவம் - வடிவம். எண் ஆர் - மதிக்கப்படுகின்ற. மதன் - மன்மதன். இகலுதல் - ஒத்தல்.

உறழ் பொரு எனினும் ஆம். விண்நாகர் உவாவினன் - மேலுலகிலுள்ள தேவர்களால் போற்றப்படும் தெய்வயானை அம்மையாரை உடையவர். உவா - யானை. ஈண்டுத் தெய்வயானை அம்மையாரை உணர்த்தி நின்றது. குடிஞை கால் உலவும் - ஆறு வாய்க்கால் வழியாக ஓடுகின்ற. பண்ணை - வயல். திரு ஆவினன்குடி - பழனி என்னும் சுப்பிரமணிய ஸ்தலம். (௨௧)

கற்பகஞ்சேர் காமக் கொடியார்பண் பாலீழ
நற்பதியான் மேலுலகா நல்லூரே—கற்பமுறுங்
காலங் கடந்தான் கமலா சனனெனவே
ஞாலங் கடந்தா னகர்.

(கு—ரை): முதலாமடி நல்லூருக்கும் தேவருலகுக்கும் சிலேடை. (நல்லூருக்கு) கற்பு அகஞ் சேர் காமக் கொடியார் - நிறையைத் தம்மகத்துக் கொண்ட இன்பநுகர்ச்சிக்குரிய பூங்கொடி போன்ற பெண்கள். ஈழநற்பதி - ஈழமண்டலம். (தேவருலகுக்கு) கற்பகம் சேர் காமக்கொடி - கற்பக தருவைச் சூழ்ந்து இருக்கும் காமவல்லி.

கற்கபதருவும் அதனைச் சூழ்ந்த காமவல்லியும் எனக் கூறினும் ஆம். ஆர்தல் - பொருந்துதல். ஈழநற்பதி - பொன்னுலகம். ஈழம் - பொன். கற்பம் உறுங் காலம் கடந்தான் - கற்பமாக வருகின்ற காலதத்துவத்தைக் கடந்தவர். கற்பம், பிரமகற்பம் முதலியன. கற்பம் - ஊழி. கமல ஆசனன் - தாமரை ஆசனத்தனாகிய பிரமன். ஞாலங்கள் தந்தான் - உலகங்களைப் படைத்தவர். (௨௨)

தேங்குயிலா னண்ணிச் சிறுமியர்மா லைக்குயிலாற்
பூங்குயில்க ளேங்கும் பொழினல்லை — யோங்கும்
பரங்கிரியார் நள்ளாரிற் பாறு தருளும்
பரங்கிரியார் நள்ளார் பதி.

(கு—ரை): பூங்குயில்கள் சிறுமியர் தேங்குயிலால் நண்ணி மாலைக்குயிலால் ஏங்கும் பொழில் நல்லை என இயையும். பூங்குயில் - அழகிய குயிற்பட்சிகள். ஏங்குதல் - ஏக்கமடைதல். தேன்குயில் - இனிய வார்த்தை. தேன்குயில் தேங்குயில் புணர்ச்சி விகாரம். மாலைக்குயில் - மாலையை அணிந்த மேகம்போலுங் கூந்தல். குயில் - மேகம். ஓங்கு உம்பர் - உயர்ச்சியையுடைய மேல் உலக வாசிகளாகிய தேவர். அங்கு இரியார் - மேலுலகமாகிய அவ்விடத்தை விட்டு நீங்காதவராய். நள்ளாரில் பாறுது - பகைவராகிய அசுரரால் அழியாது. அருளும் - உய்வடையும்படி அருள் செய்த. பரங்கிரி ஆர் நள்ளார் - திருப்பரங்குன்று என்னும் தலமத்தியில் வீற்றிருப்பவர். நள்ளார் - குறிப்புவினையாலணையும் பெயர். நள் - நடு. (உங)

மொய்ம்மணிமேன் மாளிகையின் மின்னார் முகமதியை
மெய்யிற் சகோரம் விழைநல்லை — துய்ய
திருவே ரகம்பதியான் சீரடியார் தம்மைக்
கருவே ரகம்பதியான் கால்.

(கு—ரை): மொய்மணி மேல்மாளிகை - கூட்டமாகிய இரத்தினங்கள் அழுத்தி அமைக்கப்பட்ட மேல்வீடுகள். மின்னார் - பெண்கள். முகமதி - முகமாகிய சந்திரன். மெய்யில் - வாய்மையாக மதித்து. சகோரம் - நிலாமுகியென்னும் புள். விழைதல் - விரும்புதல். சகோரம் பெண்கள் முகத்தை மதியென மயங்கியது மயக்கவணி. திருவேரகம் பதி - திருவேரகம் என்னும் சுப்பிரமணிய ஸ்தலம். சீர்

அடியார் - மெய்யடியார். சீர் - சிறப்பிலக்கணம். கருவேர் அகம் பதியான் - கருவாகிய மூலத்தில் வைக்காதவர். பிறவியில் விடாதவர் என்பது. வேர் - மூலம். வித்து எனினும் ஆம். கால் - இடம். (உச)

சுவாசகமுந் நூலோர் சுருதியிசை தேர்ந்து
சுவாசகமுஞ் சொல்லுசீர் நல்லூர் — தவாத
பரதத்து வத்தன் பரையாள் குடையாம்
பரதத்து வத்தன் பதி.

(கு—ரை): இச்செய்யுள் முன்னீரடிகள் ஒருவகையாகவும் பின்னீரடிகள் மற்றொருவகையாகவும் அமைந்த யமகம். மேலும் இவ்வாறு வருவன கண்டுகொள்க. சுவாசகம் - கிளி. ஏகாதசிப்புராணத்தும் சுவாசகம் கிளியென்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. முந்நூலோர் - முப்புரியமைந்த பூணுநூலை யணிந்த அந்தணர். சுருதி - வேதம். சு வாசகம் - நன்மை யமைந்த வாக்கியம். சுவாசகமும் நூலோர் எனப் பிரித்து பொருள் கூறினும் ஆம். இப்பொருளில் உம்மை இழிவுசிறப்பு. நூலோர் - அந்தணர். "சுவாகதமுந் நூலோர் சுருதியிசை தேர்ந்து, சுவாகதமுஞ் சொல்லுசீர் நல்லூர்" எனவும் பாடபேதமுண்டு. இப்பாடத்துக்கு ஏற்ப சுவாகதம் கிளி எனவும் சுஆகதம் நல்வரவு எனவும் பொருள் கூறப்படும். தவாத கெடாத. பரதத்துவத்து அன்பர் - மேலாகிய தத்துவப் பெரியார் எனப்படும் மெய்யடியார். அன்பர் - அன்பை உடைமையாகக் கொண்டவர். ஆள் அத்தன், குடையாம் பரதத்து அத்தன் எனத் தனித்தனி இயையும். குடையாம்பரதம் - குடைக்கூத்து. குடைக்கூத்து முருகனுக்குரியது. "படைவீழ்த்தவுணர் பையுளெய்தக் குடை வீழ்த்தவர் முன்னாடிய குடையும்" என்பது சிலப்பதிகாரம் (காதை 6. அடி 52-53). அசுரரோடு பொருத போர்க்களத்தில் முருகன் தன்குடையைத் தாழ்த்து ஆடியதனால் இக்கூத்துக் குடை எனப்பட்டது என்ப. (உரு)

தேக்கும் புலவருடன் சீரகத்தார் மார்பினருந்
தூக்கின் பொருள் பகருந் தூநல்லை — காக்குமவன்
கந்தப் பொகுட்டான் கரியவனுங் கைதொழுசீர்க்
கந்தப் பொகுட்டான் களம்.

(கு—ரை): இரண்டாம்அடி நல்லூர்ப்புலவர்களுக்கும் செட்டிகளுக்கும் சிலேடை. தேக்கும்புலவர் தூக்கின் பொருள் பகரும்-நிரம்பியபுலமையுடையபடிப்பாளிகள்பாட்டின்பொருளைக் கூறுகின்ற. சீரகத்தார்மார்பினர் தூக்கின் பொருள் பகரும் - சீரகமாலையினராகியசெட்டிகள் தராசின்கண் இட்டு நிறுத்துப் பண்டங்களைவிற்கின்ற. காக்கும் அவன் - காத்தற்றொழிலையுடைய விஷ்ணுமூர்த்தி. கந்தப் பொகுட்டான் - தாமரை ஆசனத்தனாகியபிரமதேவன். கந்தம் - வாசனை. பொகுட்டு - தாமரை வித்து. கரியவன் - இந்திரன். (சூடாமணிநிகண்டு; மணிமேகலை காதை 25. அடி 55.) சீர்கந்தப்பொகுட்டான் - சிறப்பினையுடைய கந்தமலையில் வீற்றிருப்பவர். களம் -இடம். (உசு)

வேதவொலி வேள்வியொலி மிக்க விழாவொலியா
லோதவொலி நாணுமுயர் நல்லை — காதரவின்
மாற்கிழவ னாகி வரைக்குறவர் முன்வள்ளி
பாற்கிழவ னானான் பதி.

(கு—ரை): ஓதஒலி - கடலோசை. காதரவின் மால் கிழவன் ஆகி - ஆசையாலாகிய மயக்கத்தை யுடைய தலைவனாகி. காதரவு - விருப்பம். கிழவன் - தலைவன். ஆகிஎன்றமையால் உண்மையில் இல்லாதவர் என்பது பெறப்பட்டது. கிழவன் ஆனான் - கிழப்பருவ வடிவத்தோடு சென்றவர். ()

அத்திபல வாலரசு நாக மிசையுறலா
லித்தரணி போலு மெழினல்லை — தத்த

னனந்தனந்தி மெய்யிளைஞர்க் கன்றருள்வா னவ்வி
யனந்த னந்தி மெய்யா னகம்.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் பூமிக்கும் சிலேடை. (நல்லூருக்கு) அத்தி பலவு ஆல் அரசு புன்னை என்னும் மரங்கள் தன்னகத்துப் பொருந்தி யிருத்தலால். பலவு - பலாமரம். நாகம் - புன்னைமரம். இசையுறல் - பொருந்தியிருத்தல் (பூமிக்கு) பல அத்தியால் - பல சமுத்திரங்களால் அரசுநாகம் மிசையுறல் - ஆதிசேடனால் தாங்கப்பட்டு அதன் மேல் இருத்தல். தத்தன் அனந்தன் நந்திமெய் இளைஞர் - "தத்தனே யனந்தனந்தி சதுர்முகன் பரிதிப் பாணி, மெய்த்தவ மாலி யென்னமேவுமூவிருவர்" என கந்தப் புராணம் (சுரம்புகு படலம் செய் 25) கூறிய மெய்யடியார் ஆகிய பராசரன் சிறுவர் அறுவர். அன்று அருள்வான் - திருப்பரங் குன்றத்து எழுந்தருளிய காலத்தில் ஞானோபதேசம் செய்தருளியவர். [நவ்வியன்] நந்தன் - மான் கன்றை ஏந்திய திருக்கரத்தையுடைய சிவபெருமானுக்குப் புதல்வர். அந்திமெய்யான் - செவ்வானம் போன்ற திருவுருவ முடையவர். (உஅ)

வச்சிரனல் லில்லான் மகிழரம்பை யாரிசைவா
லச்சுந் தரிநே ரணிநல்லை — மெய்ச்சிவநூன்
மாமலை யத்தவற்கே வாய்மலர்ந்தான் மன்னுதுடி
நாமலை யத்தவனல் லூர்.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் இந்திராணிக்குஞ் சிலேடை (நல்லூருக்கு). வச்சிரம் நல் இல்லால் - வயிரமணிகள் அழுத்தி அமைக்கப்பட்ட அழகிய வீடுகளால். நகரனகரம் ஒற்றுமை நயம். மகிழ் - மகிழமரம். அரம்பை - வாழை. ஆர்தல் - நிறைதல். இசைவு - பொருந்துதல். (இந்திராணிக்கு) வச்சிரன்நல் இல்லால் - இந்திரனுக்கு (அவனால்) விரும்பப்படும் மனைவியாகி இருத்தலால். "நல்லகவர்" என்னும் மதுரைக் காஞ்சி (அடி 223)ச் சொற்றொட

ருக்கு "விரும்பப்படும் சூதர்" எனப் பொருள் கூறப்பட்டமை காண்க. மகிழ் அரம்பையார் இசைவால் - இன்பக் களிப்பினை யுடைய தேவமாதர் சூழ விருத்தலால். இசைவு - இணக்கம்; கூடிநிற்றல். சுந்தரி - இந்திராணி. " அகரச் சுட்டு மேலுலகவாழ்வைக் குறிப்பது. மெய்ச்சிவநூல் - ஆப்த வாக்குகளாகிய சிவாகம உண்மைகள். மா மலையத்தவன் - தெய்விகப் பெருமை வாய்ந்த பொதியமலை வாசராகிய அகத்தியமுனிவர். வாய்மலர்தல் - உபதேசித்தல். துடி காமலயத்தவன் - துடி எனப் பெயரிய கூத்தை உடையவர். லயம் லயம் என நின்றது போலி. துடி முருகனுக்குரிய கூத்துகளுள் ஒன்று. "மார்க்கடனடுவண் நீர்த்திரையரங்கத்து நிகர்த்து முன்னின்ற சூர்த்திறங் கடந்தோன் ஆடிய துடியும்" என்பது சிலப்பதிகாரம் (காதை 6 அடி 49-51). இக்கூத்துக் கடலில் வேற்றுருவங்கொண்டு நின்ற சூரனது நெஞ்சைப் பிளந்து அவன் போரை வென்ற முருகன் அக்கடலிடையே துடி கொட்டி ஆடியது என்பர். நல் ஊர் - விரும்பப்படும் ஊர். (உக)

கந்துகமுந் தானைவேற் காளையருங் கன்னியருங்
கந்துகமுந் திக்களிகூர் நல்லூரே —சந்திரமா
மாவைப் பிழந்தார் மகிழ்பூப்ப வீரையிலோர்
மாவைப் பிழந்தார் வழி.

(கு—ரை): இரண்டாமடி வீரர்களுக்கும் கன்னியருக்கும் சிலேடை. கந்து உக முந்து ஆனை வேல் காளையர் கந்துகம் உந்தி களிகூர். கந்து கட்டுத்தறி. உகுதல் - முரிதல். முந்துதல் - முற்பட்டுச் செல்லுதல். ஆனை - யானைப் படை. வேல் - வேற்படை. காளையர் - வீரர். கந்துகம் உந்துதல் - குதிரைகளில் ஏறி அவற்றைச் செலுத்துதல். களிகூர்தல் - செருக்கு மிகுதல். கன்னியர் கந்துகம் உந்திக்களிகூர். கன்னியர் - இளம் பெண்கள். கந்துகம் - பந்து.

உந்துதல் - எறிந்து விளையாடுதல். களி - மகிழ்ச்சி. சந்திரம் ஆம் மா வைப்பு இழந்தார் - பொன் என்னும் பெயரால் கூறப்படுகின்ற மாண்பு வாய்ந்த இடத்தை; அஃதாவது: பொன்னுலக வாழ்வை இழந்த தேவர். சந்திரம் - பொன். மகிழ்பூப்ப - உவகையடையும்படி. வீரை - சமுத்திரம். ஓர் மாவைப் பிளந்தார் - ஒப்பற்ற சூரன் கொண்ட மாமர வடிவத்தை இரு கூறாக வெட்டியவர். ழகர ளகரம் ஒற்றுமை நயம். 8-ம் செய்யுட் குறிப்புரையை நோக்குக. (௩௦)

தூவிமயின் மீதாகச் சுந்தரநல் லூரிறைவன்
சேவலங்கையான்பவனிசேர்ந்ததுதான்—தீவகம்போ
லக்குருகு முன்னா வவர்க்குருகு மாயிழையார்
கைக்குருகு கொள்ளவே காண்.

(கு—ரை): தூவி - சூட்டுமயிர். சுந்தரம் - அழகு. சேவல் அம் கையான் - கோழிக்கொடி பொருந்திய திருக்கரமுடையவர். அம் சாரியை. பவனி - திருவுலா. தீவகம் போல் - பார்வை மிருகம்போலமைந்த. அக்குருகுமுன்னாக - அந்த மயிலாகிய பறவையை முன்னிலையாகக்கொண்டு. முன்னாக என்பது முன்னா எனச் செய்யுண்முடிபெய்தி நின்றது. அவர்க்கு உருகும் ஆயிழையார் - கடவுளாகிய அம்முருகவேளிடத்து மனமுருகுகின்ற பெண்களுடைய. ஆய் இழையார் - நுண்ணிய தொழிலமைந்த ஆபரணங்களை அணிந்த பெண்கள். கைக்குருகு - கைவளையல். காதலர்பால் மனஞ்சென்ற மகளிர்க்கு உடல் மெலிவால் கைவளை கழலுதல் இயல்பு. மிருகவேட்டை ஆடுவோர் அவற்றை எளிதிற் பிடிப்பதற்கு இனமாகிய பார்வை மிருகங்களைக் கொண்டு செல்வது போல, கைலை முதற் குரவனாகிய குருநாதனும் சீவர்களை ஆட்கொள்வதற்கு அவர்போன்ற வடிவுகொண்டு செல்வார் என்பது சுருதி. "ஒரு தீவகம்போல் வருமண்ணல்"

எனத் திருவிளையாடற் புராணம் கூறியதும் அறிக. பெண்கள் சாயலால் மயிலை ஒத்தவராதலின் அவர்க்கு இனமாகிய மயில் ஈண்டுத் தீவகம் எனப்பட்டது. இது கடவுள்மாட்டு மானிட மகளிர் நயந்த பக்கம். (௫௧)

சந்தமணி சீர்பொருள்கள் சார்ந்தகர முன்னதாச்
செந்தமிழே போலுந் திருநல்லை.— செந்தேனு
மாவுங் கனியுமென்றார் வல்லிசெவ்வாய்த் தேனுக்கு
நாவுங் கனியுமென்றார் நாடு.

(கு—ரை): முதலாம் அடி செந்தமிழ் மொழிக்கும் நல்லூருக்கும் சிலேடை(நல்லூருக்கு) சந்தம் - சந்தனம். மணி - இரத்தினம். சீர் - பொன். பொருள்கள் - நெல்முதலியன. அகரம் - ஊர். முன்னது ஆ - முதன்மையுடைய தாய் (செந்தமிழ் மொழிக்கு) சந்தம் - அழகு; கவியின்வண்ணம். அணி - அலங்காரம். சீர் - ஓசைச் சீர்முதலிய செய்யுள் உறுப்பு. பொருள் - அகப்பொருளும் புறப்பொருளும். அகாமுன்னதுஆ - அகர எழுத்தை முதலாகக் கொண்டு. ஆக என்பது ஆ என நின்றது. செந்தேன் - செம்மையாகிய தேன். மாவுங் கனியும் மென்றார் - குறவர் நிவேதித்த தினைமாவையும் பழங்களையும் திருவமுது செய்தவர். வல்லி செவ்வாய்த்தேனுக்கு - பூங்கொடி போன்ற வள்ளி நாயகியாரது சிவந்த இதழூறலாகிய தேனுக்கு. நாவும் கனியும் என்றார் - தமது நாவும் கனியும் என்று நலம் பாராட்டியவர். வல்லி வள்ளிக்கொடியுமாம். (௫௨)

பாகனசொல் லார்நகையும் பன்னு சிவநூலு
மாகதியைக் காட்டு மணிநல்லை — நாகவுரி
போர்க்குமரன் சத்திதரப் போந்தசுரர் மாளவடும்
போர்க்குமரன் சத்திதரன் பூ.

(கு—ரை): இரண்டாம் அடி பெண்களுடைய பற்களுக்கும் சிவாகமங்களுக்கும் சிலேடை. பாகு அன்ன சொல்லார் நகை மாகதியைக் காட்டும்: பாகு - வெல்லப் பாகு. அன்ன உவம உருபு. அன என நின்றது விகாரம். நகை-பற்கள். மாகதி-முல்லையரும்பு. பன்னு-இறைவனால் அருளிச்செய்யப்பட்ட. சிவநூல்-ஆகமங்கள். மாகதி - சிறந்தகதி; முத்திநெறி. மணி - அழகு நாகவுரி-யானைத்தோல். அரன் சத்தி தரப் போந்து அசுரர் மாள அடும்போர்க் குமரன்-சிவபிரானும் உமாதேவியும் புத்திரனாக அளிக்கச் சென்று சூரன் முதலிய அசுரரை இறக்கும்படி கொன்றருளிய போரில் வல்ல குமாரக் கடவுள். அரன் சத்திதர என்பதற்கு சிவபிரானது சத்தியாகிய உமாதேவி ஆறுமுகங்களையுடைய குழவியாக அணைத்து அளிக்க எனினும் ஆம். சத்திதரன் - வேற்படையை உடையவர். உமாதேவி சத்தி யென்னும் தனது திருநாமத்தை வேலுக்கு அமைத்து அதனை முருகக் கடவுளுக்குக் கொடுத்தமையால் அவ்வேல் சத்தியெனப்படுவதாயிற்று. "அளியாப் பேரளி யுமைக்க ணின்று தற்பெயர் புணர்த்திக் கற்பினொடு கொடுத்த அமையா வென்றியரத்த நெடு வேலோய்" என்பது கல்லாடம். (முருகக்கடவுள் துதி 13—15). பூ - இடம். (௫௩)

கண்டைமா வேயன்றிக் கற்றவரு மற்றவருந்
தண்டம் பொருந்தாத் தனிநல்லை — விண்டுதொறு
மாடும் பதத்தின னண்டர்களு நான்மறையுந்
தேடும் பதத்தினன் சேர்வு.

(கு—ரை): இரண்டாம் அடி யானைக்கும் கற்றோர்க்கும் கல்லாதவர்க்கும் சிலேடை. கண்டைமா - கழுத்தில் மணி கட்டப்பட்ட யானை. தண்டம்-யானை செல்லும் வழி. யானை துயிலுமிடமுமாம். கற்றோரும் மற்றோரும்

2507

தண்டம் பொருந்தா. தண்டம் - அரச தண்டனை. (கல்லாதவர்க்கு) வணக்கம்; மரியாதை. விண்டு - மலை. பதம்-திருவடிகள். முருகவேளைக் குன்று தொறுடுங் குமரவேள் என்ப. "குன்று தொறுடலு நின்றதன் பண்பே" என்பது திருமுருகாற்றுப்படை. அண்டர் - தேவர். நால் மறை - நான்கு வேதங்கள். தேடும்பதத்தினன் - அடையும் பொருட்டுத் தேடுகின்ற பதவியை யுடையவர். யானையே தண்டம் பொருந்துவது கற்றோரும் மற்றோரும் தண்டம் பொருந்தார் என்பது ஒழித்துக்காட்டணி. (௫௪)

நீல னிலவார னீள்கதிர்பொன் வெள்ளிபச்சை
சால்பவனத் தால்வான் றருநல்லை — யால்வளருந்
தாமோதரன் மருகன் றண்ணகையால் விண்ணமரர்
தாமோ தரன்மருகன் சார்பு.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் வானத்துக்கும் சிலேடை. (நல்லூருக்கு) நீலம் - நீலமணி. நகரனகரம் ஒற்றுமை நயம். நிலவு - சந்திரகாந்தக் கல். ஆரம் - முத்து. கதிர் - சூரிய காந்தக் கல். பச்சை - மரகதமணி. சால் பவனம் - (என்னு மிவற்றைப்) பெரிதும் அழுத்தி யமைக் கப்பட்ட அரண்மனை. (வானத்துக்கு): நீலன் - சனி. நிலவு - சந்திரன். ஆரல் - செவ்வாய். "ஆரனீள்" என்புழி நகர னகரம் ஒற்றுமை நயம். கதிர் - சூரியன். பொன் - வியாழன். வெள்ளி - சுக்கிரன். பச்சை-புதன். சால்பவனம்-நிரம்பியகாற்று. ஆல்வளருந் தாமோதரன் மருகன் - ஆலிலையிற் பள்ளிகொள்ளும் விஷ்ணுமூர்த்திக்கு மருமகன். தண்ணகையால்-சத்துவகுணம் பொருந்திய உவகையோடு. தண் அகையால் - சத்துவ குணத்தோடு கூடிய உள்ளக் கிளர்சியோடு எனினும் ஆம். அகை - எழுச்சி; உயர்ச்சி. விண் அமரர்-வானுலகத்துள்ள தேவர். தாம் ஓது. ஓதுதல்-துதித்தல். அரன்மருகன் - சிவபிரானுக்கு வழித்தோன்றல்;

மகன் என்றபடி- முதலாமடி சப்தரூபசிலேடை. அஃதாவது தொனியால் சிலேடைப் பொருள் தருவது என்பது. "நீலநிலவார நீள்கதிர்" எனப் பாடங்கொண்டு நீலம் ஆகுபெயராய் அந்நிறமுடைய சனியை உணர்த்தியது எனவும் ஆரம் செவ்வாய் எனவும் பொருள் கூறினும் ஆம். (௫௫)

புலிசேர்ந் துவாக்கள் பொலியப் பிணைக்க
ளிலகுகள பத்தொடிசை நல்லூர் — புலவோர்
பொருந்தாரை வேலையிடைப்பொன்றுவிக்கும் சோதிப்
பொருந்தாரை வேலான் புரம்.

(கு—ரை): முதலாம் இரண்டாம் அடிகள் சப்தரூப சிலேடை. உவாக்கள் புலிசேர்ந்து பொலிய - வாலிபர்கள் சந்தனம் பூசுதலாற் பொலிவடைய. பொலிவு - அழகின் மிகுதி பிணைக்கள் - பெண்கள். பிணை - பெண் பொது. "வாரணத்தின் பிணைப்பிள்ளை" (கந்தபுராணம்) என்புழிப் பிணைப்பிள்ளை என்பது பெண்பிள்ளை எனப் பொருள்படுதல் காண்க. "பெண்ணும் பிணையும் மக்கட்குரிய" என்பது தொல்காப்பியம். (மரபு - சூ. 61.) களபம் - கலவைச் சாந்து. இசைதல் - பொருந்துதல்; அணிதல். ஆண்யானைகள் பெண்புலிகளைத் தழுவிப் பொலிவடைய, பெண்புலிகள் ஆண்யானைகளைத் தழுவுகின்றன என்பது தொனியர்த்தம். புலி - பெண்புலிகள். உவாக்கள் - ஆண்யானைகள். பிணைக்கள் - பெண்புலிகள். களபம் ஆண்யானைகள். புலவோர் பொருந்தாரை - தேவர்களுக்குப் பகைவராகிய அசுரரை. வேலை - சமுத்திரம். பொன்றுவித்தல் - அழியச்செய்தல். சோதிவேல் பொருவேல் தாரைவேல் எனத் தனித்தனி இயையும். சோதி - ஒளி. பொருதல் - போர்புரிதல். தாரை - கூர்மை. புரம் - இடம். (௫௬)

சங்கமுடன் றாமரைநற் செந்தாது தானுறலாற்
பிங்கலனூர் போலும் பெருநல்லை—பொங்கரியின்
மாது வசத்தினன் மானிடனு மாகியோர்
மாது வசத்தினன் வாழ்வு.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் குபேர னுக்கும் சிலேடை. (நல்லூருக்கு) சங்கம் - சங்கு. அம் சாரியை. தாமரை - தாமரை மலர். செந்தாது - பொன் - நிதி. சங்குகளில் தாமரைப்பூவிலுள்ள செவ்விய மகரந்தம் பொருந்துதலால் எனினும் ஆம். (குபேரனுக்கு) சங்க முடன் தாமரைநற்செந்தாது-சங்கநிதி பதுமநிதி. செந்தாது என்பது சங்கத்தோடும் தாமரையோடும் தனித்தனி இயையும். பிங்கலன் - குபேரன். பொன்னிறமுடையவன் என்னும் பொருட்டு. பிங்கலம் - பொன். அரியின் மாதுவசம் - அக்கினியாகிய பெரிய கொடி. இன் சாரியை. சூரனோடு போர்புரியுங்காலத்து முருகக் கடவுள் தேரில் அக்கினி தேவன் கொடியாகி யமர்ந்தனன் என்பது கந்தபுராணம். மானிடனுமாகி - மானிடவடிவத்தோடு சென்று. மாது - வள்ளிநாயகி. வசத்தினன் - வசப்பட்டு நின்றவன். மாதை வசப்படுத்தியவன் - ஆட்கொண்டவன் எனினுமாம். (௨௭)

சிலம்புவளை யார்பதம்போற் செவ்விப் பறம்புஞ்
சிலம்புபுனை செய்யதிரு நல்லூர்—வலஞ்சேர்
சதகோடி யன்னன்கைத் தாக்குமுக்க ணன்பொன்
சதகோடி யன்னன் றலம்.

(கு—ரை): இரண்டாம் அடி பெண்கள் காலுக்கும் தனத்துக்கும் சிலேடை. சிலம்புவளையார் பதம் சிலம்புபுனை - ஒலிக்கின்ற வளையலை யணிந்த மகளிரது கால்கள் சிலம்பை அணிகின்ற. போல் - உவம உருபு. செவ்விப் பறம்பு - இளமைத் தன்மையை யுடைய தனங்கள். சிலம்பு புனை - மலையை ஒத்திருக்கின்ற. வலம் சேர் சத கோடியன் - வலப்பக்கத்தில் தரித்திருக்கின்ற குலிசாயுதத்தை உடையவர். நான்கைத் தாக்கு முக்கணன் - பன்னிரண்டு திருக்கண்களையுடையவர். தாக்குதல் - பெருக்குதல். சத கோடி பொன் அன்னன் - நூறுகோடி பொன்னை ஒத்தவர். சதகோடி என்பது மிகப்பலவாய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு. "தெவ்வோர் எழுபது கோடியுறும்" (தேவர் குறள். அதி. 64. அமைச்சு. செ. 9) என்புழிப் போல. வாய்மையான பொருள் எனப்படும் அருள் வடிவினர் என்பது. (௨௮)

தாரா பதந்தழுவுந் தண்பூகத் தாறருணன்
றேர்மேற் புனைமணியாஞ் சீர்நல்லூர்—சீர்மேவுந்
தூக்குக் குடத்தான் சுதனுந் தொழுந்தோகைக்
கூக்குக் குடத்தான் குலம்.

(கு—ரை): தாராபதம் - நட்சத்திரமண்டலம். பூகத் தாற்றில் உள்ள பூக்கள் - கமுகம்பாளை. அருணன் - சூரியன். பூகத்தாறு உயர்ச்சியால் சூரியன் தேரில் தூக்கிய முத்து மாலை ஆகின்றது எனச் சோலையின் வளம் புனைந்துரைத்தவாறு. உயர்வு நவிற்சி. குடத்தூக்கான் எனப் பிரித்துக் கூட்டுக. குடத்தூக்கான் - குடக்கூத்தை யுடைய திருமாலும். "வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோனாடிய குடமும்" என்பது சிலப்பதிகாரம். (காதை 6. அடி 53 - 54) இக்கூத்து அநிருத்தனை வாணன் சிறை வைத்த பொழுது அவ்வாணனுடைய சோநகர வீதியிற் சென்று கண்ணன் பஞ்சலோகங்களாலும் மண்ணாலுஞ் செய்த குடம் கொண்டு ஆடிய கூத்து என்பர். சுதனும் - அத்திருமால் மகனாகிய பிரமதேவனும். தோகை இறகு. கூக்குடத்தான் - கூவுகின்ற கோழிக்கொடியை யுடையவர்.

தொழும் என்னும் பெயரெச்சம் குக்குடத்தான் என்பதன் விகுதியோடு முடிந்தது. குலம் - கோயில். (௩௯)

ஓங்கு வளைக்குழையா ரொண்கண்ணுஞ் செங்கரமும்
தேங்குவளை காட்டுந் திருநல்லூர்—பூங்குறிஞ்சிக்
கார்த்திகையா ரும்பல் கனங்கிரியான் காயமுலாங்
கார்த்திகையா ரும்பல் களம்

(கு—ரை): இரண்டாம் அடி பெண்கள் கண்ணுக்கும் கைக்கும் சிலேடை. ஓங்கு வளைக் குழையார் ஒண்கண் தேங்கு வளைகாட்டும். ஓங்குதல் நீட்சியைக் குறித்து நின்றது. வள்ளை - வள்ளையிலை. வள்ளைவளை என நின்றது விகாரம். குழை - காது. ஒண்மை - ஒளி. தேம் குவளை - தேன்பொருந்திய குவளை மலர். செம்கரம் தேங்குவளை காட்டும். தேங்கு வளை - நிறைந்த வளையல்கள். காட்டுதல் - ஒத்தல். பூம் குறிஞ்சி - அழகிய குறிஞ்சி நிலத்தில். கார்த்திகை ஆரும் பல் கனம் கிரியான் - காந்தள் மலர்கள் நிறைந்த பல பெரிய மலைகளையுடையவர். காயம் உலாம் - ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற. உலாவும் என்பது உலாம் என நின்றது விகாரம். கார்த்திகையார் உம்பல் - கார்த்திகை நட்சத்திரங்களாகிய பெண்களுக்குப் புதலவர். களம் - இடம். (௪௰)

ஆசினிவே ணிப்பொலிவா லாரமணி கன்னிகையார்
தேசதனாற் காசிநிகர் தென்னல்லை—வாசவன்மு
னண்டரண்ட ராயநிலை யட்டருளி னனகில
வண்டரண்ட ராய னகம்.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் காசிக்கும் சிலேடை. (நல்லூருக்கு) ஆசினி - ஈரப்பலா. வேணி - ஆகாயம். பொலிவு - வளர்ச்சி. ஆரம் அணிகன்னிகையார் - சந்தனக் குழம்பை அணிந்த பெண்கள். தேசு - அழகு. (காசிக்கு) ஆசினி வேணி - ஆகாய கங்கை. பொலிவு - பெருக்கு. ஆர மணிகர்ணிகை - முத்துக்களையுடைய மணிகர்ணிகை என்னும் தீர்த்தம். கன்னிகை கர்ணிகை என்பதன் சிதைவு. ஆர்தல் - பொருந்துதல். தேசு - ஒளி; தெய்வீகம். வாசவன் முன் அண்டர் - இந்திரன் முதலிய தேவர். அண்டராகிய நிலை - பகைவராகிப் போர்புரிந்த நிலையை. அடுதல் - அழித்தல். குமரவேள் குழவியாகித் திருவிளையாடல் புரிந்த காலத்தில் உண்மையை அறியாது எதிர்த்த இந்திரன்முதலிய தேவர்களைத் தோல்வியடையச் செய்தவரென்பது கந்தபுராணம். (திருவிளையாட்டுப் படலம்). அகில அண்டரண்ட ராயன்-சகல மேலண்டங்களுக்குந் தலைவன். ராயன் - அரசன்; தலைவன். (௪௧)

செல்வமலி நல்லூரே செஞ்சிலைக்கை வெஞ்சூரன்
றொல்வலியன் றன்மாயச் சூழ்வினாற்—பல்விதமாம்
புல்லுருவங்காட்டினா னென்பதெல்லாம் போக்கியோர்
நல்லுருவங் காட்டினா னாடு.

(கு—ரை): செம் சிலைகை - நேரிய வில்லை ஏந்திய கையை யுடைய. தொல்வலியன் சூரன் தன் மாயச் சூழ்வினால் பல்விதம் ஆம் புல் உருவம் காட்டி நான் என்பது எல்லாம் போக்கி - பழைய தவப்பேற்றினாலாய வலிமையை யுடைய சூரன் தனது மாயச் சூழ்ச்சிகளால் பலவகையான அற்பமான மாயாவடிவங்களைக் காட்டுதலால் அகம் பிரமங் கொண்டு நின்ற தன்மைகள் யாவற்றையும் அழித்து. வெம் சூரன் - கொடியவனாகிய சூரன். வெம்மை - கொடுமை. காட்டி - காட்டுதலால். நகரம் னகரமாய் நின்றது ஒற்றுமை நயம். ஓர் நல் உருவங் காட்டினான் - ஒப்பற்ற அருள்வடிவாகிய விசுவரூபத்தைக் காட்டிய முருகக் கடவுள்.

இரவலராய் வாய்மலர்வ தீங்குவளை முன்னா
வரவலரே வாய்ந்தவெழி னல்லை—திரமா

முரவா குவையுய்த்தான் பின்னவனோற் றோதி
வரவா குவையுய்த்தான் வைப்பு.

(கு—ரை): இரவு அலர் - இரவில் அலரும் பூக்கள். வாய்மலர்தல் - முகிழ் திறத்தல். ஈர்ங்குவளை - தண்மை பொருந்திய குவளைமலர். முன்னாக - முதலாக. முன்னாக என்பது முன்னா என நின்றது. வரம் - மேன்மை. இரவலர் - யாசகர். வாய்மலர்தல் - தங்குறை கூறி நிற்றல். எழில் - அழகு. சிலேடைப் பொருளால் நல்லூரில் யாசகர் இல்லை என்பது கூறப்பட்டது. இது ஒழித்துக் காட்டணி. நியமவிலக்குச் சிலேடை என்பது தண்டியலங்காரம். "கொடியன மகளிர் தங்கள் குழையு நுண் மருங்கே" (நைடதம்) என்புழிப்போல. திரம் ஆம் உர ஆகு - நிலையான மிக்க வலியையுடைய அசுரனாகிய பெருச்சாளி. உய்த்தான் பின்னவன் - வாகனமாகக் கொண்டு செலுத்திய விநாயகருக்குத் தம்பி. ஒற்று ஓதிவ்ர வாகுவை உய்த்தான் - சூரனிடம் தூதுவனாகச் சென்று ஆவன பேசிவரும்படி வீரவாகுவை அனுப்பியவர். வைப்பு - இடம். (௪௩)

வாரணியுங் கொம்மையா ரோதிமன்ன ரம்புயம்போற்
றாரணியைத் தாங்குந் தனிநல்லை—நாரணிதன்
செங்கைக் குமாரன் சிறுகுடியில் வாழ்ந்தமா
னங்கைக் குமார னகர்.

(கு—ரை): இரண்டாம் அடி பெண்கள் கூந்தலுக்கும் அரசர் புயத்துக்கும் சிலேடை. வார் அணியும் கொம்மையார் ஓதிதார் அணியைத் தாங்கும். வார் - கச்சு. கொம்மை - தனம். ஓதி - கூந்தல். தார் அணி - மாலை வரிசை. மாலையாகிய அணியுமாம். அணி - அணியப்படுவது. மன்னர் அம்புயம் தாரணியைத் தாங்கும். அம்புயம் - அழகிய புயம். தாரணி - பூமி. நாரணி - உமாதேவி.

செங்கைக் குமாரன் - சிவந்த கைகளில் ஏந்திச் சீராட்டப் படும் புதல்வர். சிறுகுடி - வேடுவச் சேரி. மான் நங்கைக்கு மாரன் - மான் மகளாகிய வள்ளிநாயகியாருக்கு மன்மதனானவர்: வசப்படுத்தியவர் என்பது. (௪௪)

வண்டேறு கையார் மதனனையார் மார்பினிற்கோ
வண்டேறு காட்டு மணிநல்லை—வண்டேறு
செச்சையங் கோடலான் சிந்தையினு முந்துகதிச்
செச்சையங் கோடலான் சேர்வு.

(கு—ரை): வண்டு ஏறு கையார் கோவண்டு மதனனையார் மார்பினில் ஏறு காட்டும் என இயையும். வண்டு ஏறுகையார் - வளையல்கள் மிகுந்திருக்கின்ற கைகளையுடைய பெண்கள். ஏறுதல் - மிகுதல். கோவண்டு - கண்களாகிய அம்புகள். ஏறு - உட்புகுதல். முதனிலைத் தொழிற் பெயர். வண்டு ஏறு செச்சை அம் கோடலான் - வண்டுகள் மொய்க்கின்ற வெட்சி மாலையையும் அழகிய காந்தள் மலரையும் அணிந்தவர். செச்சை அம்கோடல் - சிவந்த அழகிய காந்தள் மலர் எனினும் ஆம். சிந்தையிலும் முந்துகதி - மனோவேகத்திலும் விரைவாக முற்பட்டுச் செல்லும் செலவினையுடைய. செச்சை அம் கோடலான் - ஆட்டுக்கடாவாகிய குதிரையை யுடையவர். அம் சாரியை. கோடல்-குதிரை.

பாலனத்தை நண்பாம் பசுங்கிளிகள் மாலெனவே
பாலனத்தை யாரும் பகர்நல்லை—யாலைக்
கழனிவரைக் கந்தநீர் காலருவி பாயும்
பழனிவரைக் கந்தன் பதி.

(கு—ரை): இரண்டாம் அடி கிளிகளுக்கும் திருமாலுக்கும் சிலேடை. பால் அன்னத்தை நண்பு ஆம் பசுங் கிளிகள் - வெண்மை நிறம் பொருந்திய அன்னப்

பட்சிகளுக்கு நட்புரிமை கொண்ட பசிய நிறமுடைய கிளிகள். பால் அன்னத்தை ஆரும் - பாற்சோற்றை உண்ணுகின்ற. அன்னம் அனம் என நின்றது விகாரம். மால் - விஷ்ணு. பாலனம் - உலகபரிபாலனம்; காத்தற் றொழில். ஆர்தல் - பொருந்துதல். ஆலைக்கந்த நீர் கழனி வரை கால் அருவிபாயும் பழனி வரை என இயையும். ஆலை கந்தம் நீர் - கரும்பாலையில் இருந்து வருகின்ற வாசனை பொருந்திய நீர். பாயும் பதி என இயையும். கழனி வரை - வயல் எல்லை வரையும். கால் அருவி பாயும்- வாய்க்கால் வழியே அருவியாகப் பாய்கின்ற. பழனிமலை - முருகவேள் திருத்தளிகளுள் ஒன்று. (சசு)

அம்பரத்தைத் தாவியருஞ் சூரனேர் சந்திசைவான்
மொய்ம்பினனு மொய்பொழில்சூழ் நல்லூரே—யும்பரி
கோக்குஞ் சரத்தான் குடியேறத் தானவரைக் [லே
கோக்குஞ் சரத்தான் குலம்.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் வீரவாகுதேவருக்கும் சிலேடை. (நல்லூருக்கு) அரும் சூரல் நேர் சந்து அம்பரத்தைத் தாவி இசைவால் - அரிய பிரப்பமரமும் நீண்ட சந்தன மரமும் ஆகாயத்தைப் பற்றிப் பொருந்தியிருத்தலினால். சந்து அம்பரத்தை தாவி சூரன் நேர் இசைவால் எனக் கொள்ளினும் ஆம். சூரன் நேர் இசைவு - சூரியனுக்கு எதிராகப் பொருந்துதல். (வீரவாகு தேவருக்கு) அம்பரத்தை தாவி - கடலைக் கடந்து. சூரன் - சூரபன்மன். நேர் - எதிரில். சந்து இசைவு - தூதாகப் பொருந்துதல். மொய்ம்பினன் - வீரவாகுதேவர். மொய்ம்பு - புயம்; வாகு. கோகுஞ்சரத்தான் - அரசனாகிய இந்திரன். குஞ்சரம் - ஐராவத யானை. குஞ்சரக் கோவான் என விகுதிபிரித்துக் கூட்டி யானைகளுள் தலைமைவாய்ந்த ஐரா

வதத்தை உடைய இந்திரன் எனினும் ஆம். தானவர் - அசுரர். கோக்கும் சரத்தான் - பிளந்து கொன்ற அம்பினையுடையவர். குலம் - கோயில். (சஎ)

நந்தா வனத்தருவி நன்மதுவா ருந்தேன்கள்
மந்தாரத் தேனளவு மாநல்லை—முந்தா
மடங்கலையம் பிற்செற்றான் மாறார்ந்த வெய்ய
மடங்கலையம் பிற்செற்றான் வாழ்வு.

(கு—ரை): நந்தாவனம் - பூஞ்சோலை. அருவுதல் - அடைதல். மது - தேன். ஆர்தல் - உண்ணுதல். தேன்கள் - வண்டுகள். அளவுதல் - கலத்தல். மந்தாரம் - தேவலோகத்துள்ள பஞ்சதருக்களுள் ஒன்று. உயர்வு நவிற்சியணி. முந்தா மடங்கு அலை அம்பில் செற்றான் மாறார்ந்த வெய்ய மடங்கலை - முற்பட்டு மறிகின்ற அலைபொருந்திய நீரையுடைய சமுத்திரம்போல முழங்கிச் சென்ற, பகைவனாகிய சூரன் எதிரே வாகனமாகக் கொண்டு செலுத்திய கொடிய சிங்கத்தை. இல் உவமப் பொருளில்வந்த ஐந்தாம் வேற்றுமை உருபு. அம்பில் வெய்ய மடங்கல், செற்றான் மாறார்ந்த மடங்கல் எனத் தனித்தனி இயையும். அம்பில் செற்றான் - அம்பினாற் கொன்றவர். (சஅ)

காவலர்கள் வேந்து கதித்துயர்ந்த மேற்குலத்தான்
மேவுங் கவுசிகநேர் மெய்ந்நல்லை—தூவரையிற்
காஞ்சிமணி மாநிழலார் கன்னிவள்ளி சேர்காந்தன்
காஞ்சிமணி மாநிழலான் காப்பு.

(கு—ரை): முதலாம் அடி நல்லூருக்கும் விசுவாமித்திரருக்கும் சிலேடை. (நல்லூருக்கு) கா அலர்கள் வேய்ந்து- சோலைகள் பூக்களால் மூடப்பட்டு. வேந்து - வேய்ந்து என்பதன் சிதைவு. கதித்து உயர்ந்த மேல் குலத்தால் -

மிக உயர்ந்த மேல்வீடுகளால் (விசுவாமித்திரருக்கு) காவலர்கள் வேந்து கதித்து உயர்ந்த மேல்குலத்தால் - அரசருட் சிறந்தவனாகியும், தவத்தால் உயர்ந்து தலைமை வாய்ந்த பிராமண குலத்தவனாயினமையால். வேந்தன் வேந்துஎன நின்றது. அரசன் அரசு என நின்றதுபோல. காவலர்கள் வேந்து அரசர்க்கரசன் என்னும் பொருட்டு. கதித்தல் - மேற்செல்லுதல்; உயர்வடைதல். கௌசிகன் விசுவாமித்திரன். மெய் நல்லை - உண்மைநெறியாகிய சத்திய நெறி வழங்கும் நல்லூர். தூ அரையில் மாநிழல் ஆர் காஞ்சிமணி கன்னி வள்ளிசேர் காந்தன் - சுத்தமாகிய இடையில் மிக்க ஒளி பொருந்திய எண்கோவை மணியை அணிந்த கன்னியாகிய வள்ளிநாயகியார் அடையப்பெற்ற நாயகர். நிழல் - ஒளி. "காழிரு நான்கே காஞ்சி" என்பது நிகண்டு. காஞ்சிமணி மாநிழலார் - காஞ்சீ புரத்துள்ள வேதவடிவாகிய அழகிய மாமர நீழலில் வீற்றிருப்பவர். "காஞ்சிமாவடிவைகுஞ் செவ்வேள்" என்பது கந்தபுராணம். காப்பு - வீற்றிருந்து சீவர்களைக் காக்கும் இடம். (௪௯)

பண்ணை மடந்தையரும் பாணரும் பாய்பரியும்
பண்ணையிசை பண்பாரு நல்லூரே—யெண்ணரிய
மாமாய வீட்டினான் மாயுவரு வாஞ்சூர
மாமாய வீட்டினான் வாழ்வு.

(கு—ரை): இரண்டாம் அடி பெண்களுக்கும் பாணருக்கும் குதிரைக்கும் சிலேடை. பண்ணை மடந்தையர் - வயலில் வேலைசெய்யும் பெண்கள். பண்ணை இசை பண்பு ஆரும் - கூட்டமாகி இணங்கி நிற்றலை வேறு வேறாகப் பொருந்துகின்ற. பண்ணை - மகளிர் கூட்டம். பண்பு - வகை. பாணர் - பாடகர். பண்ணை இசை பண்பு ஆரும் - இராகத்தை இன்னிசையோடு பாடுந் தன்மை

நிரம்பியிருக்கின்ற. பரி - குதிரை. பண்ணை இசை பண்பு ஆரும் - கலணை இடப்படுதலால் தனது தொழிலுக்குத் தகுதியுடையதாய் இருக்கின்ற. இசை - இசைந்து. பண்பு - தகுதி. பந்தியிலே நிற்றலைத் தகுதியாகப் பொருந்துகின்ற எனினும் ஆம். பணை - பந்தி. பண்ணை பணை என நின்றது விகாரம். இசைதல் - சேர்தல் - நிற்றல். "பணை நிலைப்புரவி" என்னும் பட்டினப்பாலை (அடி 31)ச் சொற்றொடரில் பணை பந்தியெனப் பொருள் படுதல் காண்க. எண் அரிய - சீவர்கள் சிந்தனைக்கு எட்டாத. மாமாய வீட்டினான் - சுத்த மாயாபுவனத்தை உடையவர். சூரமாமாய வீட்டினான் - சூரனாகிய மாமரவுருவம் அழியும்படி வெட்டினவர். (௫௦)

போதப் பொலிவுள்ளார் முத்தீ நலம்பொருந்தி
யோதக் கடல்போ லுயர்நல்லை — பாதக்
கனகச் சிலம்பன் கலைப்புலவன் செவ்வே
ளனகச் சிலம்ப னகம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் கடலுக்கும் சிலேடை. (நல்லூருக்கு) போதப் பொலிவு உள்ளார் - ஞான முதிர்ச்சியுடைய அந்தணர்களுக்குரிய. முத்தீ - மூன்று வகையாக வளர்க்கப்படும் யாகாக்கினி. அவை: ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்பன. நலம் - நன்மை. அந்தணர் ஓம்பும் வேள்வித்தீயால் பல நலமும் உளவாகின்றன என்பது. (கடலுக்கு) போதப் பொலிவு - மிக்க பொலிவு. போத - மிக. முத்தூஉ - முத்துக்களைக் கொடுக்கின்ற. ஓதம் - நீர். பாதம் - திருவடிகளில். கனகச் சிலம்பன் - பொற்சிலம்புகளை யுடையவர். கலைப்புலவன் - கலைகள் யாவற்றையும் உணர்ந்த தலைமைப் புலவர். செவ்வேள் - முருகக் கடவுள் திருநாமங்களுள் ஒன்று. கருவேளும் ஒருவன் உளனாகலிற் செவ்வேள் எனப்பட்டது. கந்தவேள்

என்பதும் அது. கருவேள் - மன்மதன். அநகம் - அமலம். சிலம்பு - மலை. குன்றுதொறாடும் குமரனாதலின் சிலம்பன் எனப்பட்டது. சிலம்பு கந்தமலையுமாம். (௫௧)

ஓவர் புனையோ வியம்புதுக்க மேனிலையிற்
றேவரெம ரென்றணையுஞ் சீர்நல்லை - பூவுலகங்
காப்பா னளிப்பானற் கஞ்ச னெனவனைத்துங்
காப்பா னளிப்பான் களம்.

(கு—ரை): ஓவர் - சித்திரம் எழுதுவோர். புனை - அழகு. சீலையுமாம். ஓவியம் - சித்திரம். புதுக்கல் - புதியனவாக அமைத்தல். மேல்நிலை - மேல்மாடம். மேல்நிலையிற் புதுக்க என இயையும். தேவர் எமர் என்று அணையும் - தேவர்கள், அச் சித்திரங்களைத் தமது சுற்றத்தவர் என்று எண்ணி அடைகிற இமையா நாட்ட ஒப்புமையால் ஓவியங்களைத் தமர் என எண்ணித் தேவர் அணைந்தனர் என்க. காப்பான் - காப்பவரும், அளி நல் பால் கஞ்சன் என - வண்டுகள் மொய்க்கின்ற விரும்பப்படும் வெண்டாமரை ஆசனத்தனாகிய பிரமனைப் போல. அனைத்தும் - யாவற்றையும் காப்பான் அளிப்பான் - அப்பிரமனைச் சிறையில் வைத்த காலத்துப் படைத்தற்றொழிலைச் செய்தவருமாகிய முருகக் கடவுள் பால் - வெண்மைநிறம், வண்டுகள் மொய்க்கின்ற கஞ்சம் என்பது சாதியடை. காப்பு - காவல் - சிறை.

சங்கந் தரியாமா லானா ளலர்தழீஇ
யங்கம்பொன் னாயு மனம்வெறுத்தா — ளெங்கும்
விரும்பவனி போற்றுநல்லை வேலர் மயின்மேல்
வரும்பவனி கண்டுவந்த மான்.

(கு—ரை): வேலர் வரும் பவனி கண்டு உவந்த மான் மால் ஆனாள்; அனம் வெறுத்தாள் என இயையும். மான் - மான் போன்ற பெண். எங்கும் விரும்பு வேலர், அவனி போற்று நல்லை வேலர் எனத் தனித்தனி இயையும். எங்கும் என்பது மூவுலகத்தையும் உணர்த்தி நின்றது. அவனி - பூமியிலுள்ளோர். வேலர் - வேற்படையை யுடைய முருகக் கடவுள். பவனி - திருவுலா. சங்கம் தரியா மால் ஆனாள் - சங்கு வளையல்களை இழந்து மயக்கமுடையவள் ஆனாள் தரியா - தரியாது. வினையெச்சம் ஈறுதொக்கது. அலர்தழீஇ - பழிமொழியைப் பொருந்தி. அங்கம் பொன்னாயும் அனம் வெறுத்தாள் - உடல் பொன்னிறம் போன்ற பசலை அடையப் பெற்றதோடு சோற்றையும் வெறுத்தாள். அன்னம் அனமென நின்றது விகாரம். இது கடவுள் மாட்டு மானிட மகளிர் நயந்த பக்கத்தில் இறைவன் உலாக்கண்டு மயக்கமுற்ற தலைவி துன்பத்தைத் தோழி கூறியது. சங்குதரியாமல் இருந்தும் விஷ்ணுவானாள் என்பதும், தாமரை மலரில் வீற்றிருத்தலாலும், உடலம் பொன்னிற மடைதலாலும் பிரமனாகியும் அன்னவாகனத்தை வெறுத்துநிற்கின்றாள் என்பதும் தொனியாற் பெறப்பட்ட பொருளாம். பிரமனை இரணிய கருப்பன் என்பர். இரணியம் - பொன். சங்குதரியாத விஷ்ணுவானாள் சங்கைத் தரித்து விஷ்ணுவானாள் என்னும் பொருள்களும் தோன்ற நிற்கின்றன. தரியா - தரியாத. பெயரெச்ச ஈறு தொக்கது. தரியா - தரித்து வினையெச்சம்.

பொங்கர்சூழ்ந் தங்கார் முகச்சிகரிப் பொற்பினாற்
றங்கமலை போலுந் தனிநல்லை — யங்குளத்திற்
கோட்டம் புரிந்தார் குறிக்கரியார் நன்குமர
கோட்டம் புரிந்தார் குலம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் இமயமலைக்கும் சிலேடை. (நல்லூருக்கு) பொங்கர் - இலவமரம். அம்கார் முகச்சிகரிப் பொற்பினால் - நீர் பொருந்திய முகில்கள் தவழு

கின்ற கோபுரத்தினது அழகால். (இமயமலைக்கு) பொங்கர் - சோலை. அம்கார் மூகம் - அழகிய மூங்கில். சிகரி - கொடுமுடி. பொற்பு - பொலிவு. தங்கமலை - பொன்மலை; இமயம். இமயம் பொன்மலை எனப்படுதல் இலக்கியங்களில் பெருவழக்கு. "பொன்மலைப் புலிவென்றோங்க" என்பது பெரியபுராணம். கோட்டம் புரிந்தார் - வஞ்சனையைச் செய்பவர். குறிக்க அரியார் - நினைத்தற்கு அரியவர். தொகுத்தல் விகாரம். குமரகோட்டம் - காஞ்சீபுரத்துள்ள சுப்பிரமணியத் தலம். புரிந்தார் - விரும்பி எழுந்தருளி இருப்பவர்.

என்னீலங் கட்கிடைந்ததென் னுமின்னார்மொய்ந்நகை
லந்நீல மாங்கே யலர்நல்லை — பொன்னூர்த் [யா
திருக்குமரி ஞாங்கரான் றெவ்வொடன்பர் நெஞ்சிற்
றிருக்குமரி ஞாங்கரான் சேர்வு.

(கு—ரை): நீலம்கட்கு இடைந்தது என் என்னும் மின்னார் என இயையும். நீலம் - நீலமலர். கட்குஇடைந்தது என் - எமது கண்களுக்குத் தோல்வியடைந்தது என்னை? என்னுமின்னார் மொய் நகையால் - என்று கூறும் பெண்களது பெருமிதமான சிரிப்பினால், மொய் - வலிமை. பொன் ஊர். பொன்னுலகம். திருக்குமரி - தெய்வயானையம்மை. ஞாங்கர் - பக்கம். தெவ் - பகைவர். திருக்கு-மயக்கம். அரிதல் - அறுத்தல் - அழித்தல். ஞாங்கர் - வேல்.

பகைவரையும் அன்பர் நெஞ்சில் உள்ள மயக்கத்தையும் அழிக்கும் வேற்படையை உடையவர். சேர்வு - இடம். (௫௫)

வாவிக் கயலுகளும் வான்கவரிக் கன்றுடனே
வாவிக் கயலுகளு மாநல்லை — தூவிப்
பொருந்தோகை மேற்கொண்டான் பூம்புனத்தோர்
பொருந்தோகை மேற்கொண்டான் பூ. [பூவை

(கு—ரை): கயலுகளும் கன்றுடனே வாவிக்கு அயல் வாவி உகளும் என இயையும். கயல் - கயல்மீன்கள். உ சாரியை. கவரிக்கன்று-கவரிமான் கன்று. வாவி - தடாகம். அயல் - பக்கம். வாவி - குதித்து. உகளுதல் - புாளுதல்- துள்ளிப் பாய்தல். திணைமயக்கம். மருதமும் முல்லையும் மயங்கியது. தூவி - உச்சிச்சூட்டு. தூவித்தோகை பொருந்தோகை எனத் தனித்தனி இயையும். பொருதல் - போர் புரிதல். தோகை - சூரனாகிய மயில். சூரன் மயில் உருவமாகி மாறிய பின்னும் போர்புரியுஞ் செருக்குடன் வந்தான் என்பது கந்தபுராணம். (சூரபன்மன் வதை. செ . 499). மேற்கொள்ளல் - வாகனமாகக் கொள்ளுதல். புனம் - தினைப் புனம். ஓர் பூவை - ஒப்பற்ற வள்ளிநாயகியார். பொருந்து ஓகை மேற்கொண்டான் - தம்மை அணைதலால் ஆய உவகையைச் சிறப்பாக உடையவர். உவகை ஓகை என மரீஇயிற்று (௫௬)

எழிசைநன் கந்தருவ மேந்திரதஞ் சேர்நலத்தாற்
சூழுங் கதிர்போலுந் தூநல்லை — யேழையர்தம்
பொய்க்கதிர்கா மத்தினார் புந்தியுறார் பைந்தடஞ்சூழ்
செய்க்கதிர்கா மத்தினார் சேர்வு.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் சூரியனுக்கும் சிலேடை. (நல்லூருக்கு) எழிசை நன்கந்தருவம் ஏந்து இரதம் - சப்த சுரங்கள் அமையப் பெற்ற இசைப்பாடல்களைக் கேட்டலால் அடையப்படும் இன்பம். ஏந்துதல் - ஏற்றல்; கேட்டல். (சூரியனுக்கு) எழ் இசை நன் கந்தருவம் ஏந்து இரதம் - எழாகப் பொருந்திய நல்ல குதிரைகளால் இழுக்கப்படுகிற தேர். ஏந்துதல் - தாங்குதல். சூழ்தல் - மஹாமேருவை வலம் வருதல். கதிர் - சூரியன். ஏழையர் - பெண்களது. பொய்க்கு அதிர் காமத்தினார் புந்தி உறார் - பொய்யான மயக்கத்தினால் மனம் அலைகின்ற காமுகாது உள்

ளத்தில் பொருந்ாதவர். பைந்தடம் - பசிய மலைப்பக்கம். தடம் - வாவியுமாம் செய்கதிர் காமத்தினர் - வயல்களை யுடைய கதிர்காம மென்னும் திவ்விய க்ஷேத்திரத்தை உடையவர். சேர்வு - இடம். (௫௭)

வன்ன வுவளகத்து மாழை தவழகத்து
மன்னம் வழங்கு மணிநல்லை — முன்னயனை
யுட்காந் தளையிட்டா ருச்சியினிற் செச்சையந்தா
ருட்காந் தளையிட்டா ரூர்.

(கு—ரை): இரண்டாமடி நீர்நிலைகளுக்கும் வீடுகளுக்கும் சிலேடை. வன்ன உவளகத்தும் அன்னம் வழங்கும். வன்ன உவளகம் - அழகிய நீர்நிலை. அன்னம் வழங்குதல் - அன்னப்பட்சிகள் இருத்தல் மாழை தவழ் அகத்தும் அன்னம் வழங்கும். மாழை தவழ் அகம் - பொன்னல் அலங்கரிக்கப்பட்ட வீடுகள். மாழை - பொன். அன்னம் வழங்கல் - இரப்போர்க்குச் சோறு கொடுக்கப்படுதல். அணி - அழகு. அயன் - பிரமன். உட்கு ஆம்தளை இட்டார் - அஞ்சுதற்குரிய விலங்கைப் பூட்டினவர் செச்சை - வெட்சி. தார் - மாலை. காந்தள் - கார்த்திகைப்பூ. (௫௮)

தண்டாளி னம்புயமுந் தார்வயவ ரம்புயமும்
வண்டா சனங்கொள்ளு மாநல்லை — தண்டாத
வேகத் தடுத்தான் விடுமிரத ஞாலநிலை
யாகத் தடுத்தா னகம்

(கு—ரை): இரண்டாம் அடி தாமரைப் பூவுக்கும் வீரர் புயத்துக்கும் சிலேடை. தண்தாளின் அம்புயம் வண்டு ஆசனம் கொள்ளும். தண்தாளின் அம்புயம் - குளிர்ச்சி பொருந்திய நாளத்தையுடைய தாமரைப்பூ. அசனம் கொள்ளுதல் - தேனகிய உணவைக் கொள்ளுதல். அசனம் - உணவு. ஆசனம் நீட்டல்விகாரம். தார்வயவர் அம்புயம் வண்டு ஆசனம் கொள்ளும் - மாலையை அணிந்த படைத் தலைவருடைய அழகிய புயங்களில் அம்பினலாய வடுக்கள் இருக்கப்பெறுதல். வண்டு - அம்பு. அதனலாய புண்ணுக்கு ஆகுபெயர். வீரர் உடலில் ஆயுதத் தழும்புகள் அமைந்திருத்தல் அவர் ஆண்மைக்கு அழகு என்ப. "விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள், வைக்குந் தன்னளை யெடுத்து" என்பது தேவர் குறள். (அதி. 78. படைச்செருக்கு - செ. 6.) தண்டாத வேகத்து அடுத்தான் விடும் ஞால இரதம் நிலையாகத் தடுத்தான் - நீங்காத வேகத்தோடு எதிர்த்து வந்தவனகிய சூரன், வீரவாகு தேவர் முதலியோரையும் பூதகணங்களையுங் கவர்ந்து செல்லும்படி, எவிய இந்திரமா ஞாலத்தோரை மேல் இயங்காதவாறு தமது முன்னிலையில் நிற்கும்படி தடுத்தவர். இரதஞாலம் என்பதனை ஞால இரதம் என மாற்றுக. ஞால இரதம் - இந்திரமா ஞாலத்தேர். (௫௯)

கற்கடக வில்லாற் கலைவளருங் காட்சியா
லற்கதிரை யொப்பாகு நல்லூரே — முற்கிரன்
சொற்கா மரத்தா னணிதூய மாலையான்
பொற்கா மரத்தான் புரம்.

(கு—ரை): முதலாமடி நல்லூருக்கும் சந்திரனுக்கும் சிலேடை. (நல்லூருக்கு) கல்கடக இல்லால் - கல்வினல் ஆய மதில்சூழ்ந்த வீடுகளால். கலை வளரும் காட்சியால் - நூல்களை மேலும் மேலும் படித்தலால் உளவாகும் அறிவின் தோற்றத்தால். அஃதாவது "மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" (குறள்) என்றவாறு. கலைகள் யாவற்றையும் இடையறாது கற்று அறிவான் மேம்படும் படிப்பாளிகளை யுடையது நல்லூர் என்பது. (சந்திரனுக்கு) கற்கடக இல்லால் - கற்கடக ராசியாகிய வீட்டினை யுடைமையால். கற்கடகராசி சந்திரனுக்கு ஆட்சியான வீடு என்பது சோதிட

நூல் கலைவளரும் காட்சி - பூர்வபக்கத்தில் உடற்பாகம் முறையே வளரும் தோற்றம். அற்கதிர் - சந்திரன். அல் - இரா முன்-பண்டைக்காலம். கீரன்-நக்கீரர் என்னும் புலவர் பெருமான். சொல் காமரத்தான் - சொல்லழகோடு. காமரம்-அழகு. தூயமாலை - தெய்வீகம் வாய்ந்த திருமுருகாற்றுப் படை என்னும் பாமாலை. பொற்காமர் - அழகிய உருவமைந்த மன்மதன். அத்தான்-மைத்துனர். புரம் - இடம்.

என்னாசை யம்பரமே லானே னினிநாண
மென்னாசை யம்பரமே யாதலால்—முன்னொருநாட்
டந்தார் வந்தாரார் நல்லூரார் தழைக்கடப்பந்
தந்தார் வந்தாரார் தனி.

(கு—ரை): என் ஆசை - என் காதலை. அம்பரம் மேல் ஆனேன் - அழகிய பரம்பொருளாகிய கடவுளிடத்தே வைத்துவிட்டேன். அம்பரம் ஆசையே ஆதலால் இனி நாணம் என்-எனக்கு உடையும் திக்குகளேயாதலால் (நிர்வாணி) மேல் நாணம் என்பதே யில்லை. என் என்னும் வினா இன்மை குறித்து நின்றது. நல்லூரார் முன் ஒருநாள் தம் தழை கடப்பந் தார் தந்து ஆர்வம தாரார் (இப்பொழுது) தனிவந் தார் (இவர்) ஆர் என இயையும். நல்லூரார் - நல்லூர்ப்பதியில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள். தம்தழை கடப்பந்தார் - தமது பொலிவாகிய கடப்பமலர் மாலையை. ஆர்வம் - விருப்பம்; அருள். கடவுள்மாட்டு மானிட மகளிர் நயந்த பக்கம். தழை கடப்பந்தார் - தளிர்கொண்ட கடப்பம்பூமாலை எனினும் ஆம். தனிவந்தார் ஆர் - தூதாகச் சென்றும் அவரை உடன் கொண்டுவராது தனியே வந்தவர் யார். எனக்குத் துன்பந் தந்தமையால் தூதாகச் சென்ற இவர் எனக்கு உரியவர் அல்லர். அன்னியர் போலும் என்றபடி. தூதாகச் சென்றதை நோக்கிக் கூறியது. "சந்தனம் சும்மாவரிற் பூசலாம்" என்னும் ஆன்

றோர் வாக்கும் ஈண்டு நோக்கற்பாலது. அஃதாவது தூதாகச் சென்ற அன்னம் தலைவரை உடன்கொண்டு வராமல் தனியே வந்தால் கலகமாம் என்பது. சந்து - தூது. அன்னம் அனமென நின்றது. (சுக)

நந்திக் கிளையா னயக்குங் குழக்கன்றுந்
தந்திக் கிளையாத் தனிநல்லை—வந்திக்கா
யன்றா றுடையா தடைத்தான்சே யக்கரங்க
ணன்றா றுடையா னகர்.

(கு—ரை): நந்திக் கிளை ஆன் - நந்திதேவருக்கு இனமாயுள்ள பசுவை. நயத்தல் - விரும்புதல். விரும்பிப் பால் பருகுதல் என்பது. குழக் கன்று - இளங்கன்று. தந்திக்கு இளையா - யானைக்குத் தோல்வியடையாத. பெயரெச்சம் ஈறு தொக்கது. வலிமை மிகுதி கூறப்படுதலால் இதனை விறல்கோளணி என்ப. தனி - ஒப்பற்ற. வந்திக்கா- செம்மனச் செல்வி யென்னும் அடியவள் பொருட்டாக. ஆக என்பது ஆ என நின்றது. ஆறு - வைகைநதி. அடைத்தார் சேய் - கூலியாளாகச் சென்று அடைத்த சோமசுந்தரக் கடவுளுக்குப் புதல்வர். நன்று ஆறு அக்கரங்கள் உடையான் - நன்மையைத் தருகின்ற சடக்கர மந்திரத்தை உடையவர்.

சட் (ஷட்) - ஆறு. அக்கரம் - எழுத்து. சட்+அக்கரம்=சடக்கரம். சடாக்கரம் என்பது சிதைவு.

வல்விலங்கே தன்பேர்ப் பொருள்பூண்ப வாய்மறந்துஞ்
சொல்விலங்கா நல்லோர்வாழ் தூநல்லை—கல்விலங்கல்
வேற்றானை யினட்டான் மேலவரைத் தான்பதியா
மாற்றானை யினட்டான் வைப்பு.

(கு—ரை): விலங்கு - மிருகம். சொல்விலங்கா நல்லோர் - சொல்லில் மாறுபடாத நல்லொழுக்கமுடையவர்.

விலங்குதல் - மாறுபடுதல். சொல்லியவாறே தவறாது ஒழுகுபவர் என்பது. கல்விலங்கல் - கல்மலை; கிரவுஞ்சகிரி. வேல் தானையின் அட்டான் - வேற்படையினால் அழித்தவர். தான் பதியா மேலவரை மால் தானையில் நட்டான் - தானே சேனாதிபதியாகியமர்ந்து தேவர்களைப் பெரிய சேனைகளாக நாட்டினவர். மேலவர் - மேலுலகவாசிகளாகிய தேவர்கள். தேவ சேனாதிபதி என்பது முருகவேள் திருநாமங்களுள் ஒன்று.

"சேநாநி" என்பது அமர நிகண்டு. தானையில் - சேனைகளாகிய நிலையில். நாட்டுதல் - நிறுத்துதல். பதியாக பதியா எனச் செய்யுண் முடிபெய்தி நின்றது. (சுங)

செந்நெல்லும் வேள்வித் திறத்தினருங் கன்னனுமே
கன்னனிலை காட்டுங் கவினல்லை — மன்னுசிவ
னுண்மைகோ லானிறுத்தா னெட்டிவருஞ் சூர்மாயத்
திண்மைகோ லானிறுத்தான் சேர்வு.

(கு—ரை): இரண்டாமடி நெற்பயிருக்கும் வேள்வி புரிவோர்க்கும் வெல்லக்கட்டிக்கும் சிலேடை. செந்நெல் கன்னல் நிலைகாட்டும். கன்னல் - கரும்பு. கரும்புபோலச் செழித்து வளர்ந்திருக்கின்றதென்பது. காட்டுதல் - ஒத்திருத்தல். வேள்வித் திறத்தினர் கன்னன் நிலைகாட்டும் - பலவகையான யாகங்களைச் செய்பவர் கொடைத்திறத்தால் கன்னனை ஒத்திருத்தல். கன்னன் - பாரத வீரருள் ஒருவன்; இடையெழு வள்ளல்களுள்ளும் ஒருவன். "கொடைக்குக் கன்னன்" எனப் போற்றப்படுதல் பெருவழக்கு. கன்னல் கல் நல் நிலைகாட்டும் - வெல்லக்கட்டி கல்லைப்போன்ற மிக்க வைரமுடையதென்பது. கன்னல் - வெல்லக்கட்டி. சிவனுண்மை - சிவபரத்துவம். சைவத் திறன் எனினும் ஆம். கோலால் நிறுத்தான் - ஞானசம்பந்தராய் அவதாரஞ்செய்து தமது நிறையோடமைந்த திருவாக்கினாலும் அரும்பெரும் செயலா

லும் நாட்டியருளியவர். "உறை புகலியூரிலன்று வருவோனே" (திருப்புகழ்) என முருகவேளைப் போற்றினார் அருணகிரிநாதர். அரிய மறைபொருளாகிய இதன் உண்மை ஈண்டு விரிக்கில் மிகப் பரக்கும். கோல் - நிறை. கோலால் என்பதற்கு கழுக்கோலில் சமணரை ஏற்றுதலால் எனினும் ஆம். ஒட்டுதல் வஞ்சினங் கூறுதல். வஞ்சினம் - சபதம். சூர்மாயத் திண்மை - சூரனது மாய வலிமை. கோலான் - இறுத்தான் - அம்பினால் அழித்தவர்.

வாழைநலி யக்குதிக்கும் வன்கடுவன் மாறாகத்
தாழையிள நீருகைக்குந் தண்ணல்லை — நாளுங்
குடத்தியரை வேட்டான் கொடுத்தவிரு கொம்மைக்
குடத்தியரை வேட்டான் குலம்.

(கு—ரை): நலிதல் - வருந்துதல். கடுவன் - ஆண் குரங்கு. தாழை - தெங்கு. உகைத்தல் - உந்துதல்; உதிர்த்தல். கடுவன் வருந்தும்படி அதன் செயலுக்கு மாறாக அதன்மேல் தாழை இளநீரை உகைக்கின்றதென்பது. குடத்தியரை வேட்டான் - முல்லைநிலப் பெண்களை விரும்பித் தழுவிய கிருஷ்ணவதாரமுடைய விஷ்ணு. நாளும் வேட்டான் என்பது கிருஷ்ணன் நித்திய பிரமசாரி என்னும் வேதவுண்மையை உணர்த்தி நின்றது. கொடுத்த - மக்களாகப் பெற்றுக்கொடுத்த. கொம்மைக் குடத்தியர் இருவரை - தனங்களாகிய குடங்களையுடைய வள்ளிநாயகி, தெய்வநாயகி என்னும் பெண்கள் இருவரை. குடம் போன்ற தனங்களை யுடையவர் என்பது. விகுதி பிரித்துக் கூட்டுக. கொம்மை - தனம். வேட்டான் - (அக்கினி சாட்சியாக) விவாகஞ் செய்தவர். (சுஉ)

புண்டரிக னீள்போகி போற்றிப் பணிகுதலாற்
புண்டரிக மாபுரநேர் நல்லையே—மண்டமரி

லார்ப்பினடைத் தானவர்சே ரண்ட நெறிவாளிப்
போர்ப்பி னடைத்தான் புரம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் சிதம்பரத்துக்கும் சிலேடை. (நல்லூருக்கு). புண்டரீகன் - தாமரையாசனத்தனாகிய பிரமதேவன். புண்டரீகம் - தாமரை. போகி - இந்திரன். நீள் என்பது மிகுதி என்னும் பொருட்டாய் வழியடியார்க்குரிய விமலகாம போகத்தை உணர்த்தி நின்றது. இந்திரன் வழியடியார்களுள் ஒருவன் என்பது திருவாசகம். (திருச்சாழல் செ. 12) (சிதம்பரத்துக்கு) புண்டரிகன் - வியாக்கிரபாத முனிவர். புண்டரிகம் - வியாக்கிரம்; புலி. போகி - பாம்பு - பதஞ்சலி முனிவர். நீள் என்பது ஞான ஒளியைக் குறிக்கும். புண்டரிகமாபுரம் - விராட் புருடனுக்கு இருதயகமலமாகி அமைந்த சிதம்பரம். மண்டு அமர் - நெருங்கிய போர். ஆர்ப்பின் நடை - ஆரவாரத்தோடு கூடிய செலவு. தானவர் - அசுரர். சேர் அண்டநெறி - திரள் திரளாக வந்த அண்டகடாக வழியை. வாளிப் போர்ப்பின் அடைத்தான் - அம்புகளால் மூடி அடைத்தவர். போர்ப்பு - போர்வை; மூடுதல். (௬௬)

பூசல் வளைக்கையார் பூங்குழலும் பொன்மலரும்
கேசரநன் காருங் கிளர்நல்லை—யாசினியிற்
செக்கரிந்து நேர்மலைந்தார் செல்வர் வடிவேலாற்
கொக்கரிந்து நேர்மலைந்தார் கோ.

(கு—ரை): இரண்டாமடி பெண்கள் கூந்தலுக்கும் தாமரைப் பூவுக்கும் சிலேடை. பூசல் வளைக் கையார் பூங்குழல் கேசரம் நன்கு ஆரும். பூசல்வளை - ஒலிக்கின்ற வளையல்கள். பூசல் - ஆரவாரம்; ஒலி. குழல் - கூந்தல். கேசரம் - வண்டு. நன்கு ஆரும் - (தேனை) அதிகமாக உண்ணுகின்ற. பொன்மலரும் கேசரம் நன்கு ஆரும்.

பொன்மலர் - இலக்குமி வீற்றிருக்குந் தாமரை மலர். கேசரம் - மகரந்தம். கிளர்தல் - வளத்தோடு கூடிய புகழால் மேம்படுதல். செக்கர் ஆசினியில் இந்து நேர் மலைந் தார் செல்வர் - செவ்வானத்தில் தோற்றும் பாலசந்திரனை அழகாகச் சூடினவராகிய சிவனது குமாரர். வடிவேல் - கூரிய வேற்படை.

கொக்கு நேர் மலைந்து அரிந்தார் - சூரனாகிய மாமரத்தை எதிர்த்துப் போர்புரிந்து அதனை இருபிளவாக வெட்டியவர். நேர் - நேராக; சரி பாதியாக எனினும் ஆம். கோ - இடம். (௬௭)

வான்புலவர் போல்வேளை வாழ்த்தும் புலவோருந்
தானமுதங் கொள்ளத் தருநல்லை — யூனா
ருடம்பிடிக்கைச் சீரா னுறுநரையஞ் சேலென்
றுடம்பிடிக்கைச் சீரா னுலகு.

(கு—ரை): இரண்டாம் அடி தேவர்களுக்கும் முருக வேளைப் போற்றும புலவர்களுக்கும் சிலேடை. வான்புலவர் - மேல் உலகிலுள்ள தேவர். அமுதம் - அமுது. வேள் - முருகக்கடவுள். புலவோருந்தான் - படிப்பினாலாய புலமையாளரும் தான் என்னும் அசை கட்டுரைச் சுவைபட நின்று வியப்பை உணர்த்திற்று. அமுதம் - முத்தி. தேவர்கள் அமுதத்தை அடைவது (உண்பது) போல வேளைவாழ்த்தும் புலவர்கள் அமிருதத்துவமாகிய முத்தி நிலையை அடைகின்றார்கள் என்பது. அ + மிருதத்துவம் - மரணமற்ற நிலை. மிருதம் - மரணம். அமிருதம் - அமிர்தம் - அமுதம்-முத்தி. ஊன் ஆர் உடம்பிடி - நிணந் தோய்ந்த வேற்படை. சீர் - அழகு. உறுநரை - தம்மையடைந்த பக்குவ சீவரை. அஞ்சேல் என்று - அஞ்சற்க என்று அபயாஸ்தமளித்து. உடம்பு இடிக்கைச்சீரான் - அவரது செடிசேர் உடலமாகிய அசுத்த

தனுவையழித்து அஃதாவது அமலதனுவாக மாற்றி நித்தியத்துவம் அளிக்கும் குருநெறியை உடையவர். இடிக்கை- இடித்தல் - அசுத்த பௌதிகங்களை நீறாக்கி அமல பௌதிகமாக மாற்றுதல்; பொற்சுண்ணமாக மாற்றுதல் என்பது. சீர் - முறை - குருநெறி. அஃதாவது சாதக யோகங்களென்பது. "செடி சேருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமை வைப்பான்" (திருவாசகம்) எனவும், "செடியாராக்கை அடியாரைச்சேர்தல் தீர்க்குந் திருமாலை" (திருவாய்மொழி) எனவும், "காமயாக்கை பொடிபடு நாளில் வாய்த்த கழலிணை காதலாற் கருதுமுணர் தருவாயே" (திருப்புகழ்) எனவும், பிறவுமாக வரும் பிரபல சுருதிகளால் பிணி மூப்புச்சாக்காடுகளுக்கு இடமாகிய அசுத்த சரீரம் அமலம் அடையப்பெறுதலாகிய துவிசத்துவமே முத்தி நெறி யென்பது நன்று வற்புறுத்தப்பட்டமை கண்டுகொள்க. (௬௮)

காரணி கையினண்ணிக் காவினன்மே னாடுறலால்
வாரணிமந் தாகினிநேர் மாநல்லை — நாரணன்றன்
மால்வளைசேர் கண்டன் மறமழித்தான் வான்வளரும்
பால்வளைசேர் கண்டன் பதி.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் கங்கைக்குஞ் சிலேடை. (நல்லூருக்கு) கா கார் அணி கையில் நண்ணி-சோலை மேக வரிசையை ஒருபால் பொருந்தி. இனன்மேல் நாடுறலால் - சூரியமண்டலத்தை அடைதலால். இனன் - சூரியன். (கங்கைக்கு) காரணி கையில் நண்ணி - உலக காரணியாகிய காமாட்சியம்மையாரது திருக்கரங்களிலே தோன்றி. காவினன் மேல் நாடு உறலால் - கற்பகச் சோலையை யுடையவனாகிய இந்திரனது பொன்னுலகத்தை அடைதலால். வார்அணி மந்தாகினி - நீளமாக ஒழுங்குறச் செல்லுகின்ற கங்கை. கச்சணிந்த தனங்களையுடைய கங்காதேவி என்பது தொனி

அர்த்தம். நாரணன் தன் மால்வளைசேர்கண்டன் - விஷ்ணு ஏவிய பெரிய சக்கரப்படையை அணிந்த கழுத்தினையுடைய வீரனாகிய தாரகனது. மறம் - மறத்தன்மை. வான் - தேவருலகம். பால்வளை சேர் கண்டன் - வெண்ணிறம் பொருந்திய சங்கு வளையல்களை யணிந்த தெய்வயானை அம்மையார் அடையப்பெற்ற நாயகர். பால்வளை - அன்மொழித்தொகை. கண்டன் - கணவன். (௬௯)

வேலிகவா மன்னவரு மெய்ம்மை யணங்கினருங்
கோலி னிறைகுன்றா நல்லூரே — மாலுதவு
மாதங்க மாகமுற வந்தருள்வா யைந்துகையாய்
மாதங்க மாகவென்றான் வாழ்வு.

(கு—ரை): இரண்டாம் அடி அரசர்களுக்கும் கற்புடை மகளிருக்கும் சிலேடை. வேல் இகவா மன்னவர் கோலின் இறை குன்றா - வேற்படையை விட்டு நீங்காத அரசர் செங்கோல் முறையினின்று சிறிதும் வழுவாத. மெய்ம்மை அணங்கினர் கோலின்நிறை குன்றா - தமது நாயகரையே தெய்வம் என்னும் வாய்மையைக்கடைப் பிடித்து ஒழுகும் பெண்கள் தராசுகோல்போல் நிறையுடைமையினின்றும் வழுவாத. மால் உதவும் மாது - விஷ்ணு பெற்றருளிய வள்ளிநாயகி. அங்கமுற - திருமேனியிற் பாகமாகப் பொருந்த. "ஐந்து கையாய் மாதங்கம் ஆக வந்தருள்வாய்" என்றான்.-"ஐந்து கையையுடைய விநாயகக்கடவுளே! யானை வடிவாக வந்து துணைபுரிக" என வேண்டிய முருகக் கடவுள். (௭௦)

கம்பை யிசையொலியாற் காமாரி மேலுறலா
னம்புகச்சி யொப்பாகு நல்லூரே — யம்பரகப்
பாலார்ந்த வாயன்கைப் பைந்தொடித னம்பொழியும்
பாலார்ந்த வாயன் பதி.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் காஞ்சிக்கும் சிலேடை. (நல்லூருக்கு) கம்பை இசை ஒலியால் - சங்குகளை ஊதுகின்ற ஓசையினால். காமேல்மாரி உறலால் - சோலையில் மேகங்கள் படிதலால். (காஞ்சிக்கு) கம்பை இசை ஒலியால் - கம்பாநதியில் அளாவி வீசுங் காற்றினால். இசைதல் பொருந்துதல் - அளாவுதல். ஒலி - காற்று. காமாரி - காமனை வென்ற சிவன் - ஏகாம்பரநாதன். நம்பு - சித்திமுத்திகளை அளிக்கும் முத்தி வாயிலாகிய காமாட்சி பீடமாக நம்பப்பட்ட. கச்சி - காஞ்சீபுரம். அம்பர் அகபால் ஆர்ந்த ஆயன் கை பைந்தொடி - அம்பரைத் தன்னகத்துக் கொண்ட பாற்கடலில் அறிதுயிலோடு பொருந்திய விஷ்ணுவின் தங்கையாகிய உமாதேவி. அம்பர் சமுத்திரத்திற் கண்டெடுக்கப்படும் விலையுயர்ந்த பொருள்களுள் ஒன்று. இங்கே பாற்கடலுக்குச் சாதியடையாயிற்று. பால் - ஆகுபெயர். ஆய்ன் - இடைச்சேரியில் வளர்ந்த கிருஷ்ணனாகிய விஷ்ணு. ஆயர் - இடையர். கை - தங்கையாகிய. பைந்தொடி தனம் பொழியும் பால் ஆர்ந்த வாயன் - பசியவளையல்களை யணிந்த உமையம்மையாரது திருமுலைகள் சொரிந்த பாலையருந்திய திருவாயை யுடைய முருகக் கடவுள். பைந்தொடி அன்மொழித்தொகை. பால் ஞானசம்பந்தராய் அவதாரஞ் செய்தபோது அருந்திய திருமுலைப்பாலை (ஞானப்பால்) உணர்த்தி நின்றது எனினும் ஆம். (எக)

மும்மொழிச் சிலேடை.

சாரங் கனிமொழியார் கண்ணுதல்போற் றாழ்குழலுஞ்
சாரங்கங் காட்டுந் தனிநல்லை—கீரங்கொள்
வெள்ளத் துறையான் வியன்மருகன் மெய்யற்றா
ருள்ளத் துறையா னுலகு.

(கு—ரை): இரண்டாமடி பெண்களுடைய கண்களுக்கும் நெற்றிக்கும் கூந்தலுக்கும் சிலேடை. சாரம் கனிமொழியார்கண் சாரங்கம் காட்டும் - இனிமை கனிந்த (முதிர்ந்த - நிரம்பிய) சொற்களைப் பேசும் பெண்களது கண்கள் மானைக்காட்டும். சாரங்கம் - மான். நுதல் சாரங்கம்காட்டும் - நெற்றிவில்லைக்காட்டும். காட்டுதல் - ஒத்தல். சார்ங்கம் சாரங்கம் என நின்றது. சார்ங்கம் - வில். குழல் - சாரங்கங் காட்டும் - கூந்தல் ஆபரணத்தைக் காட்டும். சாரங்கம் - ஆபரணம். வண்டு எனினும் ஆம். கீரம் கொள் வெள்ளத்துறையான் வியன்மருகன் - பாற்கடலிடத்துப் பள்ளிகொள்ளும் விஷ்ணுவினது மேன்மைதங்கிய மருமகன். கீரம் - பால். துறை - இடம். மெய்யற்றார் உள்ளத்து உறையான் - பொய்யருடைய அழுக்கு மனத்துத் தங்காதவர். உலகு - இடம். (எஉ)

நான்மொழிச் சிலேடை.

வார்காட்டும் பொற்குடத்தார்வாய்நகைகைகொந்தள
கார்காட்டப்பீலிமகிழ்காநல்லை—வார்கோட்டுத் [முங்
தானமுறக் காதினான் றானவவே தண்டமுட
னீனமுறக் காதினா னில்.

(கு—ரை): இரண்டாமடி பெண்களுடைய வாயிதழுக்கும் பற்களுக்கும் கைகளுக்கும் கூந்தலுக்கும் சிலேடை. வார் காட்டும் பொற்குடத்தார் வாய் கார் காட்ட, வார் - கச்சு. பொற் குடத்தார் - பொற் குடம்போன்ற தனங்களை யுடைய பெண்களது. வாய் கார் காட்ட - வாய் கார் காலத்தில் தோன்றும் இந்திரகோபத்தைக் காட்ட. இந்திரகோபம் - தமபலப்பூச்சி. இது செந்நிறத்தாற் பெண்களது வாய் இதழுக்கு உவமை. நகை கார் காட்ட - பற்கள் கார் காலத்துக்குரிய முல்லையரும்பைக் காட்ட. கை கார் காட்ட - கைகள் கார்காலத்துக்குரிய காந்தள்மலரைக்காட்ட. கொந்தளமுங் காரகாட்ட - கூந்தல் கார்காலத்தக்குரிய மேகத்தைக் காட்ட. கார் மேகமும் ஆம். பீலி - மயில். கார்காலத்தைக் கண்டு களிப்புறுதல் மயிலின் இயல்பு. வார்

கோட்டுத்தானமுறக்காதினன் - தாரகாசுரன். வார் - நெடுமை. (தொல்காப்பியம் - சொல் - உரி 21) கோடு - கொம்பு. தானம் - மதம். முறக்காது - சுளகுபோன்ற காது. தாரகாசுரன் யானைமுகம்போன்ற முகமுடையவனாதலால் இவ்வாறு கூறப்பட்டது. தானவ வேதண்டம் - அசுரனாகிய கிரவுஞ்ச மலை. வேதண்டம் - மலை. அசுரனே மலைவடிவமாகியமர்ந்தானென்பது புராணம். ஈனமுற - இழிவடையும்படி. காதுதல் - கொல்லுதல். தாரகனை அவன் வசித்த தானவ வேதண்டமுடன் ஈனமுறும்படி காதினன் என்க. (௭௫)

பூம்பா சிளங்கமுகின் றண்பாளை பொன்னிரத
வாம்பா டலக்குளையா மாநல்லை — தீம்பனச்சூர்
பட்டிகுடித் தேவனிலை பாடழிக்கும் வைவேலா
னெட்டிகுடித் தேவ னிடம்.

(கு—ரை): பூ - அழகு. பாசு - பசுமை. தண்பாளை - குளிர்ச்சியை யுடைய பாளை. பொன் இரத வாம் பாடலக்கு உளையாம் - சூரியனது தேரிற்பூண்ட பாய்ந்து செல்லுங் குதிரைகளுக்குப் பிடர்மயிர்போல் அமைகின்ற. வாவுதல் - பாய்தல். வாவும் வாம் என நின்றது. பொன்-சூரியன். இரதம் - தேர். பாடலம் - குதிரை. உளை - பிடர் மயிர். உயர்வு நவிற்சியணி. தீம்பன் அச்சூர்பட்டி குடித்து வல்நிலைபாடு அழிக்கும் வை வேலான் - கொடியவனாகிய அந்தச் சூரனது கிளையை முற்றாக அழித்து அவனது வலிய நிலையையும் பெருமையையும் ஒருங்கே அழித்த கூரிய வேற்படையை யுடையவர். ஏகாரம் தேற்றம். எட்டிகுடித்தேவன் - எட்டிகுடியென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள். எட்டிகுடி (எட்டுக்குடி) என்பது வேதாரணியத்துக்கு அண்மையிலுள்ள ஒரு சுப்பிரமணியத்தலம். வல் + நிலை = வன்னிலை. வனிலை என்பது விகாரம். (௭௬)

2507.

மால்வளர்வா னொச்சிசூழ் வாரிமணிக் கோட்டத்தா
னாலுதிணை யும்பொருந்து நல்லூரே — நாலாகுந்
தேன்சிலம்பு மட்டார் திருக்கடம்பர் சீருறைவாய்
வான்சிலம்பு மட்டார் வழி.

(கு—ரை): முதலாம் அடி சிலேடைவகையால் நல்லூரில் நாலு திணையுமுள்ளன வென்பதை யுணர்த்துகின்றது. நாலு திணை - நாலு வகையான நிலப்பகுதி. அவை: முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன. (நல்லூருக்கு) மால் வளர் வான் நொச்சி சூழ் வாரி மணிக்கோட்டத்தால் - மேகங்கள் படிகின்ற உயர்ந்த மதிலைச் சூழ்ந்த நீர் பொருந்திய அகழியையுடைய கோயிலால். கோயில் - அரசர் இல்லம் - அரண்மனை. (நாலு திணைக்கு) மால்வளர்வால் - திருமால் தெய்வமாய் இருத்தலினாலாய உயர்வினால். (முல்லை) நொச்சி - சிற்றூர் (குறிஞ்சி) சூழ்வாரி - சூழ்ந்திருக்குங் கடல் (நெய்தல்) மணிக் கோட்டம்-நெல் முதலிய தானியங்களையுடைய வயல்கள். மணிக் கோட்டம் அழகிய குளமுமாம். (மருதம்) நாலாகும் தேன் - நான்கு வகையான வண்டுக்கூட்டம். தேன் என்பது இங்கே வண்டுப் பொதுமையை உணர்த்தி நின்றது. நாலு வகையாவன: வண்டு தேன் சுரும்பு ஞிமிறு. சிலம்புதல் - ஒலித்தல். மட்டுஆர் திருக்கடம்பர் - தேன்பொருந்திய அழகிய கடப்பம் பூமாலையை அணிந்தவர். சீர் உறைவாய் வான் சிலம்பு - மிக்க செல்வம் அமைந்த இடமாகிய மேலாகிய கிரவுஞ்சகிரி. சீர் புகழுமாம். அடுதல் - கொல்லுதல் - அழித்தல். வழி - இடம். (௭௭)

வாரிக்கு நேரானை மண்டொலிபோ யெண்டிசையும்
வாரிக்கு நேராய் வளர்நல்லை — யோரியினங்
கந்தருவ மேவினார் காதலர்மான் கன்னிமணங்
கந்தருவ மேவினார் காப்பு.

(கு—ரை): வார் இக்குநேர் ஆலைமண்டு ஒலி - நீண்ட கருப்பங் கழிகள் இடப்படும் ஆலையினின்று வெளிப்படும் மிக்க ஓசை. வாரிக்கு நேராய் - கடலோசைக்கு ஒப்பாகி. வளர்தல் - எழுதல். வாரி - கடல். ஓசைக்கு ஆகு பெயர். ஓரி இனம் - நரிக்கூட்டம். ஓரி - நரி. கந்தருவம் ஏவினர் காதலர் - (மணிவாசகர் பொருட்டாக) குதிரைகளாக மாற்றிச் செலுத்திய சோமசுந்தரக் கடவுளது திருக்குமாரர். மான்கன்னி - மான்மகளாகிய வள்ளிநாயகியாரை. கந்தருவம் மணம் மேவினர் - கந்தருவ மணத்தால் அடைந்தவர். மணம் - விவாகம். காப்பு - இடம். எழுந்தருளி இருந்து சீவர்களை இரட்சிக்கும் இடம் என்பது.

வாதா யனமனையார் வாண்முகத்தால் வான்மதியை
வாதா யனஞ்சயங்கொண் மாநல்லை — பூதியமார்
கண்டங் கரியான் வலவனய னுய்யவே
கண்டங் கரியான்சேய் காப்பு.

(கு—ரை): அன்னம் அனையார் வாண்முகத்தால் வாதாய் வாண்மதியை வாதாயனம் சயங்கொள் மாநல்லை என இயையும். வாதாயனம் - பலகணி. அன்னம் அனையார் - நடையால் அன்னத்தை ஒத்த மகளிர். வாது ஆய் - வாது புரிந்து. வாள் - ஒளி. சயம் - வெற்றி. பூதியம் ஆர் கண் தங்கு அரி - உடலிற் பொருந்திய கண்களையுடைய இந்திரன். ஆன்வலவன் - பசுக்களை மேய்த்தவனாகிய விஷ்ணு (கிருஷ்ணன்). வலவன் - பாகன். இங்கே மேய்ப்பவன் என்னும் பொருளில் வந்தது. அயன் - பிரமன். உய்ய - மரணமடையாது வாழும்படி. கண்டம்கரியான் சேய் - (யாவரையும் கொல்லும்படி எழுந்த ஆலகாலவிஷத்தையுண்டு கண்டத்தில் நிறுத்தியமையால்) அக்கண்டத்திற் கரியநிறமமையப் பெற்ற சிவனது திருக்குமாரர். (எஎ)

கன்னிமணி வாழை கனங்குலையாற் காய்கதிரோ
னுன்னியுட னட்பா முயர்நல்லை—பன்னொ
ருருத்திரமா னத்துப்பா ரோங்கயிலார் காம
ருருத்திரமா னத்துப்பா ரூர்.

(கு—ரை): கன்னி - இளமை. மணி - அழகு. கனம் குலை - பெரிய குலை. கதிரோன் உன்னி உடன் - சூரியனது குதிரைகளோடு. உன்னி - குதிரை. உயர்வு நவிற்சியணி. பன்னொர் உருத்திர மான துப்பார் - பதினொரு உருத்திரராகிய வலிமை பொருந்திய படைக்கலங்களை யுடையவர். மானம் - வலிமை. துப்பு - படைக்கலம். உருத்திரர் பதினொருவரும் முருகக்கடவுளுக்குப் படைக்கலங்களாகி அமைந்தனர் என்பது புராணம. ஓங்கு அயிலார் - வலிமைமிக்க வேற்படையை உடையவர். காமர் உரு திரமானத்து உய்ப்பார் - தமது மெய்யடியாருடைய அழகிய அமல வடிவங்களை நிலையான விமானவாயிலாகச் சிவலோகத்திற் சேர்ப்பவர். உய்ப்பார் என்பது உப்பார் என நின்றது. (எஅ)

எண்கோட் டகத்து மெழின்மலர்ப்பூங்கோட்டகத்துந்
தண்கோட் டலவன் றவழ்நல்லை— வெண்காட்டு
ளாடி முருகா ரடியவர்க்குக் காட்சிதரு
மாடி முருகா ரகம்.

(கு—ரை): இரண்டாமடி கோபுர சிகரத்துக்கும் குளக்கரைக்கும் சிலேடை. எண்கோடு அகத்தும் - மதிக்கப்படுகிற கோபுர சிகரத்திலும். கோடு - சிகரம். அகம் - இடம். தண் கோட்டுஅலவன்தவழ் - குளிர்ச்சி பொருந்திய பிறைச்சந்திரன் தவழுகின்ற. கோடு - வளைவு. எழில் மலர் பூம்கோட்டகத்து - அழகிய மலர்களின் பொலிவையுடைய குளக்கரைகளில். கோட்டகம் - குளம். கரையை உணர்த்திற்று. கோடு தண் அலவன் - வரியினை

யுடைய எளிய (இகழத்தக்க) நண்டு. வெண்காடு - திருவெண்காடு என்னுந் தலம். ஆடி அடியவர்க்கு முருகார் அடியவர்க்கு எனத் தனித் தனி இயையும். ஆடி அடியவர்க்கு நடனம் புரிந்த சிவனது அடியவர்க்கு; சிவனடியார்க்கு. சிவபிரான் திருவெண்காட்டில் அகோர வீரபத்திர வடிவு கொண்டு காளியோடு ஆடி அவளைத் தோல்வியடையச் செய்தவர் என்பது புராணம். முருகு ஆர் அடியவர்க்கு - "மணங்கமழ் தெய்வத்து இளநலம்" என்னும் சிவமணந் திகழும் அடியவர்க்கு. முருகு - மணம். காட்சிதரும் ஆடி முருகார் - அவருள்ளத்துக் குருதரிசனம் எனப்படும் காட்சியை யளிக்கும் கண்ணாடிபோன்ற தெய்வ வடிவமாகிய ஒளியுருவம் அமையப்பெற்றவர். இருவினை ஒப்பு மலபரிபாகம் கைவரப் பெறுதலால் முத்திவாயில் என்னும் அமல முதற்படி கண்ட மெய்யடியார் தம்முள்ளே குரு தரிசனம் பெறும் பெற்றி இதுவேயென அறிதற்பாற்று. "உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கிடில், கண்ணாடிபோலே கலந்திருந்தானே" என்பது திருமந்திரம். "கண்ணாடி தன்னுள் ஒளிபோல் உடம்பதனுள் உள்நாடி நின்ற ஒளி" என்பது ஒளவை குறள். ஆடி - கண்ணாடி. முருகு - தெய்வத்தன்மை. இங்கே ஒளிவடிவை யுணர்த்தி நின்றது. "முருகுறழத் தலைச் சென்று" என்னும் மதுரைக்காஞ்சி (அடி 185)ச் செய்யுட்பாகத்தில் முருகு தெய்வத்தன்மையெனப் பொருள் படுதல் காண்க. முருகார் என்பதற்கு இளைய குமாரர் எனவும் திருவிழாவை யுடையவர் எனவும் பொருள்கொண்டு வெண்காட்டுள் ஆடிய சிவபிரானது குமாரர் எனவும், ஆடிமாசத்து நிகழும் திருவிழாவை யுடையவரெனவும் கூறினும் ஆம். முருகு - குமாரர்; திருவிழா.

தானமருண் மாவுந் தரணிபரும் வானவர்போற்
றானம் பொருந்துந் தனிநல்லை —தேன்வனத்தார்

மன்பர சுந்தரத்தார் வள்ளிசுர வேழஞ்சேர்
மன்பர சுந்தரத்தார் வாழ்வு.

(கு—ரை): இரண்டாம் அடி யானைக்கும் அரசருக்கும் தேவர்களுக்கும் சிலேடை. தானமருள் மா தானம் பொருந்தும் - மதத்தால் களிப்புறுகின்ற யானை பந்தியை அடைகின்ற. தானம் - பந்திபாகிய இடம். தானம் - நீராடலும் ஆம். தரணிபர் தானம் பொருந்தும் - அரசர் இரப்போர்க்கு ஈதலைச் செய்கின்ற. தரணி - பூமி. பர் - காப்பவர். பா - காத்தல். தானம்-கொடை. வானவர் தானம் பொருந்தும் - தேவர்கள் தமது உலகில் இருத்தல். தானம் - தேவருலகம். தேன்வனத்தார் மன்பரசுந்தரத்தார் - தேன் பொருந்திய துழாய் மாலையை யணிந்த தலைவராகிய விஷ்ணுமூர்த்தி வணங்கிப் போற்றும் பெருமையை யுடையவர். வள்ளி சுர வேழம் சேர் மன் பர சுந்தரத்தார் - வள்ளிநாயகியாரும் தெய்வயானை அம்மையாரும் இருபுறமும் சத்தியாகிப் பொருந்திய நிலையான மேலாகிய அழகிய திருவுருவப் பொலிவினை யுடையவர். சுந்தரம் - அழகு. (அ0)

கீதவிசை யால்வெடிபோய் நீள்கிடங்கின் மீள்வாளை
சீதமுனி போலுந் திருநல்லை—யோதமர
ரிட்ட விலங்கறுத்தா னெல்லரியவ் வானவரை
யிட்ட விலங்கறுத்தா னில்.

(கு—ரை): கீத இசை - வண்டுகளுடைய ரீங்காரத் தொனி. வெடிபோய் - துள்ளி எழுந்துபோய். வெடித்து என்பது வெடி என நின்றது. வெடித்தல் - மேல் எழுதல். கிடங்கு - அகழி. சீதமுநி - வானவில். சீதம் - முகில். முநி - வில். ஓது அமரர் இட்ட இல்லம் கறுத்தான் எல் அரி - பூவுலகவாசிகளால் போற்றப்படும் தேவர்கள் விருப்போடு வீற்றிருக்கும் வீடாகிய பொன்னுலகத்தை எரி ஊட்

டியமையால் அதனைக் கருநிறமடையச் செய்தவனாகிய பானுகோபன். இட்ட - இஷ்ட - விருப்பமான. இல்லம் வீடு. இலம் விகாரம். எல் - சூரியன். அரி - பகைவன். பானுகோபன் சூரனுக்கு மூத்த மகன். அவ்வானவரை இட்ட விலங்கு அறுத்தான் - அத்தேவர்களுக்குப் பூட்டிய விலங்கை அறுத்து அவரைச் சிறையினின்றும் விடுதலை செய்தவர். இடுதல் - பூட்டுதல். (அக)

சுருதி யிசைவிதிசேர் வாணிமினார் சூழ்வாற்
பிரம பதம்போலும் பேர்நல்லை—யருளியமா
தாவ மலையகத்தான் றாரகத்தான் வேங்கடமாந்
தேவ மலையகத்தான் சேர்வு.

(கு—ரை): முதலடி நல்லூருக்குஞ் சத்திய உலகத்துக்கும் சிலேடை. (நல்லூருக்கு) சுருதி இசை விதி சேர் வாணி மின்னார் சூழ்வால் - சுதியோடு கூடிய இசையை விதிப்படி பாடுதலமைந்த வாக்கினையுடைய பெண்களது உபாயமான ஒழுக்கத்தால். மின்னார் - மின்னலை யொத்த காந்தியினை யுடைய பெண்கள். (சத்திய உலகத்துக்கு) சுருதி இசை விதி - வேதங்களைப் பாடிய பிரமதேவனும். சேர் வாணி மின்னார் - அவனுக்கு மனைவியராய் அமைந்த சரஸ்வதி முதலிய பெண்களும். மின்னார்-பெண்கள். மினார் விகாரம். மின் - பெண். சூழ்வு - சூழ்ந்திருத்தல். பிரம பதம் - பிரமன் உலகமாகிய சத்தியவுலகம். அருளிய மாதா அமலை அகத்தான் - தம்மைப் பெற்றருளிய மாதாவாகிய உமாதேவியாரது உள்ளத்து இருப்பவர். தாரகத்தான் - பிரணவ சொரூபியாய் உள்ளவர். வேங்கடமாம் தேவமலையகத்தான் - திருவேங்கடம் என்னும் தெய்வீகம் வாய்ந்த மலையில் எழுந்தருளி இருப்பவர். வேங்கடகிரி முருகவேளுக்குரிய திருத்தளி என்பது கந்தபுராணம். (வழி

நடைப் படலம் செ - 6) இது பிற்காலத்தில் விஷ்ணுத் தலமாக மாற்றப்பட்டது. (அஉ)

பணியணைநன் மாதவராற் பாரெண் பொறியான்
மணிவளர்வை குந்தநேர் நல்லூர்—திணியசுர
வன்பர்க் கருள்வா னிசைபுலர வான்விபுத
வன்பர்க் கருள்வா னகம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் வைகுந்தத்துக்கும் சிலேடை (நல்லூருக்கு) பணி - தொண்டு. அணைதல் - அடைதல் - புரிதல். மாதவர் - பெரிய தவமுடையவர்கள். பார் - பூமி. எண்ணுதல் - மதித்தல். பொறி - பொருள் - செல்வம். (வைகுந்தத்துக்கு). பணி அணை - சற்பசயனத்தையுடைய. நல்மாதவர் - யாவராலும் விரும்பிப் போற்றப்படும் விஷ்ணுமூர்த்தி. பார் எண் பொறி - பூதேவியும் யாவராலும் நினைக்கப்படுகின்ற இலக்குமியும் ஆகிய சத்தியர் இருவர். மணிவளர் - நன்மைமிகுந்த. வைகுந்தம் விஷ்ணுவின் உலகம்.. திணி அசுரவன்பர் கருள்வான் நிசை புலர - வலிய அசுரக்கொடியவர் ஆகிய இருள்பொருந்திய பெரிய இரவு விடியும்படி. வான்விபுத அன்பர்க்கு அருள்வான் - விண்ணுலகத்துள்ள தேவர்களாகிய அடியார்களுக்கு ஞான ஒளியாகிய அருளைவழங்கிய ஞானசூரியனாகிய முருகக் கடவுள். ஏகதேசவுருவகம். (அங)

பாரிடத்தர் போற்றும் பதியகமாம் பண்பினாற்
றாரவரை போலுந் தனிநல்லை—யாரணம்சேர்
புள்ளூர்முத் தையனலப் பொற்பா னரிபரவும்
புள்ளூர்முத் தையன் புரம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் கயிலாயத்துக்கும் சிலேடை. (நல்லூருக்கு) பாரிடத்தர் - பூவுலகத்தவர்.

போற்றுதல் - துதித்தல். பதி அகம் ஆம் பண்பினால்-பதிப்பொருளாகிய சுப்பிரமணியப்பெருமான் தன்னிடத்து வீற்றிருக்கப் பெறும் தன்மையினால். (கைலாசத்துக்கு). பாரிடத்தர் போற்றும் பதியகம் ஆம் பண்பினால் - பூத கணங்கள் காக்கின்ற க்ஷேத்திரமாகி விளங்கும் தன்மையினால். பதியகம் - க்ஷேத்திரமாகிய இடம். தாரவரை - வெள்ளிமலை. ஆரணம் - வேதம். புள் - அன்னப்பறவை. ஊர்தல் - வாகனமாகக் கொள்ளுதல். மூத்தையல் - காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி என்னும் மூன்று பெண்களது. நலப்பொற்பான்-போகத்தாலாய பொலிவையுடைய பிரமன். சேர்தல், ஊர்தல் என்னும் வினைகள் பொற்பான் என்பதன் விகுதியோடு முடிந்தன. பொற்பானும் அரியும் பரவும் முத்தையன் என்க. அரி - விஷ்ணு. பரவுதல் துதித்தல். புள்ளூர் முத்தையன் - புள்ளிருக்கும் வேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்) என்னுந் தலத்தில் எழுந்தருளி யிருக்கின்ற முத்துக்குமாரசுவாமி. புள்ளூர் எனினும் ஆம். "செந்நெற் பழனப் புள்ளூரா" என்பது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ். (அச)

சீரரச கேசரிமுன் னாகுந் திறலாண்மைப்
பாரரசர் போற்றும் பதிநல்லை—காரிகையார்
தாராதா ரக்களத்தன் றந்தமட வார்புனையுந்
தாராதா ரக்களத்தன் சார்பு.

(கு—ரை): சீர் அரசகேசரி முன் ஆகும் திறல் ஆண்மை பாரரசர் போற்றும் பதிநல்லை - புகழால் மேம்பட்ட அரசகேசரி என்பவரைத் தங்கள் குலத்தவருள்ளே சிறந்தவராகக் கொண்ட மிக்க வலிமையினையுடைய ஆரிய சக்கரவர்த்திகள் பரிபாலனஞ் செய்த இடமாகிய நல்லூர். அரசகேசரி - பரராசசேகர மன்னன் மருகராகிய அரசிளங்குமரர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் தக்க புலமை வாய்ந்தவர். சமஸ்கிருத இரகுவம்மிச காவியத்தைத் தமிழிற் பெயர்த்துப் பாடிய புலவர் பெருந்தகை. இவர் முடிபுனைந்து அரசு புரிந்திலராயினும், அறிவு ஒழுக்கம் சைவசீலம் என்பனவற்றிற் சிறந்து யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் குலதிலகராய் விளங்கியவராதலால் நல்லூரை யாண்ட அத்தமிழமன்னர் "சீரரச கேசரி முன்னாகுந் திறலாண்மைப் பாரரசர்" எனப் போற்றப்பட்டனர். காரிகை - அழகு. தாராதாரக் களத்தன் தந்தமடவார் - மேகம் போன்ற கரிய நிறத்தையுடைய விஷ்ணுமூர்த்தி மக்களாகப் பெற்ற தெய்வயானையம்மையாரும் வள்ளிநாயகியும் ஆகிய பெண்கள். தாராதாரம் - மேகம். களம் - கரிய நிறம். புனையும் தார் ஆதாரக்களத்தன் - சூட்டிய மணமாலைக்கு இடமாகிய திருக்கண்டத்தை யுடையவர். களம் - கண்டம் - கழுத்து. சார்பு - இடம். (அரு)

படைமடத்தை நீங்கினார் கற்றார்பன் னூலுங்
கொடைமடத்தர் வாழ்வுகூர் நல்லூர் — விடமடைத்த
கந்தரத்தர் செம்மலருட் காங்கேயர் வேலுகந்த
கந்தரத்தர் செம்மல் களம்.

(கு—ரை): பல் நூலுங் கற்றார் படைமடத்தை நீங்கினார் - பல நூல்களையுங் கற்றவராய் அதனாலாய அறிவால் தாம் இயல்பாகக் கொண்ட அறியாமையை நீங்கினவர். கற்றார் வினையெச்ச முற்று. படைத்தல் - உடையதாதல்; இயற்கையாகக் கொள்ளுதல். கொடை மடத்தர் - வரைவின்றி யாவர்க்கும் வழங்குதலில் பிடிவாதமுடையவர். மடம் - கொண்டது விடாமை. "கொடை மடம் பிடித்தான்" என்பது இரகுவம்மிசம். விடம் அடைத்த கந்தரத்தர் செம்மல்-நஞ்சை அணிந்த கண்டத்தையுடைய சிவனது குமாரர். அடைத்தல் - அடச்குதல் - அணிதல். அருள்

காங்கேயர் - அருள்வடிவாகிய கங்கையின் புத்திரர். அருளமுதமே சிவகங்கை யாதலால் "அருட்காங்கேயர்" எனப்பட்டது. வேல் உகந்த கந்தர் - வேற்படையை விரும்பித் தரித்த கந்தர் என்னுந் திருநாமமுடையவர். அத்தர் - சீவர்களுக்குப் பிதாவாயுள்ளவர். செம்மல் - பெருமையிற் சிறந்தவர். களம் - இடம். (அசு)

ஐயமினார் சிற்றிடையே யன்றி யெவரிடத்து
மையமெனார் வாழு மணிநல்லை—பையரவை
வாட்டுமொக ரத்தன் மகரவரை மாத்திரைசேர்
நீட்டுமொக ரத்த னிலம்.

(கு—ரை): மின்னார் சிற்றிடையையே ஐயம் என்னும் சொல்லால் கூறுபவரேயன்றி வேறு எவரிடத்தும் ஐயம் என்னும் சொல்லைக் கூறுபவர் இல்லை என்பது ஒழித்துக் காட்டணி. மின்னார் - பெண்கள். மினார் என நின்றது விகாரம். ஐயம் - உண்டோ இல்லையோ என்னும் சந்தேகம். ஐயம் - பிச்சை. ஐயம் வேண்டும் என இரப்பவர் நல்லூரில் இல்லை என்பது. பை அரவை வாட்டும் ஒகரத்தான் - படம் பொருந்திய பாம்பைக் கொல்லுகின்ற மயிலை வாகனமாக உடையவர். ஒகரம் - மயில். அரைமாத்திரை மகரஞ்சேர்- அரை மாத்திரையுடைய மகர மெய் (ம்) சேர்ந்த. நீட்டும் ஒகரம் - ஓகாரம். ஓம் என்னும் பிரணவப் பொருளாய் உள்ளவர் என்பது. (அஎ)

பொங்காழி மாலெதிரப் பூங்குழலார் பொன்னுடனே
சங்காழி தாங்குந் தனிநல்லை — வெங்காளி
நாடகமு னாடினார் நந்தர்மா தைப்புனமே
னாடகமு னாடினார் நாடு.

(கு—ரை): இரண்டாமடி திருமாலுக்கும் பெண்களுக்கும் சிலேடை. பூங்குழலார் மால் எதிர பொன்னுடன் சங்கு ஆழி தாங்கும் என இயையும். பூங்குழலார்-பூக்களை யணிந்த கூந்தலையுடைய பெண்கள். பொங்கு ஆழி மால் எதிர- அலையெழுகின்ற பாற்கடலில் துயில்கொள்ளும் விஷ்ணு மூர்த்திபோல. எதிர என்பது உவம உருபு. மால்-திருமால் - விஷ்ணு (விஷ்ணுவுக்கு) பொன் தாங்கல்-இலக்குமியை மார்பிற் கொண்டிருத்தல். சங்குஆழி தாங்கல் - திருக்கரத்திற் சங்கையுஞ் சக்கரத்தையும் தரித்தல். (பெண்களுக்கு) பொன் - பொன்னாலாகிய ஆபரணம். சங்கு - சங்குவளையல். ஆழி - மோதிரம். வெங்காளி முன் நாடகம் ஆடினார் நந்தர் - கொடிய காளிக்கு எதிரே நின்று நடனஞ் செய்து அவளைத் தோல்வியடையச் செய்தவராகிய சிவபெருமானுக்குப் புதல்வர். மாதைப் புனமேல் நாட முன் அகம்நாடினார் - வள்ளி நாயகியைத் தினைப்புனத்தில் தேடியடைதற் பொருட்டு முதலிற் களவொழுக்க முறையை விரும்பிக் கைக்கொண்டவர். நாட என்பதன் ஈற்றில் அகரந் தொக்கது. நாடுதல் - விரும்புதல். அகம் - களவொழுக்கம். நாடு - இடம். (அஅ)

வாரிசமி னன்னார் நகைநிலவான் மைந்தருள
வாரிசங்கள் விள்ளு மணிநல்லை — யூர்க
வனப்புரு வைப்பரித்தார் செச்சையர் மாவேட
வனப்புரு வைப்பரித்தார் வாழ்வு.

(கு—ரை): வாரிசமின் - தாமரை ஆசனத்தியாகிய இலக்குமி. மினன்னார் என்றது விகாரம். நகை நிலவு - முறுவலாகிய சந்திரிகை. உளவாரிசம் - உள்ளமாகிய குமுதம். வாரிசம் - நீரில்தோன்றுவது. ஊர் கவன புருவை பரிசெச்சைத்தாரர் - விரைந்துசெல்லும் வேகத்தினையுடைய ஆட்டுக்கடாவாகிய வாகனத்தையும் வெட்சி மாலையையும் உடையவர். புருவை - ஆடு. பரி - வாகனம். செச்சைத் தாரர் எனப் பிரித்துக் கூட்டுக. மாவனப்பு வேட உருவைப் பரித்தார் - (வள்ளிநாயகியாரை ஆட்கொள்ளுதற் பொருட்

டுத் தீவகம் போலமைந்த) மிக்க அழகுவாய்ந்த வேட்டுவ வடிவத்தைக் கொண்டவர். பரித்தல் - தாங்குதல் - கொள்ளுதல். (அகூ)

சாலகத்தார் மந்தாரஞ் சாலகத்தார் மெல்லியர்க்குச்
சாலகத்தா னல்குந் தனிநல்லை — மேலரண்மே
லுந்துஞ் சரவணத்தா னும்பருய மகவாய்
நந்துஞ் சரவணத்தா னூடு.

(கு—ரை): மந்தாரம் சாலகத்தார் சால் அகத்து ஆர் மெல்லியர்க்கு சாலகத்தால் நல்கும் என இயையும். மந்தாரம் - தேவருலகத்துள்ள மந்தார விருட்சம். சாலகம்தார் - பூவரும்புகளாலாய மாலையை. சால் அகத்து ஆர் மெல்லியர்க்கு - நிறையைத் தம்மகத்துக் கொண்ட மகளிர்க்கு. மெல்இயர் - மென்மைத் தன்மையுடைய பெண்கள். சாலகத்தால் நல்கும் - மேல்மாடங்களிலுள்ள பலகணிகள் வாயிலாகக் கொடுக்கின்ற. தனி - ஒப்பற்ற. நல்லூரிலுள்ள மாடங்கள் தேவருலகு அளவாக உயர்ந்துள்ளன என்பது கருத்து. உயர்வு நவிற்சியணி. மேல் அரண்மேல் - அசுரரது உயர்ந்த கோட்டைகளின்மேல். உந்தும்சரவணத்தான் - செலுத்தும் அம்பு வகையை உடையவர். வண்ணம்-வணம் என நின்றது விகாரம். உம்பர் உயமகவாய் நந்தும் சரவணத்தான் - தேவர்களுய்யும்படி குழந்தையாகி வளர்தற்கிடமாகிய சரவண வாவியை உடையவர். நந்துதல் - வளர்தல்; ஆக்கம் அடைதல். (கூ0)

கட்டேற லாரறுகால் காவியுடன் கன்னியர்தங்
கட்டேற லாவயல்சூழ் காநல்லை — கட்கமொளி
வட்டங் கழுக்கடையார் நாயகவை வேலர்பொய்
யுட்டங் கழுக்கடையா ரூர்.

(கு—ரை): கள் தேறல் ஆர் அறுகால் - தேனுகிய கள்ளையுண்ட வண்டுகள். காவியுடன் கன்னியர் தம் கண்தேறலாவயல்சூழ் காநல்லை - கருங்குவளை மலர்களையும் இளம் பெண்களது கண்களையும் பிரித்தறிய முடியாது மயங்குதற்கிடமாகிய வயல்களைச் சூழ்ந்த சோலைகளையுடைய நல்லூர். கட்கம் ஒளிவட்டம் கழுக்கடையார் - வாள், சக்கரம், சூலம் என்னும் இவற்றை உடையவர். நாயக வை வேலர் - தலைமையமைந்த கூரிய வேற்படையை உடையவர். பொய்தங்கு அழுக்கு உள் அடையார் - பொய்ம்மை தங்கப்பெற்றஅழுக்கு மனத்தை யடையாதவர். உள் - உள்ளம் - மனம். (கூக)

முத்திபதங் தங்களினேர் மூரலம்மத் தார்மயறீர்
முத்திபதந் தந்தருண்முத் தையனிட — முத்தம்
பலவலஞ்சூ ழில்லார் பவனம் பழனம்
பலவலஞ்சூழ் நல்லைப்பதி.

(கு—ரை): நல்லைப்பதி முத்தையனிடம் என இயையும். பலவு அலம் சூழ் முத்தம் ஆர் இல் - பலாமரங்கள் அழகாகச் சூழ்ந்திருக்கின்ற முற்றங்களையுடை வீடுகளும். அலம் - அழகு. பவனம் - அரண்மனைகளும். பல்பழனம் - பல வயல்களும். வலம்சூழ் - இடந்தோறுஞ் சூழ்ந்திருக்கின்ற. வலம் - இடம். முற்றம் முத்தம் என நின்றது. முத்து இப தந்தங்கள் நேர் மூரல் அம்மத்தார் மயல்தீர் முத்திபதம் - முத்தையும் யானைத்தந்தங்களையும் முறையே உவமையாகக்கொள்ளுகின்ற பற்களையும் தனங்களையுமுடைய பெண்களால் நேரும் அசுத்த காமமாகிய மையல் தீர்தலால் உளதாகும் முத்திநிலை. தந்தங்களின் இன் சாரியை. அம்மம் - தனம். முத்தையன் - முத்துக்குமாரசுவாமி.

வில்லிரவி மேலோங்கும் பொன்காப்பு வெண்காப்பால்
வில்லிரவி போலும் வியனல்லை — நல்லிரவிற்

கானவரை யுற்று ரெனக்கவர்ந்த கன்னியுடன்
கானவரை யுற்றூர் களம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் மேருமலைக்கும் சிலேடை. வில்இரவிமேல் ஓங்கும் பொன்காப்பு வெண்காப்பால் - ஒளி சூரிய மண்டலமளவுக்கு உயர்ந்திருக்கின்ற பொன்மதில் வெள்ளிமதில்களால், வில்இரவிபோலும் வியன் நல்லை - வில்லாக வளைந்த மேருமலை போலும் சிறப்பினையுடைய நல்லூர். இரவி-மலை. பொன்மதிலாலும் வெள்ளிமதிலாலுஞ் சூழப்பட்டிருக்கும் நல்லூர் சூரிய சந்திரர்களால் வலமாகச் சூழ்ந்து செல்லப்படும் மேருமலையை ஒத்திருக்கின்றதென்பது கருத்து. பொன்மயமான மதில் சூரியன் வலம் வருதற்கும், வெள்ளிமயமான மதில் சந்திரன் வலம்வருதற்கும் உவமை ஆகும். கல்இரவு - அர்த்தயாமம். "யாமப்பெரும் பொழுது" என்பது கந்தபுராணம். கல்விரவிற் கவர்ந்த கன்னியுடன் கானவரை உற்றூர் என இயையும். கவர்தல் - களவிற் பெறுதல். கானவரை உற்றூர என - கானவரைத்தமது மாமன் முதலிய உறவினராகக் கொண்டு. கானவரையுற்றூர் - குறிஞ்சிநிலத்து மலையில் வீற்றிருந்தருளியவர். (கூரு)

அகங்கார ரங் கோவாதி சீர்நிலையா னென்னு
மகங்காரந் தீர்த்தருளு மையன் — குகன்கோயில்
பூவுலகுங் கீழ்மேல் பொருந்துலகு நாலிரண்டா
மாவுலகும் வாழ்த்தியநல் லூர்.

(கு—ரை): அகம் - வீடு. காரம் - பொன். கோ - பூமி. ஆதிசீர் நிலை - முதலியவற்றை உடைமையால் உளதாகும் பொய்ம்மையாகிய புகழ்நிலை. சிறந்த வாழ்க்கையுமாம். இவை எனது என்னும் மமகாரத்தைக் குறிப்பன. யான் என்னும் அகங்காரம் - நான் என்னும் ஆணவம். ஐயனாகிய குகன். குகன் இரகசியப் பொருளாய் இருப்பவன். கீழ்மேல் பொ

ருந்து உலகு - பாதலமும் சுவர்க்கமும் ஆகிய உலகங்கள். நாலிரண்டாம் மா உலகு - எட்டாகிய பெரிய திக்குக்கள். உலகு - திக்கு. (சூடாமணிநிகண்டு) (கூச)

அன்ப ரகத்தனையு மாயர் சிறாரினையு
நன்களையு முத்தங் கொளுநல்லூர் — பொன்குலவு
வத்திரங்க ளைந்தான் மகனசுரர் கொண்டவிப
வத்திரங்க ளைந்தான் வலம்.

(கு—ரை): மும்மொழிச் சிலேடை. அன்பர் அகத்தனை முத்தங் கொள்ளும்-அடியார்களது (கடவுளிடத்தே வைக்கப்பட்ட) மன அன்பு வீடுபேற்றை யடைதற்குரிய. முத்தம் - முத்தி-வீடுபேறு. ஆயர் சிறார் உனை முத்தங் கொள்ளும்-தாய்மார் தமது குழவிகளிடத்து முத்தமிடுதலை யடைகின்ற. நல்களை முத்தங் கொள்ளும்-விரும்பப்படும் மூங்கில்கள் முத்துக்களை யுடையனவாயிருக்கின்ற. முத்தம் - முத்து. அம் சாரியை. கழை களை சந்தம் நோக்கிய ழகர ளகர ஒற்றுமை. கொளும் என்பது விகாரம். பொன் குலவு வத்திரங்கள் ஐந்தான்மகன்-பொன்னிறம் விளங்குகின்ற ஐந்து திருமுகங்களையுடையவராகிய சிவபெருமானுக்கு (சதாசிவமூர்த்தி)ப் புதல்வர். "ஐந்துமுகத்தோடதோ முகமுந் தந்து, திருமுகங்களாறாகி.........திருவுருவாய்" என்பது கந்தர் கலிவெண்பா. அசுரர் கொண்ட விபவத்திரம் களைந்தான் - சூரன் முதலிய அசுரர் அடைந்த செல்வநிலைபேற்றை நீக்கியவர். திரவிபவம்-நிலையான செல்வம் எனினுமாம். ஸ்திரம் - திரம். (கூரு)

பாரியரி சந்தனங்கொள் பண்பினரா லேற்பவரும்
பாரியரி சந்தனங்கொ ணல்லூரே — பாரி
வருஞ்சயந்த னத்தான் மகன்றருவி னீழல்
வருஞ்சயந்த னத்தான் வழி.

(கு—ரை): பாரி அரி சந்தனங்கொள் பண்பினரால் - பாரி என்னும் வள்ளலையும் பஞ்சதருக்களுள் ஒன்றாகிய அரி சந்தனத்தையும் ஒத்த வண்மையை உடையவரால். ஏற்பவர் - யாசகர். பாரி - பூமி. விலையுயர்ந்த வஸ்திரமுமாம். அரி - பொன். சந்தனம் - தேர். சயந்தனம் சந்தனம் என்பன தற்பவம். சந்தனக் குழம்பு எனினுமாம் இவரும் பார் சயந்தனத்தான் மகன் - ஊர்ந்து சென்ற பூமியாகிய தேரை யுடைய சிவபிரானது குமாரர். தருவின் நீழல் வரும் - கற்பகதருவின் நிழலையுடைய பொன்னுலகத்தில் தோற்றிய. சயந்தன் அத்தான் - இந்திர குமாரனாகிய சயந்தனுக்கு மைத்துனர். (கசு)

சலமிலர்கோள் வஞ்சங் கரவு தவிர்ந்தார்
நலமியல்பார் வாழ்வுகூர் நல்லூர்—பொலிபு
மிருவாலை பாகனைய தோளினிய சொல்லா
ரிருவாலை பாக னிடம்.

(கு—ரை): சலம் - கோபம். கோள் - புறங்கூறல். நலம் இயல் பார் - நன்மையை இயல்பாக உடையவர். கூர்தல் - மிகுதல். இரு ஆலை பாகு அனைய தோள் இனிய சொல்லார் இருவாலை பாகன் - பெரிய மூங்கிலையும் வெல்லப் பாகையும் முறையே ஒத்த தோள்களையும் இனியசொற்களையு முடைய பெண்கள் இருவரையும் பாகங்களில் உடையவர். ஆலை - கரும்பு. இங்கே மூங்கிலை உணர்த்தி நின்றது. மூங்கில் போன்ற ஒருவகைக் கரும்பும் உளதாதல் பற்றி ஆலை மூங்கில் எனப்பட்டது. "வேழக் கரும்பினொடு மென் கரும்பு" என்பது பெரியபுராணம். (எனாதி நாயனார் புராணம்) வேழக் கரும்பு - மூங்கிற் கரும்பு. இருவாலை யென்பது தொனியால் நூலாசிரியர் சென்ன ஊரையுங் குறித்து நின்றது. (கஎ)

2507.

இவ்வூர் இருவாலை எனவும் இருபாலை எனவும் வழங்குகின்றது. (கஎ)

சீரியபொன் மின்னுகந்த மாதனமுள் ளார்செறிவா
னேருந் திருச்செந்தூர் நீணல்லை—பூருக்
கனவிலஞ்சே லென்றாருங் கட்சுந் தரிசேய்
கனவிலஞ்சே லென்றார் களம்.

(கு—ரை): முதலடி நல்லூருக்கும் திருச்செந்தூருக்கும் சிலேடை. (நல்லூருக்கு) சீரிய பொன்மின் உகந்த மாதனம் உள்ளார் செறிவால் - சிறப்பினை யுடைய இலக்குமியாகிய பெண்ணால் விரும்பி அளிக்கப்பட்ட பெரிய செல்வத்தை உடையவரது மிகுதியால். செல்வர் மிகப்பலர் இருத்தலால் என்பது. (திருச்செந்தூருக்கு) சிறந்த பொன் விளங்குகின்ற கந்தமாதன மலை உள்ளே பொருந்திய நிறைவினால். திருச்செந்தூர் சுப்பிரமணியத் தலங்களுள் ஒன்று. பூரு கன வில் அம்சேல் என்று ஆரும் கண் சுந்தரி சேய் கனவில் அஞ்சேல் என்றார்-புருவமாகிய வில்லையும் அழகிய கயல்மீன் போல விளங்குகின்ற கண்களையுமுடைய இந்திராணிக்கு மகனாகிய சயந்தன் கனவில் தோற்றி அஞ்சற்க என்று அபயாஸ்தம் அளித்தவர். அசுரராற் சிறையில் வைக்கப்பட்டு வருந்திப் புலம்பிய சயந்தன் கனவில் முருகக்கடவுள் தோற்றி அபயாஸ்த மளித்தனரென்பது கந்தபுராணம். (சயந்தன் கனவுகாண்படலம் - செ - 12.) (கஅ)

தவருந் தனிமா தவரும் பதுமத்
தவருந் தவமகிழு நல்லூர்—தவருஞ்
சலதரமு மாகநின்றார் தன்மையர்வை வேலார்
சலதரமு மாகநின்றார் சார்பு.

(கு—ரை): தவர்-தவம்புரிவோர். தனிமாதவர்-ஒப்பற்ற விஷ்ணுமூர்த்தி (மா-இலக்குமிக்கு. தவர் - கணவர்.) பதுமத்

தவர்-தாமரை ஆசனத்தராகிய பிரமதேவர். பதுமம்-தாமரை. பதுமத்தவர் என்றதனுல் இலக்குமி சரஸ்வதி என்பவரும் கொள்ளப்படலாம். தவரும் சலதாமும் ஆக நின்று ஆர் தன்மையர் - மலைகளும் கடல்களும் தமது வடிவுள் அடங்கும் படி விசுவரூபங்கொண்டு வியாபித்த தன்மையையுடையவர். "உள்ளடி வரைகள் யாவும் ஒண்புற வடியில் ரித்தம்" என்பது கந்தபுராணம். (சூரபன்மன் வதை: செ. 423.) வைவேலார் - கூரிய வேற் படையை உடையவர். சலதாமும் ஆக நின்ருர் - அருண்மேகமாகவும் நின்றவர். "அரும் பெறன் மேகன் வாழ்க" என்பது திருவாசகம். சலதாம் - மேகம். (௬௬)

தன்மங் கலமெனக்கொள் சால்பினர்மெய்ச் செல்வர்
நன்மங் கலஞ்சிறந்த நல்லூரே—பொன்மலியுஞ் [சேர்
தாம மதலையார் தன்னடியா ருய்யவருள்
சேம மதலையார் சேர்வு.

(கு—ரை): தன்மம் - தருமம் - அறம். கலம் - அணிகலம் - ஆபரணம். சால்பு - பெருமை. சால்பினராகிய செல்வர். அறத்தாற்ருன் ஈட்டி அறத்தாற்றில் செலவு செய்யும் வாய்மையான செல்வமுடையவர் சேர்தலால் மங்கலசுமான ஊராகி விளங்குகின்றது நல்லூர் என்பது. பொன்மலியும் - பொன்நிறம் போலும் நிறம் விளங்குகின்ற. தாம மதலையார் தன்னடியார் உய்யவருள் சேம மதலையார் சேர்வு - கொன்றைமாலையை அணிந்த சிவபெருமான் தமது அடியவர் வீடுபேறடைந்து உய்யும் வண்ணம் பெற்றருளிய இரட்சிப்புக்குரிய குமாராகிய முருகக் கடவுளது இடம். மதலை - கொன்றை; மகன். சிவனுடைய அடியார் உய்யும் வண்ணம் தாங்கி அருள் புரியும் சேமமாகிய தூண் போன்றவர் எனினும் ஆம். தன் - சாரியை. சேமம் - இரட்சிப்பு - சேமநிதி. மதலை - தூண். தாமமதலையார்

2507

என்பதனை மதலைத் தாமர் என மாற்றிப் பொருளுரைக்க. தாம மதலை - மாலைபோல மலரும் கொன்றை எனினும் ஆம்.

கடை.

சைவம் பொலிக தமிழ்தழைக தாரரசர்
செவ்வியகோ லுய்கவளர் சீர்நல்லை —மெய்ம்முனிவர்
நன்கவியுங் கானவரே னற்சருவும் கொள்வானென்
புன்கவியுங் கொள்வான் புரம்.

(கு—ரை): பொலிதல் - மேம்படுதல். தார் - மாலை. செவ்வியகோல் - செங்கோல். வளர்சீர் நல்லை - மேம்படும் புகழினையுடைய நல்லூர். சீர் - செல்வமுமாம். வளர்சீர் நல்லை என்றதனுல் நல்லூருக்கும் வாழ்த்துக் கூறியபடியாம்: நன்குஅவி - தூய அவி. நன்மையைத் தருகின்ற அவியுமாம். அவி - யாகாக்கினி வாயிலாக முனிவராற் கொடுக்கப்படும் நெய் முதலியன. கானவர் ஏனல்சரு - வேடுவர் நிவேதிக்கும் தினைமாவாகிய உணவு. ஏனல் - தினை. சரு - உணவு. என்புன்கவி - சீவத்துவமுடைய சிறியேனுகிய எனது அற்பமான கவியாலாய இந்நூல். மாதவர் கொடுக்கும் தூய அவியுணவோடு வேடுவர் நிவேதிக்கும் தினைமாவையும் உவந்துகொண்டருளும் முருகக் கடவுள், தத்துவப் பெரியார் பாடல்களோடு சிற்றறிவினனுகிய எனது புன்கவியையும் உவந்துகொண்டருளும் உரிமை யுடையர் எனக் கூறியபடியும், அன்னவர் புரமாகிய நல்லையில் சைவம் பொலிக தமிழ் தழைக அரசர் செவ்வியகோல் உய்க என ஈற்றில் வாழ்த்துக் கூறியபடியும் ஆம்.

நல்லைவெண்பா

குறிப்புரை முற்றிற்று.

— சுபம் —

யாழ்ப்பாணம்
செந்தமிழ்ப் பதிப்பக வெளியீடுகள்.

* யாப்பிலக்கணம் (விசாகப் பெருமாளையர்) ச.
சிறந்த விளக்கத்துடன் — 30

* அணியிலக்கணம் (விசாகப் பெருமாளையர்)
குறிப்புக்களுடன் — 30

* நல்லை வெண்பா (சேனாதிராய முதலியார்)
விளக்கக் குறிப்புரையுடன் — 50

பாட்டியல் (அச்சில்)

கிடைக்குமிடம்:

யாழ்ப்பாணச் செந்தமிழ்ப் பதிப்பகம்,
புலோலி — தெற்கு,
பருத்தித்துறை.

1. சண்முகநாதன் புஸ்தகசாலை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

2. பஸ்தியாம்பிள்ளை புஸ்தகசாலை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

3. சுப்பிரமணிய புத்தகசாலை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

4. வட இலங்கைப் புத்தகசாலை,
கடைத்தெரு, பருத்தித்துறை.

5. விவேகானந்த புத்தகசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு.

* பிரவேசவகுப்புப் பாடபுத்தகங்கள்.

Saiva Prakasa Press, Jaffna.